Registered as a Newspaper in Srilanka

தமிழின் முதல்தர
வாரஇதழ்

# தீபம்

www.deepam.lk

விலை 30 ரூபா • தீபம் 50 • 03.07.2016






என்னதான் நடக்கிறது வவுனியாவில்?

# "பரபர" பற்றரி தொழிற்சாலை








சுவாதியைக் கொன்றது யார் ? **4**



வீழ்ந்து வரும் வட மாகாண கல்வி **8**



நீரின்றி அமைந்த ஊர் **15**

**www.facebook.com/mano.ganesan**
எங்கள் அமைச்சரவையில் ஓய்வு பெற வேண்டிய வயதில் ஒரு பெரும்பான்மை இன அமைச்சர் இருக்கிறார். இன்று அமைச்சரவை கூட்டத்திற்கு முன் அவருடன் எனக்கு சிறு வாய் தர்க்கம் ஏற்பட்டது. "செய்யவும் மாட்டீர்கள். செய்ய விடவும் மாட்டீர்கள். என்னையா இதன் அர்த்தம்? பெப்ரவரி மாதமே நடந்திருக்க வேண்டிய நல்ல விஷயத்தை அநியாயமாக குழப்பினீர்களே. நல்லெண்ணம் கருதி நான் மிகவும் பொறுமையாக இருக்கின்றேன். ஆனால், என் பொறுமைக்கும் ஒரு எல்லை உண்டு" என்று அவரிடம் நான் சொன்னேன். அவர் அதற்கு என்னிடம் சொன்ன பதிலை கேட்டால் நமது தமிழ் இனத்தை எண்ணி எனக்கு கவலையும், சிரிப்பும் ஒருசேர வருகிறது.

**www.facebook.com/mjmsharthaar**
எனக்கு ஒரு டவுட்டு
வரி சிங்கள பௌத்த மக்களுக்கு மட்டும் விதிக்கப்பட்ட ஒரு வரியா???
இல்லை எனில் ஏன் தமிழ் பேசும் மக்கள் அதை எதிர்த்து இன்னும் போராட்டம் நடத்தவில்லை???

**www.facebook.com/thanushanthanv**
உலகத்தில் உள்ள தீவிரவாதிகள் அல்லாஹூ அக்பர் எண்டு கத்தி கொண்டு கழுத்த கட் பண்ணும் போது பொத்திற்று இருந்தவன் எல்லாம், அந்த அக்கா அஸ்ஸலாமு அலைக்கும் எண்டத கட் பண்ணணும் எண்டு சொன்னத தூக்கி பிடிக்கிறது தான் காமெடி

**www.facebook.com/kiriyogainuvil**
பொதுவாக சிங்களப்பாட்டுகளைக்கேட்கும்போது அடடா இது அந்த தமிழ்ப்பாட்டாச்சே அதையும் ஆட்டையைப்போட்டுட்டாளேன்னு ஒரு பீல் வரும் சரி விடு நம்மாளுக எல்லாம் ஆட்டையைப்போடலையான்னு விட்டுடலாம்னா
black and white சிங்களபடம் போய்க்கிட்டிருந்திச்சு அதில ஒரு பாட்டு போச்சுது ஆனா எம் ஜி ஆர்ன்ர பட பாட்டு பட் சிங்களத்தில ஏலே ஆண்டியப்பா ஆ காலத்திலேவா

**www.facebook.com/mynthan**
சன அடர்த்தி மிகுந்த கொழும்பின் தெஹிவல, வெள்ளவத்தை, பம்பலபிட்டி,மருதானை, கொட்டாஞ்சேனை பகுதிகளில் வீதியை கடக்கும் மக்களில் கணிசமானோர்(75%) பாதசாரி கடவையில் சிவப்பு ஒளிர்கையில் பாதையை கடக்கின்றனர்.மிகுதியினர் கையில் போனை நோண்டியபடி கடக்கின்றனர்.நடைமுறைக்கு சாத்தியமில்லாத நகரத்திட்டமிடலை அரசும் கைவிடப்போவதில்லை.மக்களும் திருந்தப்போவதில்லை..!





தீபத்தின் சமூக வலைத்தளங்களில் கடந்த வாரம் வைரலாகியது இந்த செய்தி. அடம் லின்டின் ஜங்க்விஸ்ட் என்ற இந்தவீரர் உள்ளூர்போட்டியில் ஆடிக் கொண்டிருந்தபோது டர்புர் என வாயு வெளியேறியுள்ளது. அதுவும் நடுவர் அருகில் செல்லும்போது அடிக்கடி வெளியேறியுள்ளது. தன்னை கடுப்பேற்றுகிறார் என நினைத்த நடுவர் சிலமுறை எச்சரித்து, இறுதியில் சிவப்பு அட்டை காண்பித்துவிட்டார். வாயு வெளியேறுவது கூடவா பாஸ் குற்றம் என அலறுகிறார் அந்த வீரர்.



தமிழக முதல்வரை கண்டதும் உணர்ச்சவசப்படும் பெண் தொண்டர் ஒருவர்



**www.facebook.com/chiyanshakthi.shakthi**
எனக்கு தராம என்னத்தடா சாப்புடுர..
வாய திறந்து ஆ.....காட்டுடா.... நாயே...





**www.facebook.com/baranitharan.barani**

# க்ளிக் பக்கம்


யாழ்மாவட்டத்தில் உள்ள நாவாந்துறைப் பிரதேசம் கடற்கரைப் பிரதேசமாகும். இந்தப் பிரதேசத்தில் உள்ள வாசிகசாலை.

**என்னைப் பற்றி**
நான் பிஸ்னஸ் தொழிலில் ஈடுபட்டு வருபவன். புகைப்படம் எடுப்பது எனது பொழுது போக்கு. 20 வருடங்களாக புகைப்படம் எடுத்து வருகிறேன்.



**படம்:**
**ராஜன்**

**இடம்:**
**யாழ். நாவாந்துறை வாசிகசாலை**



குறிப்பு: உங்கள் படங்களையும் அனுப்பி வையுங்கள் editor@deepam.lk




# கிழக்கில் "சந்திரமுகி" வீடு

**என்.ஹரன்**

சந்திரமுகி திரைப்படத்தில் காட்டப்படும் மர்ம மாளிகை போன்ற ஒருபரபரப்பை கிளப்பியுள்ளது கிழக்கின் அம்பாறை மாவட்டத்தில் அமைந்த வீடொன்று. வட்டவடிவமாக அமைக்கப்பட்ட வித்தியாசமான வீடொன்றில் வெளியுலக தொடர்புகளின்றி வாழ்ந்த பொறியியலாளர் ஒருவர் அங்கிருந்து சடலமாக மீட்கப்பட்ட பின்னர் அந்த வீடு பற்றிய செய்திகளே பரபரப்பை கிளப்பின.

பத்து வருடங்களிற்கு மேலாக வெளியுலக தொடர்புகளின்றி காரைதீவிலிருந்த இந்த பரபரப்பு மாளிகையில் அஞ்ஞானவாசம்புரிந்த பொறியியலாளர் செல்லத்துரை நடேசானந்தம் என்பவரே உயிரிழந்துள்ளார். எப்பொழுதும் தியானத்தில் இருக்கும் இவரைப்பற்றி ஊரில் பரபரப்பாக பேசிக்கொள்கிறார்கள். ஆழ்ந்த தியானத்தில் இருந்து முக்தியடைந்தார், பத்துவருடமாக வெளியுலக தொடர்பின்றியிருக்க அதிசய சக்தி தேவை என பேசும் எல்லோருமே பூடகமாகத்தான் பேசுகிறார்கள்.

செல்லத்துரை நடேசானந்தம் என்ற இயற்பெயரை கொண்டவர் தவயோகி பவளன் என்றுதான் ஊரில் அழைக்கப்பட்டார். பேராதனை பல்கலைகழகத்தின் பொ்றியில்பீடத்தில் பயின்ற இவர், பின்பு சீறா நிறுவனத்திலும் பணியாற்றியிருந்தார்.

திருமணம் செய்யாமல் தனிமையில் வாழ்ந்து வந்த இவர் நீண்டகாலத்திற்கு முன்னரே காயத்திரி மந்திரத்தில் பற்றுக்கொண்டுள்ளார். நாளடைவில் தியானத்தில் முற்றாக தன்னை ஈடுபடுத்த ஆரம்பித்துவிட்டார். தனது சகோதரியுடன் வாழ்ந்த காலத்தில் வெளிச்சமில்லாத அறைக்குள் தனிமையில் நிர்வாண தியானத்தில் நாள்கணக்கில் இருப்பாராம். சில சமயங்களில் ஒரு மெழுகுவர்த்தி மட்டும் எரியுமாம்.

பவளன் என்று அழைக்கப்பட்டவர் தொடர் தியானத்தில் ஈடுபட தொடங்கிய பின்னர் தவயோகி பவளன் என மற்றவர்களால் அழைக்க ஆரம்பித்துள்ளனர். சுனாமி வந்த சமயத்தில் அதை எதிர்வுகூறியிருந்தார் என அவரது சில நண்பர்கள் சொல்கிறார்கள். சுனாமியினால் அம்பாறை மாவட்டம் மோசமாக பாதிக்கப்பட்டிருந்தது. பாதிக்கப்பட்டவர்களிற்கு பெரும் உதவியாக பவளன் இருந்துள்ளார்.

இதன் பின்னர்தான் பரபரப்பாக பேசப்படும் கிணற்றுவடிவ வீட்டை கட்டியுள்ளார். காரைதீவு பொதுநூலகத்திற்கு அருகில் இந்த வீடு அமைந்துள்ளது. ஒரு வட்டவடிவ அறை. அதனை சுற்றி வட்டவடிவமான இரண்டு சுவர்கள். உள்ளே சகல வசதிகளும் ஏற்படுத்தப்பட்டிருந்தன. குளிரூடவும்பட்டிருக்கிறது.

இந்த வடிவத்தில் எதற்காக வீட்டை கட்டினார் என்பதுதான் பலருக்கும் புரியாதபுதிர். சுனாமி போன்ற இயற்கை அனர்த்தங்களிலிருந்து தப்பிக்க அமைத்தாரா அல்லது வேறேதும் பக்திபூர்வ காரணங்கள் உள்ளதா என்பது புரியவில்லை. அந்த மூன்றடுக்கு வீட்டில் பவளன் தனியாகத்தான் வாழ்ந்து வந்திருக்கிறார். வெளியார் யாரும் செல்வதில்லை. மிக நெருக்கமான உறவினர்கள் இருவர் ஆரம்பத்தில் சென்று வந்திருக்கிறார்கள். உணவு, மருந்துப் பொருட்களுடன் செல்பவர்கள் குறிப்பிட்ட ஒரு இடத்தில் அவற்றை வைத்துவிட்டு வந்துவிடுவார்களாம். அவர்களும் உள்அறைக்குள் இருக்கும் பவளனை சந்திப்பதில்லை.

தினமும் உணவு கொண்டு செல்வது தனது தியானத்தை பாதிக்கிறது, தினமும் உணவு உட்கொள்வதில்லை என நாளாந்தம் உணவு கொண்டுவருவதையும் நிறுத்தியுள்ளார். சமையலிற்கு தேவையானவற்றை குறிப்பிட்ட நாளிற்கு ஒருமுறை கொண்டு சென்று கொடுத்துள்ளனர். அவர் எப்போது சாப்பிடுகிறார், எப்படி சாப்பிடுகிறார் என்பது யாருக்குமே புரியாதபுதிர். மூடப்பட்ட மூன்றடுக்கு வீட்டிற்குள் அவர் என்ன செய்கிறார் என்ற சந்தேகம் அங்கு நிலைகொண்டுள்ள விசேடஅதிரடிப்படையினருக்கும் ஏற்பட்டது. ஒருமுறை அதிரடி நடவடிக்கை மேற்கொண்டு, வீட்டு ஓட்டை பிரித்து உள்ளே நுழைந்து சோதனை செய்துள்ளனர்.

இவர் மூடிய வீட்டுக்குள் வெளியுலக தொடர்புகளின்றி தனித்து வாழ்ந்து வந்தது பற்றி தெரிந்தவர்கள் சிலர் அவருடன் பேசியுள்ளனர். சூரிய ஒளியை பார்க்க தன்னால் இனி முடியாதென அவர் கூறியதாகவும் கூறுகிறார்கள். காயத்ரி மந்திரத்தில் அளவற்ற பற்றுள்ள இவர் காயத்ரிபீடத்திற்கு ஆயிரங்கால் மண்டபம் ஒன்று அமைக்க திட்டமிட்டுமிருக்கிறார். எனினும் அந்தப்பணி நிறைவடையவில்லை. பூட்டிய வீட்டுக்குள் அவர் மரணமடைந்தது பல நாட்களின் பின்னரே தெரிய வந்துள்ளது. அவரது வீட்டுக்கு செல்லும் குழாய் நீர்மானி (இது வீட்டிற்கு வெளியிலிருக்கிறது) வேலை செய்யாமலிருந்ததாகவும் வழமையாக வெளியில் எரியும் மின்குமிழ்கள் எரியாமலிருந்ததாகவும் வீட்டைச்சுற்றி ஒருவித துர்நாற்றம் வீசியதாகவும் சொல்லப்படுகிறது.

இதனையடுத்து வியாழனன்று காலை அவரது உறவினரொருவர் இவர் வாழ்ந்துவந்த வீட்டுக்கதவை உடைத்து உள்ளே சென்றபோதுஅவர் பிணமாக கட்டிலின் குறுக்காக கிடந்துள்ளார். ஆனால் உருக்குலைந்த நிலையில் துர்நாற்றம் வீசியநிலையில் பொதுமக்கள் பலரும் சென்று பார்த்துள்ளனர்.

தனிமையிலிருந்த செல்வந்தரான இவர் சிலவேளை கொலைசெய்யப்பட்டிருக்கலாம் என்ற ரீதியிலும் பொலிசார் இதனை அணுகினார்கள். எனினும், வைத்திய பரிசோதனை முடிவானது மூச்சுத்திணறல் மூலமான இயற்கையான இறப்பு என்பதை உறுதிசெய்தது. தவயோகி பவளம் பற்றி அந்தபகுதியில் உள்ளவர்களிடம் உயர்வான மரியாதை உள்ளது. அவர் தன்னை ஒடுக்கி மேற்கொண்டது தவவாழ்வுதான் என்று கூறுகிறார்கள். ●

BRITISH COLLEGE OF EDUCATION
bcejaffnabranch@gmail.com | fb/britishcollegejaffna

Now prepare for your Academic /General
IELTS
Speaking, Listening, Reading & Writing
Spouse (Family) விசாவில் செல்லவுள்ளவர்களுக்கு UK அரசினால் அங்கீகரிக்கப்பட்ட ஆங்கில சான்றிதழுக்கான பாடநெறி

IELTS LIFE SKILLS A1 B1
மாணவர்கள் சித்தியடைவதற்கு 100% உத்தரவாதம் வழங்கப்படும்
கடந்த 10 மாத காலத்தினுள் 252 மாணவர்களை (100%) சித்தியடைய வைத்துள்ள ஒரே ஒரு நிறுவனம்

International Languages
GERMAN & SWISS மொழிப் பாடநெறி Deutsch
Goeth Institute இனால் அங்கீகாரம் பெற்ற அனுபவமுள்ள ஆசிரியரைக் கொண்டு பாடநெறி நடாத்தப்படுவதுடன் பரீட்சையில் சித்தியடைவதற்கான உத்தரவாதம் வழங்கப்படும்.

France மொழிப் பாடநெறி
French
அனுபவமுள்ள விரிவுரையாளரினால் பாடநெறி நடாத்தப்படுவதுடன் அங்கீகாரம் பெறப்பட்ட சான்றிதழ் வழங்கப்படும்

Netherlands மொழிப் பாடநெறி
Dutch
அனுபவமுள்ள விரிவுரையாளரினால் பாடநெறி நடாத்தப்படுவதுடன் பரீட்சையில் சித்தியடைவதற்கான உத்தரவாதம் வழங்கப்படும்.

4 மாதத்தில் ஆங்கிலத்தில் புலமையாளராகுவதுடன் ESOL, SESOL சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்
Diploma in English
Reading, Writing, Speaking & Listening
முழுநேர வகுப்புக்கள் திங்கள் தொடக்கம் வெள்ளிவரை ஒவ்வொரு நாளும் 4 மணித்தியாலயங்கள் மாணவர்களின் ஆங்கில அறிவுக்கேற்ப Basic, Intermediate, Advanced என வகுப்புக்கள் தனித்தனியாக நடைபெறுகின்றது.

3 மாதத்தில் ஆங்கிலம் பேசுவதுடன் சர்வதேச SESOL சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்
Spoken English
Grammar, Listening & Speaking, Reading & Writing, Vocabulary ஆகிய பாடப்பரப்புகளில் பாடகுறிப்புக்கள் வழங்கப்பட்டு முற்று முழுதாக நவீன கற்பித்தல் முறையில் கற்பிக்கப்படுகின்றன.
முழுநேர வகுப்புக்கள் திங்கள் தொடக்கம் வெள்ளிவரை ஒவ்வொரு நாளும் 4 மணித்தியாலயங்கள் மாணவர்களின் ஆங்கில அறிவுக்கேற்ப Basic, Intermediate, Advanced என வகுப்புக்கள் தனித்தனியாக நடைபெறுகின்றது.

6 வயது முதல் 12 வயது வரையான மாணவர்களுக்கு...
YLE English for Your Children
உங்கள் செல்லச் சிறுசுகளுக்கான ஆங்கிலம்
Cambridge Young Learners English Tests
சிறுவர்களின் ஆங்கில கற்றலை ஊக்கப்படுத்தும் ஓர் சிறந்த கற்கைநெறி

BRITISH COLLEGE of Education
Kachcheri Nallur Rd, Jaffna.
021 - 4927114, 077- 3830671
bcejaffnabranch@gmail.com
fb/britishcollegejaffna

51,Vayal Road, Mannar. 023 4924124 | Main Street, Mullaithivu. 021 4927497 | 103, Mannar Rd, Vavuniya. 024 4930041
585, Peradeniya Rd, Kandy. 081 4949590 | 13, 1st Chapel Rd, Colombo 06 011 4377115

# சுவாதியைக் கொன்றது யார் ?

பிறைவாணன்

சென்னை நுங்கம்பாக்க ரயில் நிலையத்தில் வைத்து சுவாதியை இளைஞர் ஒருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் இடம்பெற்று ஒரு வாரம் கடந்த நிலையிலும் கொலையாளியைக் கண்டு பிடிப்பதில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். சனநடமாட்டம் கூடிய ரயில் நிலையத்தில் வைத்து ஒரு இனம்தெரியாத இளைஞர் ஒருவர் வீதரியமாக சுவாதியை வெட்டிப் படுகொலை செய்து விட்டு அந்த இடத்தில் இருந்து பாதுகாப்பாக ஓடியிருக்கிறார் என்றால் சந்தேகம் தான் எழுகிறது.

கொலையாளி சுவாதியை இரு நாளுக்கு முதல் சந்தித்து பேசிக் கொண்டிருக்கும் போது அவர்கள் இருவரும் முரண்பட்டுக் கொண்டதை பார்த்ததாகவும் கொலையாளி இதன் போது சுவாதியின் கன்னத்தில் அறைந்ததாகவும் செய்திகள் வெளிவந்தன. மேலும் சுவாதியின் வீட்டின் பக்கம் சுவாதி படுகொலை செய்யப்பட முன்னர் கொலையாளி நடமாடியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே சுவாதிக்கு நன்கு தெரிந்தவர் தான் கொலையாளியாக மாறியுள்ளார். அல்லது குடும்பப் பகை அல்லது நிறுவனத்தில் பகையாளி இருந்தால் பழிவாங்கும் நோக்கில் சுவாதியை படுகொலை செய்திருக்கலாம். சுவாதிக்கோ சுவாதியின் குடும்பத்தாருக்கோ ஒருவரும் பகையில்லை என்று சொல்லப்



சுவாதி குழந்தைத் தனமான குணம் கொண்டவள். மென்மையாகவே பேசுவாள். கடவுளுக்கு பயந்து நடந்தவள். சுந்தராகாண்டம், பஞ்சாங்கம் படிக்காமல், அவள் ஒரு நாள் கூட வீட்டை விட்டு வெளியில் செல்லமாட்டாள். தினமும் ரயிலில் வேலைக்கு செல்லும்போது விஷ்ணு சகஸ்ரநாமம் உச்சரித்தபடியே தான் செல்வாள்.

படுகிறது. இதனைப் பார்க்கும் போது சுவாதியுடன் பகைத்துக் கொண்ட அந்த இளைஞன் யார். சுவாதியுடன் என்ஜினியர் படித்தவரா அல்லது காதல் சொல்லி அதனை சுவாதி மறுத்தாரா போன்ற கோணங்களில் விசாரணை இடம்பெறுகிறது.

சுவாதி கொலை வழக்கில் திடீர் திருப்பமாக புதிதாக, கொலையாளி பற்றிய ஒரு வீடியோ ஆதாரம் பொலிசாருக்கு கிடைத்துள்ளது. கொலையாளி யார் என்பதை அந்த வீடியோ உறுதிப்படுத்திவிட்டது. சுவாதி கொலை வழக்கில் பொலிசுக்கு கிடைத்த ஒரே ஆதாரம் சிசிடிவி காமிரா உருவப்படம் மட்டும்தான். நுங்கம்பாக்கம் ரயில் நிலையம் உள்ளே கொலையாளி நுழைவதற்கு சற்று முன்பாக சாலையில் நடந்து சென்ற காட்சிதான் கிடைத்தது. கொலையாளி முதுகில் பை தொங்கவிட்டிருந்தான் என நேரில் பார்த்த சாட்சிகள் கூறியதால், பை அணிந்து நடந்து சென்ற அந்த நபர்தான் கொலையாளியாக இருக்கலாம் என பொலிசார் சந்தேகத்தின் பேரில் அவரைத் தேடி வந்தனர் இந்நிலையில், அவன்தான் கொலையாளி என்பது புதிதாக கிடைத்துள்ள சிசிடிவி காமிரா காட்சி மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

சுவாதி கொலை செய்யப்பட்ட கடந்த 24ம் தேதி அன்று, காலை 6.30 மணியில் இருந்து 6.47 மணி வரை அதாவது 17 நிமிடங்கள் நுங்கம்பாக்கம் ரயில் நிலையத்தினுள் கொலையாளி இருந்துள்ளான். சரியாக 6.32 மணிக்கு ரயில் நிலையத்தில் கொலையாளி நுழைகிறான். இந்த காட்சி அருகில் உள்ள வீட்டில் பொருத்தப்பட்டிருந்த வீடியோவில் பதிவாகி உள்ளது. பின்னர் சுவாதியை கொலை செய்துவிட்டு 2வது தண்டவாளத்தில் இருந்து குதித்து தண்டவாளம் வழியாக ஓடி முதல் நடைமேடையில் கொலையாளி ஏறி உள்ளான். பின்னர் முதல் நடைமேடையில் அவன் வேகமாக தப்பி ஓடுகிறான். இடது கையில் அரிவாளுடன் வலது கையை வேகமாக வீசிக் கொண்டு அவன் தப்பி ஓடும் காட்சிகள் ரயில் நிலையம் வெளியே உள்ள ஒரு வணிக நிறுவனத்தில் பொருத்தப்பட்டிருந்த, கேமராவில் பதிவாகியுள்ளன.

இந்த காட்சியில் ஓடும் நபரும், ரயில் நிலையம் நுழையும் முன்பு ஒரு வீட்டில் பொருத்தப்பட்டிருந்த சிசிடிவியில் பதிவான நபரும் ஒரே ஆள். எனவே கொலையாளி அவன்தான் என்பது உறுதியாகிவிட்டதாக சொல்லப்படுகிறது. சுவாதியின் வீட்டு அருகிலேயே கொலையாளி இருந்திருப்பது செல்போன் சிக்னல் மூலம் தெரியவந்துள்ளது 8 தனிப்படைகள் அமைக்கப்பட்டு பல்வேறு கோணங்களில் விசாரணைகளை நடத்தி வருகிறது பொலிஸ்

சுவாதியை கொலை செய்த கொலைகாரன் அவரது செல்போனையும் எடுத்துச் சென்று விட்டார். அவரது செல்போன் சிக்னல் சூளைமேடு பகுதியை காட்டியுள்ளது.



கொலை செய்யப்பட்ட சுவாதியின் வீடும் சூளைமேட்டில்தான் உள்ளது. எனவே சுவாதியை கொலை செய்து விட்டு, அந்த நபர் சூளைமேட்டுக்கு சென்றிருப்பது உறுதி செய்யப்பட் டுள்ளது. எனவே சுவாதியை கொலை செய்தவர் சூளைமேட்டில் பதுங்கி இருக்கலாம் என்ற சந்தேகத்தில் சூளைமேட்டில் உள்ள வீடுகள், தங்கும் விடுதிகள் உட்பட அனைத்து இடங்களிலும் கடந்த 4 நாட்களாக பொலிஸார் சோதனை செய்து வருகின்றனர். சூளைமேட்டில் வீடு வீடாக சோதனை நடத்தப்பட்டு வருகிறது. கொலையாளி என்று சந்தேகப்படும் நபரின் புகைப்படத்தையும் பொதுமக்களிடம் காட்டி விசாரணை நடத்துகின்றனர்.

செங்கல்பட்டு அருகே பரனூரில் உள்ள ஐடி நிறுவனத்தில் பணிபுரிந்த சுவாதி, முன்னதாக மைசூரில் உள்ள நிறுவனத்தில் பயிற்சியும், பின்னர் பெங்களூரிலும் பணி புரிந்துள்ளார். அதன் பின்னரே பரனூர் நிறுவனத்துக்கு வந்துள்ளார். கொலையாளி குறித்த தகவல்களை சேகரிக்க மைசூர், பெங்களூருக்கும் தனிப்படை சென்றுள்ளது. அங்கு சுவாதியுடன் பணிபுரிந்த நண்பர்களிடம் விசாரணை நடத்தியுள்ளனர்.

சுவாதியின் அக்கா தெரிவிக்கும் போது சுவாதி குழந்தைத் தனமான குணம் கொண்டவள். மென்மையாகவே பேசுவாள். கடவுளுக்கு பயந்து நடந்தவள். சுந்தரகாண்டம், பஞ்சாங்கம் படிக்காமல், அவள் ஒரு நாள் கூட வீட்டை விட்டு வெளியில் செல்லமாட்டாள். தினமும் ரயிலில் வேலைக்கு செல்லும்போது விஷ்ணு சகஸ்ரநாமம் உச்சரித்தபடியே தான் செல்வாள். வேலைக்கு செல்லும் வழியில் சிங்கப்பெருமாள் கோயில் இருப்பதால் தவறாமல் நரசிம்மர் ஆலயத்துக்கு செல்வதை வழக்கத்தில் வைத்திருந்தாள். அதுபோல திருமளிகையில் உள்ள ஆச்சாரியர் முதலியாண்டான் சுவாமிகள் ஆலயத்துக்கும் அவள் செல்வதுண்டு. திருச்சியைச் சேர்ந்த எமது குடும்பம் சென்னை சூளைமேட்டில் வசித்து வருகிறது.

கொலையாளியின் தெளிவற்ற புகைப் படத்தை வைத்துக்கொண்டு சூளைமேடு பகுதியில் 100க்கும் மேற்பட்ட பொலிசார் வீடு வீடாகச் சென்று விசாரணை நடத்தி வருகின்றனர். நுங்கம்பாக்கத்தில் சுவாதி கொலை செய்யப்பட்ட போது காலை 6 மணியில் இருந்து 7 மணி வரை அந்தப் பகுதிக்கு வந்த 5 லட்சம் செல்போன் அழைப்புகளையும் பொலிசார் ஆய்வு செய்து வருகின்றனர். சுவாதியின் ஆண் நண்பரிடம் பல மணி நேரம் விசாரணை நடத்தியும் கொலையாளி யார் என்பதை கண்டறிவதில் மர்மம் நீடிக்கிறது.

சுவாதியைக் கொன்ற கொலைகாரன் பற்றி சுவாதியின் தோழி பரபரப்பு தகவல்களை வெளியிட்டுள்ளார். சுவாதியை கொலைகாரன் 2 நாட்கள் பின்தொடர்ந்து வந்ததை நேரில் பார்த்ததாகத் தெரிவித்துள்ளார். ஆனால் அந்த இளைஞர் யார் சுவாதிக்கும் அவருக்கும் என்ன தொடர்பு என்று சொல்வதற்கு ஒருவரும் இல்லை.



## யேசுக்கிறிஸ்துவின் பாடம்

வழக்கிற்காக நீதிமன்றத்திற்கு செல்லாதே. வழியிலேயே வழக்காளியுடன் பேசி சமரசம் செய்து கொள் என யேசு கிறிஸ்து கூறியதாக பைபிளில் கூறப்பட்டுள்ளது. அது சத்தியமான வார்த்தைகள்.

இப்பொழுது ஜெனிவாவில் நடக்கும் விவகாரங்கள் தவிர்க்க முடியாமல் இதைத்தான் நினைவூட்டுகின்றன.

2009 இன் பின்னர் ஜெனீவாவில் இலங்கை பெருமளவு நெருக்கடிகளை சந்தித்து வருகிறது. அந்த நெருக்கடிகள் இப்பொழுதும் ஏதோ ஒரு மெல்லிய அளவிலேனும் தொடர்ந்தபடியே இருக்கிறது.

உண்மைகளை கண்டறிதல், பொறுப்புக்கூறல், நல்லிணக்க செயற்பாடுகளில் முன்னோக்கிய நகர்வுகளை கோரும் அழுத்தமே சர்வதேச செயற்பாடு. அதில் குறிப்பிடத்தக்க முன்னகர்வை இலங்கை காண்பிக்க தவறியதன் விளைவு, நெருக்கடியை தொடர வைத்துக்கொண்டிருக்கிறது.

மகிந்த ராஜபக்சவின் காலத்தில் இவை எதற்குமே வாய்ப்பில்லாமல் போய்விட்டது. இலங்கைமீதான சர்வதேச நெருக்கடி அதிகரிக்க இதுதான் பிரதான காரணமாக அமைந்தது.

புதிய அரசு உண்மைக்களை கண்டறிதல், பொறுப்புக்கூறல் விவகாரங்களை மழுப்பலான வார்த்தைகளில் பேசியபடி நல்லிணக்கம் பற்றி உரத்தகுரலில் பேசிக் கொண்டிருக்கிறது. அதாவது நடந்தவற்றை கடந்து செல்வோம் என்கிறது. ஒருவகையில் நல்லிணக்க செயற்பாடுகளிற்காக அதை ஏற்க வேண்டிய பேரம்பேசலிற்கு தமிழர்கள் உட்பட்டுள்ளார்கள். எனினும், ஜெனீவாவில் தமிழர் பிரதிநிதிகள் அனைவரும் பொறுப்புக்கூறல், உண்மைகளை கண்டறிதல், நல்லிணக்க விவகாரங்கள் பற்றி அழுத்திப் பேசியுள்ளனர்.

புதிய வாழ்வா, பாதிக்கப்பட்டவர்களிற்கு நீதியா என்பது தொடர்பில் தமிழ் அரசியல், புலமை உலகில் சிறியளவிலான விவாதங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. அது பற்றி நாம் இப்பொழுது பேசவில்லை.

பொறுப்புக்கூறல், உண்மைகளை கண்டறிதல் விடயத்தில் தமிழர்களிடம் சிறிதளவு நம்பிக்கையும் இல்லை. நல்லிணக்கபொறிமுறையில் அரசு ஆர்வமாக இருக்கிறதென்ற நம்பிக்கையின் சிறிதுளியேனும் மற்றைய விவகாரங்களில் கிடையாது.

இது நோக்குநிலை சார்ந்த விவகாரமும் கூட. உண்மைகளை கண்டறிந்து, பொறுப்புகூறினாலே நல்லிணக்கம் சாத்தியமாகுமென்பது பாதிக்கப்பட்டவர்களின் தரப்பு நியாயம். நடந்தவற்றை பேசாமல் கடந்து செல்ல நினைப்பது வெற்றிபெற்றவர்களிற்கு உள்ள சுலபமான வழி. இதிலுள்ள ஆபத்து என்னவெனில், இரண்டுமே ஒரு நேர்கோட்டில் பயணிக்காதென்பதே.

இந்த விவகாரத்தில் இரண்டு தரப்பிற்குள்ளும் சமரசம் ஏற்படாதவரை இலங்கைத்தீவில் நல்லிணக்க செயற்பாடு வெற்றியடையாது. அது ஐநா மனிதஉரிமைகள் பேரவை போன்ற பொறுப்பு வாய்ந்த உலக அரங்குகளில் எதிரொலித்தபடிதான் இருக்கும்.

இந்த நம்பிக்கையீனத்தின் எதிரொலிதான் சர்வதேச நீதிபதிகள் கோரிக்கை. சர்வதேச நீதிபதிகளை நியமிக்க வேண்டுமென்ற கோரிக்கையே நம்பிக்கையீனத்தின் எதிரொலிதான். இந்த நம்பிக்கையீனம் என்பது கடந்த கால வரலாற்றிலிருந்து பிறந்தது.

சர்வதேச நீதிபதிகளை இலங்கை அனுமதிக்க வேண்டுமென்ற கோரிக்கையை இம்முறை அமர்வில் பல்வேறு நாடுகள் வலியுறுத்தியிருந்தன. நல்லிணக்க பங்காளிகளாக இருந்தாலும், ஊக்குவிப்பாளராக இருந்தாலும், எந்த தரப்பும் இலங்கையின் நீதியில் நம்பிக்கைற்ற தன்மைக்கு சென்றுவிட்டார்கள் என்பதையே இது காட்டுகிறது.

இந்த சர்வதேச நெருக்கடியை இலங்கை கடப்பது ஒன்றும் சிதம்பர சூத்திரமல்ல. அதற்கு உள்ளூரில் தமிழர்கள் மத்தியில் நம்பிக்கையை பெற்றுக்கொள்ள வேண்டும். நம்பிக்கையை பெறுவதென்பது இனி வார்த்தைகளால் முடியாதது. கசப்பான கடந்த காலம் ஒவ்வொரு தமிழனின் மனதிலும் படிந்துள்ளது.

நம்பிக்கையூட்டும் செயல்களன்றி இனி வேறெதனையும் தென்னிலங்கை செய்து தமிழர்களின் நம்பிக்கையை பெற்றுக்கொள்ள முடியாது. ஏராளம் யுத்தக்குற்றங்களை, மனிஉரிமை மீறல்களை தமிழர் தரப்பு இராணுவம் மீது அடுக்கிக் கொண்டிருக்கிறது. து உண்மையானதா பொய்யானதா என்பதை சுயாதீன விசாரணைகள் மூலம் உறுதிப்படுத்த வேண்டும். கிருசாந்தி தொடக்கம் இசைப்பிரியா வரை ஏராளம் பெண்களின் துயரக்கதை நம்மத்தியில் உள்ளது. இராணுவம் கூறுவதை போலவே இசைப்பிரியா போராளியாகவே இருந்துவிட்டு போகட்டும். (அவர் போராளியாக இருந்தார் என்பதற்குத்தான் வாய்ப்பு அதிகம்) பொதுமக்கள்தான் பாலியல் வன்புணர்விற்கு உள்ளாக்கப்படகூடாது, போராளிகள் உள்ளாக்கப்படலாமா? இது எந்தவகையான நியாயம்? இசைப்பிரியா என்னவாக இருந்தார் என்பதை விடுத்து. சரணடைந்த பெண்ணொருவரிற்கு என்ன நிகழ்ந்ததென்பதை கண்டறிய வேண்டும். இப்படி வெளிப்படுத்தப்பட வேண்டியவை ஏராளம் உள்ளன. இறுதியாக கொத்தணிகுண்டு விவகாரமும் இதில் சேர்ந்துள்ளது.

வழக்காளிகளுடனேயே விவகாரத்தை பேசி தீர்த்து கொள்ள வேண்டுமென இரண்டாயிரம் வருடங்களின் முன்னரே யேசு கிறிஸ்து சொன்னதுதான் இலங்கைக்கு ஆகச்சிறந்த பாடமாக இருக்கும்.

**தீபம்**
197, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.
☎ 0212216633, 0214927561

ஆசிரியர்பீடம் : editor@deepam.lk ☎ 0214927562
சந்தா : subs@deepam.lk ☎ 0768255566
விளம்பரம் : sales@deepam.lk ☎ 0768255567
செய்திகளுக்கு : news@deepamnews.com

211, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் இதுவரை இயங்கி வந்த தீபம் ஊடககுழுமம் இம்மாதம் முதல் புதிய முகவரிக்கு இடம்மாறியுள்ளது. 197, அரசடிவீதி, யாழ்ப்பாணம் என்ற புதிய முகவரியில் இயங்கிக் கொண்டிருக்கிறதென்பதை அனைவருக்கும் அன்புடன் அறியத் தருகிறோம்.

# சொன்னார்கள்



**மங்கள சமரவீர – அமைச்சர்**

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலிருந்து இராணுவத்தை அகற்றும் நடவடிக்கைகள் அடுத்த ஆண்டில் பு+ர்த்தியாகும். நல்லாட்சி அமைந்து ஒன்றரை வருட குறுகிய காலப் பகுதியில் பல இலக்குகளை அடைந்துள்ளோம். ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் தீர்மானங்களை அமுல்படுத்துவதற்கு கால அவகாசத்தை வழங்கவும். குறிப்பாக குற்றச் செயல்களுக்கு பொறுப்பு கூறுதல், நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல் உள்ளிட்ட விடயங்களை மேற்கொள்ள கால அவகாசம் வழங்கப்பட வேண்டும். பொதுமக்கள் தொடர்பான விடயங்களில் அரசாங்கம் சில விடயங்களை மெதுவாக முன்னெடுத்து வருகின்றது.




**சுஷ்மா ஸ்வராஜ் – இந்திய வெளிவிவகார அமைச்சர்**

இலங்கை மற்றும் இந்திய மீனவர் பிரதிநிதிகளுக்கு இடையிலான நான்காம் கட்டப் பேச்சுவார்த்தை இடம்பெற்ற ஒரு மாத காலப் பகுதிக்குள் நடவடிக்கை எடுக்கப்படும். இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களின் விடுதலைக்கு அழுத்தம் கொடுக்கப்படும். இலங்கை கையகப்படுத்தியுள்ள இந்திய மீனவர்களின் படகுகளை விடுவிப்பது குறித்தும் அந்நாட்டு அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும். இந்திய இலங்கை மீனவ பிரதிநிதிகள் பங்கேற்கும் நான்காம் கட்ட பேச்சுவார்த்தை இடம்பெற்ற ஒரு மாதத்துக்குள் நடவடிக்கை எடுக்கப்படும.



**இளஞ்செழியன் – யாழ் மேல் நீதிமன்ற நீதிபதி**

மாணவிகள் மீது பாலியல் வதை புரிவது சட்டரீதியாக பாரதூரமான குற்றமாகும். அதிலும், ஆசிரியர்களே மாணவிகள் மீது பாலியல் வதை புரிவது மேலும் மோசமான குற்றமாகும். பாடசாலை மாணவிகள் மீது பாலியல் இம்சை புரியும் ஆசிரியர்கள் பத்து ஆண்டுகளுக்கு மேல் சிறையில் அடைக்கப்படுவார்கள். குற்றச்செயல்கள் நிரூபிக்கப்பட்டால், குற்றவாளியாகக் காணப்படுபவருக்கு பத்து ஆண்டுகளுக்கு மேற்பட்ட சிறைத் தண்டனை விதிப்பதற்கு தண்டனைச் சட்டக் கோவையின் 365 பிரிவில் சட்டம் பரிந்துரை செய்கின்றது.



**எஸ்.ஜே. இம்மானுவேல் – உலகத் தமிழர் பேரவையின் தலைவர்.**

உள்ளக விசாரணை பொறிமுறையில் சர்வதேச நீதிபதிகள் இடம்பெறவேண்டியது அவசியமாகும். அதாவது எவ்வாறான விசாரணை பொறிமுறையாக இருப்பினும் அது பாதிக்கப்பட்ட மக்கள் நம்பிக்கை வைக்கும் அளவில் அமையவேண்டும். பாதிக்கப்பட்ட மக்கள் நம்பிக்கை வைக்காவிடின் எதனையும் செய்ய முடியாது. அது தீர்வாகவும் அமையாது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தென்னிலங்கை இனவாதிகளையும் மஹிந்த ராஜபக்ஷவையும் சமாளிப்பதற்கு நடவடிக்கை எடுத்துக் கொண்டிருப்பாரானால் நல்லிணக்கத்தை அடைய முடியாது போய்விடும்.



**தீபிகா உடுகம – மனித உரிமை ஆணைக்குழுவின் தலைவர்**

நபர்கள் காணாமல் போனமை தொடர்பாக அண்மையில் முறைபாடுகள் கிடைக்கவில்லை. சித்திரவதை தொடர்பான முறைபாடுகளும், பொலிஸாரின் பராமரிப்பில் உள்ள போது செய்யப்படுகின்ற சித்திரவதை தொடர்பிலான முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன. சித்திரவதைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்றும், அரசியலமைப்புக்கு அமைய சித்திரவதைகளை தடுக்கும் உரிமை மக்களுக்கு இருக்கின்றது. எந்தவொரு சித்திரவதையையும் யாராலும் நியாயப்படுத்த முடியாது.



**கயந்த கருணாதிலக – ஊடக அமைச்சர்**

ஊடகவியலாளர்களுக்கு குறைந்தளவு சம்பளமே வழங்கப்படுகின்றது, இந்த நிலை மாற வேண்டும், அனைத்து ஊடகவியலாளர்களுக்கும் உரிய சம்பளம் வழங்கப்பட வேண்டும.; தற்போது நாட்டில் பல ஊடகவியலாளர்கள் குறைந்த அளவு சம்பளத்தில் அதிக வேலைகளை செய்கின்றனர், மேலும் பல நிறுவனங்கள் இவர்களுக்குரிய சம்பளத்தை முறையாக வழங்குவதும் இல்லை. ஒரு ஊடகவியலாளருக்கு குறைந்த பட்சம் எவ்வளவு சம்பளம் வழங்க வேண்டும் என்ற தீர்மானம் மேற்கொள்ளப்படும். அதை மீறினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

எந்த சீரியஸான விடயத்தையும் சிக்கலில்லாமல் நகைச்சுவையாக கிறுக்க ஆர்வமாக இருக்கிறீர்களா? அரசியல், சமூகம், ஆன்மீகம் எந்த எல்லையையும் தொடலாம். உடனே வரைய ஆரம்பியுங்கள். தரமானவை தீபம் வாரஇதழிலும், தீபம் இணையத்தளத்திலும் வெளியாகும். உங்கள் படைப்புக்களை அனுப்ப வேண்டிய முகவரி editor@deepam.lk





# என்னதான் நடக்கிறது வவுனியாவில்?

## "பரபர" பற்றரி தொழிற்சாலை

நேருஜி

ஒரு சிறிய குடிசைக் கைத்தொழிலை அமைப்பது என்றாலே பெரிய விழா எடுப்பார்கள். அதை செய்கிறோம். இதை செய்கிறோம் என்பார்கள். ஆனால் இங்கு ஒரு பெரிய பற்றறி உருக்கும் தொழிற்சாலை சந்தடியில்லாமல் திறக்கப்பட்டு இயங்கிக் கொண்டிருக்கிறது. அது வாகனங்களின் பற்றறிகளில் இருந்து உலோகங்களை பிரித்தெடுக்கும் தொழிற்சாலை. இந்த தொழிற் சாலை ஏன் அமைதியாக திறக்கப்பட்டு நான்கு வருடங்களாக இயங்குகின்றது என்ற சந்தேகம் ஊரிலுள்ள பல மக்களிடம் இன்றும் உள்ளது.

இதையடுத்து விடயங்களை அறிந்து கொள்ள புறப்பட்டோம்.

ஊருக்குள்ள சின்ன வாகனங்களில் ஒலிபெருக்கி மூலம் பல இராமாயணக் கதைகளை கூறி உடைந்த பிளாஸ்ரிக் கதிரை, மேசை ஏனைய பிளாஸ்ரிக் பொருட்கள், பழுதான மின் உபகரணங்கள, இரும்புச் சாமான்கள் இருந்தால் எங்களிடம் கொடுத்து அதற்குரிய புதிய பிளாஸ்ரிப் பொருட்களை அல்லது பணத்தை பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கின்றனர். உடனடியாகவே வாகனங்களின் பழுதாகிப் போன பற்றறிகள் இருந்தால் அதை கொடுத்து எம்மிடமே பணம் பெற்றுக் கொள்ளுங்கள் என்ற அறிவித்தலையும் செய்கின்றனர். இதை எடுத்து எங்கு கொண்டு செல்கிறார்கள். என்ன செய்கிறார்கள் என்றால் அது ஓமந்தை அரச வீட்டுத் திட்டப் பகுதிக்குள் உள்ள தொழிற்சாலைக்கு செல்கின்றது.





இத் தொழிற்சாலை ஓமந்தை, வேப்பங் குளம் அரச வீட்டுத் திட்டத்திற்கு அருகா மையில் உள்ளது. இது அமைந்துள்ள காணி வவுனியா மாவட்ட முன்னாள் அரச அதிபர் திருமதி சாள்ஸ் அவர்களினால் கைத் தொழில் வலயத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்தது. ஆனால் இங்கு ஒரு தனியாரின் பெயரில் ஒரு தொழிற்சாலை அமைக்கப்பட்டடுள்ளது. பின்னனியில் அரசியல்வாதி ஒருவர் இருப்பதாக கிராமமக்கள் பேசிக்கொள் கிறார்கள்.

பெற்றுக் கொள்ளப்பட்ட பற்றறிகளை இந்த தொழிற்சாலை வாளாகத்தில் வைத்து உடைக்கிறார்கள். அதில் உள்ள அமிலங்கள் தனியாக பிரித்தெடுக்கப்படுகின்றது. பின்னர் மேற் பாகத்தில் உள்ள பிளாஸ்ரிக் தூளாக் கப்பட்டு உள்ளிருக்கும் உலோகம் தனியாக சேகரிக்கப்படுகிறது. பிரித்தெடுக்கப்பட்ட உலோகம் (சுத்தநாகம்) உருக்கி பெரிய பெரிய கட்டிகளாக வார்த்தெடுக்கப்படுகின்றது. ஒவ்வொரு சுத்தநாக கட்டிகளும் 18 தொடக்கம் 21 கிலோ உடையதாக காணப்படுவதுடன் அவற்றை வேறு இடத்திற்கு ஏற்றுமதியும் செய்யப்படுகின்றது.

இந்த உலோகத் தொழிற்சாலை பின்வரும் கேள்விகளை எழுப்புகிறது.


01. பற்றறிகளில் இருந்து பிரித்தெடுக்கப்படும் போது சூழலை மாசுபடுத்தக் கூடிய அமிலங்கள் எவ்வாறு முகாமைத்துவம் செய்யப்படுகிறது?
02. உடைத்து எடுக்கப்பட்ட பிளாஸ்ரிக் பொருட்கள் (பற்றறி உட்பட) தூள்களாகப் டபட்டுமீள் சுழற்சிக்காகபயன்படுத்தப்படு

**ஜி.ஏ.ஜே.பாலசூரியா,**
பொறுப்பதிகாரி,
சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபை,
வவுனியா

இந்த பற்றறி தொடர்பில் எந்த பிரச்சனையும் வரவில்லை. இது சுற்றாடல் பாதுகாப்பு உரிமம் பெற்றே இயங்குகின்றது. இதற்குரிய அனுமதி கொழும்பில் எமது தலைமையகத்தால் வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் நான் கூறமுடியாது. இது பற்றி எமது தலைமையகத்துடன் பேசிக்கொள்ளவும்.










கின்றது. இத்தகைய தூள்கள் நிலத்தில் சிந்துவதால் நிலத்தினுடைய நீர் உறிஞ்சும் தன்மை பாதிப்படையாதா?

03. தொழிற்சாலையில் உலோகத்தை உருக்கும் போது வெளியேற்றப்படும் வாயுக்கள் நச்சுத் தன்மை உடையதாஇ இல்லையா?

04. அவ்வாறு நச்சு தன்மை உடையதாக இருப்பின் குடியிருப்பு பகுதிக்குள்; இந்த தொழிற்சாலை அமைவது பொருத்தமானதா? வளியை மாசுபடுத்தக் கூடிய வாயுக்களை வெளியேற்றும் தொழிற் சாலைகள் மக்கள் குடியிருப்புக்களில் இருந்து எவ்வளவு தூரத்தில் இருக்க வேண்டும் என்ற வரையறை இருக்கின்றது. அந்த வாயுக்களை வெளியேறுவதற்கான பொறிமுறை கூட இருக்கின்றது. ஆனால் அந்த வரையறை மற்றும் பொறிமுறை இங்கு பின்பற்றப்பட்டுள்ளதா என்ற சந்தேகமும் பலரிடமும் உள்ளது.



05. இத் தொழிற்சாலையில் உருக்குவதற்கு பெறுமதியான பாலை மரங்கள் பயன்படுத் தப்படுகின்றது. அதை பெருந்தொகையில் வெட்ட அனுமதி பெறப்பட்டதா? மீள்குடி யேறிய மக்கள் தமது வீட்டுத்திட்டத் திற்கான மரங்கள் ஏன் வேலிக்கு கூட கதியால் வெட்டினால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் பொலிசாரும், வனஇலாகவினரும்இத்தொழிற்சாலைக்கு பெருமளவு மரங்களை கொண்டு செல் வதற்குஎவ்வாறு அனுமதி வழங்கினார்கள் என்ற சந்தேகம் கூட உள்ளது.

06. எல்லாவற்றுக்கும் மேலாக உலோகத்தை உருக்கும்போதுஏற்படுகின்றமூசு உடைந்து, பரவலடைந்து தீ விபத்து ஏற்பட கூடிய வாய்ப்புக்கள் கூட உள்ளது. அருகில் குடியிருப்புக்களின் பகுதி, மற்றைய பகுதியில் காடு, அதனையடுத்து வீதிகள், புகையிரதப் பாதைகள் என்பவற்றை இதன் சூழல் கொண்டிருப்பதால் தீ வேகமாக பரவலடைய வாய்ப்பு உள்ளது. அதனை தடுக்க கூடிய முகாமைத்துவ வசதி உள்ளதா என்ற கேள்வியையும் இது எழுப்பியுள்ளது.

இந்த விவகாரம் சில மாதங்களுக்கு முன்னரே வடமாகாண அமைச்சர் ஒருவர் உள்ளிட்ட சில மக்கள் பிரதிநிதிகளுக்கு தெரியும். அவர்கள் அந்த தொழிற்சாலையை சென்று பார்வையிட்டும் உள்ளனர். அதன் பாதிப்புக்கள் குறித்து அவர்கள் தெரிந்திருந்தும் இது தொடர்பில் வடமாகாண சபையின் கவனத்திற்கு கொண்டு வரவில்லை. பகிரங்க மாக பேசியும் இருக்கவில்லை. இது ஏன்? அப்படியெனில் இந்த தொழிற்சாலை "எல்லாம்சரியாக" இருக்கிறதென உத்தரவாதப் படுத்துகிறார்களா நமது மக்கள் பிரதிநிதிகள்?

மக்கள் குடியிருப்பு பகுதியில் இவ்வாறான ஒருதொழிற்சாலை இயங்குவதற்கு முறையான நடைமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளதா என்று கூட பலருக்கும் தெரியாமல் உள்ளது.

தற்போது வவுனியாவில் சூடு பிடித்துள்ள பொருளாதார மத்திய நிலையத்தை ஓமந்தையில் அமைக்க வேண்டும் என கூறப்படுகின்ற போதும் மத்திய அமைச்சர் ஒருவர் அதற்கு தடை போட்டு வருகிறார். அவருக்கு உடந்தையாக சிலர் செயற்படுகின்றனர். இந்த தொழிற்சாலை விவகாரத்தாலேயே அங்கு பொருளாதார மத்திய நிலையத்தை கொண்டு செல்ல அவர் தடுப்பதாகவும் ஒருசாரார் குற்றம்சுமத்துவது குறிப்பிடத்தக்கது.

தீபம் வார இதழின் முதலாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு...

## படைப்பாளிகள் கொண்டாட்ட திருவிழா

தமிழின் முதல்தர சஞ்சிகையாக உருவெடுத்துள்ள தீபம் வாரஇதழ் வரும் யூலை மாதத்தில் முதலாவது வயதை பூர்த்தி செய்கிறது. இதனை முன்னிட்டு படைப்பாளிகளிற்கு ஒரு கொண்டாட்ட திருவிழாவை அறிவிக்கிறது.

**சிறுகதை, கவிதை போட்டிகள் அத்துடன், பாடசாலை மாணவர்களிற்கான கட்டுரை போட்டி**

விதிகள்

1. ஒருவர் எத்தனை படைப்புக்களையும் அனுப்பலாம். ஏற்கனவே பிரசுரமான படைப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
2. ஏ 4 தாளின் ஒரு பக்கத்தில் தட்டச்சு செய்தோ, தெளிவான கையெழுத்திலோ அனுப்பலாம். எழுதியவர் சுயவிபரம் பிறிதொரு தாளில் தெளிவாக குறிப்பிடப்பட்டு, படைப்புடன் இணைக்கப்பட வேண்டும்.
3. சிறுகதையெனில், எந்தகருவை அடிப்படையாக கொண்டும் எழுதலாம். ஏ 4 தாளில் 5 பக்கத்திற்கு மேற்படாமல் இருக்க வேண்டும்.
4. கவிதையெனில், மரபுக்கவிதையாகவோ, புதுக்கவதையாகவோ இருக்கலாம். ஏ4 தாளில் இரண்டு பக்கத்திற்கு மேற்படக்கூடாது.
5. கட்டுரையெனில், நீங்கள் பாடசாலை மாணவராக இருக்க வேண்டும். அதை பாடசாலையின் அதிபரை கொண்டு உறுதிசெய்து கட்டுரையுடன் இணைத்து அனுப்ப வேண்டும். ஏ4 தாளில் மூன்று பக்கத்திற்கு மேற்படாமல் இருக்க வேண்டும். விஞ்ஞானம், சமயம், மொழி, ஆன்மீகம், வரலாறு என எந்தத்துறை சார்ந்ததாகவும் இருக்கலாம்.
6. நடுவர்கள் முடிவே இறுதியானது. முடிவுத் திகதி 30.06.2016

**தமிழின் முன்னணி படைப்பாளிகளை கொண்ட நடுவர் குழு வெற்றியாளர்களை தேர்வு செய்வார்கள். வெற்றியாளர்களிற்கு பெறுமதிமிக்க பரிசில்கள், யூலை மாதம் நடைபெறும் தீபத்தின் ஆண்டுநிறைவு விழாவில் வழங்கப்படும்.**

படைப்புக்களை அனுப்ப வேண்டிய முகவரி
படைப்பாளிகள் திருவிழா, தீபம், 211, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்

மேலதிக தகவல்களிற்கு அலுவலக தொலைபேசி இலக்கங்களிற்கு கடமைநேரத்தில் அழைக்கலாம்.



# வீழ்ந்து வரும் வட மாகாண கல்வி

வன்னிமது

இன்று எல்லோரும் பேசும் விடயமாக வடமாகாண கல்வி வீழ்ச்சியடைகிறது என்ற விடயமே பெரும்பேச்சாக உள்ளது. இந்நிலைக்கு காரணம் என்ன 2009ம் ஆண்டு போர் முடிவுறுவதற்கு முன்வரை மிகச் சிறந்த பெறுபேறுகளுடன் சிறந்த தரத்தில் காணப்பட்ட கல்வி. தற்போது முள்ளிவாய்க் காலில் போர் முற்றுப்பெற்ற பின்னர் தொடங்கி இன்று வரை வடமாகாணத்தின் கல்வி நிலை அதாள பாதளத்திற்கு சென்று கொண்டிருக்க காரணம் என்ன.! இந்நிலையை நாம் உற்று நோக்கும் போது தமிழனின் கல்வி தரம் கழுதை தேய்ந்து கட்டெரும்பு ஆனது போல ஆகிக்கொண்டிருக்கின்றதை நாம் ஜீரனிக்கதான் வேண்டும்.

இப்போது போர் முடிவடைந்து நாட்டில் நல்லாட்சி அரசு மலர்ந்துள்ள நிலையில் கூட முன்பிருந்ததை விட வடமாகாண கல்வி மாகாண ரீதியான தரப்படுத்தலில் மாகாணத்தில் 09 வது இடத்தையும், வடமாகாணத்தில் உள்ள மாவட்டங்களில் ஒன்றான கிளிநொச்சி மாவட்டத்தில் 25வது இடமான கடைசி இடத்தை பெற்றுள்ளதுடன் இலங்கையில் கல்வியில் முதலிடத்தை வகித்த யாழ் மாவட்டம் தற்போது கல்வியில் பின்தங்கிய மாவட்டங்களில் ஒன்று என்ற நிலைமையை அடைந்ததற்கு நாம் வெட்கப்படத்தான் வேண்டும்.

நீண்டகால உள்நாட்டு யுத்தம் ஏற்படுத்திய பாதிப்புக்களும் அதன் பின்னரான சூழல் மாணவர்களின் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் கல்வி அடைவுகளில் பெருஞ் செல்வாக்கினை செலுத்தியுள்ளது. இது தொடர்பாக யுனிசெப் நிறுவனத்தால் மேற் கொள்ளப்பட்ட ஆய்வில் இறுதியுத்த காலப் பகுதியில் நிவாரண கிரமங்களில் இருந்த 85,000 மாணவர்களில் 70,000 மாணவர்கள் 1.5 தொடக்கம் 03 வருடங்கள் தங்கள் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை முற்றாக இழந்திருந்தனர்.

இவ் யுத்தத்தினால் மக்கள் தமது பொருளாதார ஆதாரங்களை முற்றாக இழந்தமை மற்றும் உயிரிழப்புக்கள், உடமை இழப்புக்கள், மற்றைய பிரதேசங்களை விட அதிகளவான அங்கவீனர்கள், குடும்பங்களின் வருமாணம் பெருமளவில் பாதிப்பு, குடும்பத்தலைவர்கள் காணமல்போனமை அல்லது நீண்டகாலமாக சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை, வடக்கில் பெண்களை தலைமைத்துவமாக கொண்ட குடும்பங்களின் எண்ணிக்கை அதிகரிப்பு, வடக்கில் முன்னர் இயங்கி வந்த பாரிய, நடுத்தர தொழிற்சாலைகள் மீளஇயங் காமை, விவசாயத்திற்கேற்ற வளமான மண்ணைக்கொண்ட பிரதேசங்களில் மக்கள் விவசாயம் செய்ய அனுமதிமறுக்கப்பட்டுள் ளது. இதனால் குடும்பங்களின் பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. இந்நிலைமை யானது, மாணவர்களின் கல்வியிலும் அவர்களின் பரீட்சை அடைவுகளிலும் நேரடித்தாக்கத்தினை செலுத்துகின்றது.

யுத்தத்திற்குப்பின்னர் மீள்கட்டமைப்புச் செயற்பாடுகள் துரிதமாக முன்னெடுத்துச் செல்லப்படுகின்றபோதும், மக்களின் வாழ்க் கைத்தரம் பெருமளவில் மாற்றமடையாதுள்ளதுடன். மாகாணத்தின் வறுமை, கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் குறைவடைந்து செல்கின்றபோதும், இன்னும் முற்றாக ஒழிக்கப் படவில்லை. அத்துடன் நகரம், கிராமங்களிடையில் வறுமையின் பரம்பல் இன்றும் சமனற்றுக்காணப்படுகின்றது.

புலமைப்பரிசில் பரீட்சையில், அதிக எண்ணிக்கையான வடமாகாண மாணவர்கள் 70 புள்ளிகளுக்குமேல் பெற்றுக்கொள்ள வில்லை. இதற்கான பிரதான காரணமாக பல முன்பள்ளிகள் அடிப்படை வசதிகளற்று இயங்கிவருவதுடன் வன்னிப்பிரதேசத் திலுள்ள பல முன்பள்ளிகள், சிவில் பாது காப்புப்படையினரின் நிர்வாகத்தின் கீழ் இயங்கி வருவதும், அடிப்படைக் கல்வித் தகைமை மற்றும் தொழில் தகைமை இல்லாத பலர் முன்பள்ளி ஆசிரியர்களாக கடமை யாற்றிக்கொண்டிருக்கின்றார்கள்.

அத்துடன் அடிப்படை எழுத்தறிவு, எண்ணறிவு அற்ற மாணவர்கள் வட மாகாணப் பாடசாலை வகுப்பறைகளில் கணிசமானளவில் காணப்படுவதுடன் மாறிவரும் புறச்சூழலில், கற்றல் மீதான ஆர்வம் குறைவடைந்து செல்வதுடன் மாணவர்களின் பாடசாலை வரவு, குறிப்பாக மெல்லக்கற்கும் மாணவர்களின் வரவு குறைவாகக் காணப்படுவதுடன் தற்கால மாணவர்கள் மத்தியில் நவீன தொலைத்தொடர்பு சாதனங்களின் பாவனை அதிகரித்துச் செல்வதும், மாணவர்கள் மத்தியில் அதிகரித்துச்செல்லும் ஒழுக்கமின்மை, குழுமோதல்கள் மற்றும் துர்நடத்தைகள் போன்ற செயற்பாடுகள் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

அழகியல் பாடங்களின் தெரிவு, தொழில் நுட்பப் பாடங்களின் தெரிவு மற்றும் விருப்புக் குரிய பாடங்களின் தெரிவு என்பவை இடைநிலை வகுப்புக்களில் முக்கியம் பெறுகின்றன. இப்பாடத்தெரிவுகளின்போது மாண

வலிகாமம் கல்வி வலயத்திற்கு உட்பட்ட பிறிதொரு தரம் 1சி பாடசாலையில் தரம் 2 அதிபர் ஒருவர் கடமையில் இருக்கிறார். தரம் 2 அதிபர் தரம் 1சி பாடசாலையில் இருப்பது பொருத்தமற்றது என்றும் ஒரே பாடசாலையில் 7 ஆண்டுகளுக்கு மேலாக கடமையாற்றிவிட்டார் என்றும் காரணங்களைக் காட்டி மேற்படி அதிபரை இடமாற்றம் செய்யவிருக்கிறது மாகாணக் கல்வியமைச்சு. இதில் முரண் என்னவெனில் மேற்படி அதிபர் பிறிதொரு 1சி பாடசாலைக்கே புதிதாக நியமிக்கப்படவுள்ள அதிபரும் தரம் 2 ஐச் சேர்ந்தவரே என்பதுவுமேயாகும். குறித்த காலப் பகுதிக்கு அதிகமாக ஒரே பாடசாலையில் மேற்படி அதிபர் கடமையாற்றியது தான் இடமாற்றத்திற்கான காரணமெனின், மேற்படி பாடசாலைச் சமூகத்தின் ஆதங்கத்தையும் கவனத்தில் எடுத்தேயாக வேண்டும்.

வவுனியா கல்விவலயத்துக்குட்பட்ட பாடசாலையான வவுனியா பாரதிபுரம் பாரதி வித்தியாலயம் பாடசாலைக்கு அதிபர் வெற்றிடமாயிருந்த நிலையில் அதற்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் பத்திரிகைகள் வாயிலாக கோரப்பட்டிருந்தது. இதற்கான விண்ணப்ப முடிவுத்திகதி 02.10.2015 எனக் குறிப்பிடப்பட்டிருந்த நிலையில் 01.10.2015 அன்று அப்பாடலைக்கு அதிபர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். பலர் விண்ணப்பித்திருந்தும், எவ்விதமான நேர்முகத் தேர்வுகளும் பின்பற்றப்படாமல், விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னதாகவே அதிபரை நியமித்தமையானது வடமாகாணத்தில் கல்வித்துறையில் நிலவும் நிர்வாகசீர்கேட்டையே எடுத்துக்காட்டுகின்றது.



**ஆ.நித்திலவர்ணன்**
விரிவுரையாளர், கல்வியியல்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்


வட மாகாணத்தின் கல்வி வீழ்ச்சிக்கு பல்வேறு காரணங்களை குறிப்பிடலாம் இது நீண்ட காலமாகமாக நடைபெற்ற யுத்த ஏற்படுத்திய பாதிப்புக்களும் யுத்தத்திற்கு பின்னரான சூழல் ஏற்படுத்திய பாதிப்புக்களும் பிரதான பங்கு வகிக்கின்றன. இதற்கு பின்னரான சூழல் சமுதாய கட்டமைப்பில் பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தும் என்று பல ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன குறிப்பாக பேராசிரியர் தயாசோமசுந்தரம்பிள்ளை தனது ஆய்வுகளில் குறிப்பிட்டுள்ளார். இப்பாதிப்பின் மூலமே கல்வி அடைவுகளில் பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளது. இலங்கையின் ஏனை மாகாணங்களுடன் ஒப்பிடும் சதவீதங்களின் அடிப்படையில் படிப்படியாக வளர்ச்சி பெற்றாலும் வடமாகாணம் பிண்தங்கி இருக்கின்றமை கவலைதரக்கூடிய விடயமாகும்.

தேசிய பொருளாதாரத்தில் வடமாகாணம் சேவைத்துறையில் தான் அதிகளவு பங்களிப்பு செய்கின்றது இதற்கு காரணம் மக்களின் அதிகரித்த கல்வியறிவு மட்டம், துரதிஸ்டவசமாக இந்நிலை படிப்படியாக குறைந்து வருகின்றது. கல்வி வீழ்ச்சிக்கு பல காரணிகள் ஒன்றினைந்து தாக்கம் செலுத்துகின்றது. குறிப்பாக யுத்தத்தின் பின்னர் வட மாகாணத்தில் வந்தடைந்ததன் காரணமாக மாணவர்கள் கல்வியில் காணப்பட்ட ஈடுபாட்டை விட பொழுது போக்குசெயற்பாட்டில் ஈடபாட்டை காட்டுகின்றனர். பெற்றோரும் அவ்வாறே நடந்துகொள்கின்றனர். புலம் பெயர் தேசங்களில் உள்ள உறவுகளின் பணம் பல்வேறு களியாட்டங்கள், பொழுது போக்குகளுக்கு மட்டுமே பயன்படுத்தப் படுகின்றது. இன்னும் பல பாடசாலைகளில் பிரதான பாடங்களுக்கான ஆசிரியர்பற்றாக்குறை நிலவுகின்றதுடன் தேசியரீதியான கலைத்திட்டம் பரீட்சை முறைகள் என்பனவும் எமது கல்வி வீழ்ச்சியில் செல்வாக்கை ஏற்படுத்தக்கூடியதாக உள்ளது.

வனின் விருப்பு, ஆற்றல், குடும்பப்பின்னணி என்பவற்றுக்கு அமைவாக வழிகாட்ட வேண்டும். துரதிஷ்டவசமாக சிலசமயங்களில் பாடசாலைக் கற்பித்தல் வள ஆளணி மற்றும் பௌதிக காரணிகள் அதிபர், ஆசிரியர்களின் விருப்பு வெறுப்புகளும் செல்வாக்கு செலுத்தி வருவதுடன், ஆரம்ப காலந்தொட்டு க.பொ.த உயர்தர பாடத்தெரிவுகளில் பிழையான தெரிவுகளும் இடம்பெற்று வருகின்றன.

இதனால் பரீட்சையில் தோல்வி அடைந்த பின் பாடத்துறை மாறுவோரும் உண்டு. மூன்று தடவையும் ஒரே பாடத்துறையில் தோற்றி சித்தியடையத் தவறி க.பொ.த உயர்தர தகைமையின்றி அல்லற்படுவோரும் உண்டு. தற்காலத்தில் க.பொ.த(சா.த) சித்தியடைந்து உயர்தரம்நுழையும்மாணவர்களுக்குப் பாடத்தெரிவுகள் தொடர்பான வழிகாட்டல்கள் வழங்கப்படுகின்ற போதும் பிழையான தெரிவுகள் இடம்பெற்று விடுகின்றன. கஸ்ட பிரதேசங்களிலுள்ள சில ஆரம்ப மற்றும் இடைநிலைப் பாடசாலைகளில் முறையாகப்பயிற்றப்படாத ஆசிரியர்கள் மற்றும்ஏனைய பாட ஆசிரியர்கள், தொண்டர் ஆசிரியர்கள், ஆசிரிய உதவியாளர்கள் ஆகியோர் பிரதான பாடங்களை கற்பிக்கும் சூழல் காணப்படுகின்றமையும் கணிசமான எண்ணிக்கையான ஆசிரியர்களுக்கு நவீன கற்றல் கற்பித்தல் முறைகள் பற்றிய பரீட்சயமின்மை காணப்படுவதுடன், அவை தொடர்பான பயிற்சி வாய்ப்புக்களும் அவர்களுக்கு குறைவாகக் காணப்படுகின்றது.

அத்துடன் ஆசிரியர்கள் காலத்திற்கு



## வட மாகாண கல்வி அமைச்சர் குருகுலராஜா

வட மாகாணத்தின் கல்வி நிலை வீழ்ச்சியடைந்துள்ளது என்பதை பலரும் பேசுவதுடன் பத்திரிகை வாயிலாகவும் கட்டுரைகள் வந்து கொண்டிருக்கின்றன. பலர் பல கருத்துக்களை பகிர்ந்திருக்கின்றனர். இருப்பினும் இதற்குரிய சரியான காரணிகளை வெளிக்கொண்டு வராமல் இருப்பது கவலைக்குரிய விடயமாக இருக்கின்றது. கல்வி வீழ்ச்சிக்குரிய காரணிகள் பல இருக்கின்றன. பாடசாலைகளில் உள்ள கட்டுமான வளங்கள், ஆசிரியர் வளங்கள் போன்ற பல்வேறு காரணிகள் இருந்தும் முக்கியமான காரணியாக 30 வருட போர் உள்ளது. 30 ஆண்டுகளிலே நடைபெற்ற மாற்றங்களின் பயனாக கல்வியிலே பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளதுடன், 2009 தொடக்கம் 2010க்குள் வன்னி நிலப்பரப்புக்குள் பிறந்த குழந்தை 5,6,7,8 வயது இருக்கும் ஆனால் அந்த குழந்தை கர்ப்பத்தில் இருந்து தற்போது வரை ஒரு நிலையற்ற வாழ்வாகவே வாழ்கின்றனர்.

முக்கியமாக இப் போராட்ட காரணங்களால் அச்சூழலிலே வாழ்கின்ற மக்கள் தங்களது நாளாந்த உழைப்பை நம்பிவாழ்கின்றனர். இவர்களின் தகப்பனார் சில வேளைகளிலே குடும்பத்தை கவனிக்காமல் விட்டிருக்கலாம் தாயார் மட்டும் தான் ஏதோவொரு வகையில் உணவை மட்டும் கொடுத்திருப்பார் மற்றைய படி பிள்ளைகளின் ஏனைய தேவைகளை வழங்கியிருக்கமாட்டார். மத்திய வகுப்பு பெற்றோர்கள் மட்டும்தான் தங்கள் பிள்ளைகளை கவனித்து பிள்ளைகளின் கற்றலுக்காக உதவி செய்தலும் அதனை பு+ர்த்தி செய்யும் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றார்கள். கனிசமான மாணவர்களுக்கு வன்னியிலே கிடைக்கவில்லை எனவே அவர்கள் பாடசாலைக்கு ஒழுங்காக போகாமல் இருப்பது, கற்றலில் நாட்டமின்மை போன்றவற்றால் இவர்களின் நாளாந்த முன்னேற்றத்தை கவனித்துக் கொள்ள வீட்டிலும் ஒருவரும் இருப்பதில்லை வகுப்பறையிலும் அந்த நாட்களிலே ஆசிரியர்களின் பற்றாக்குறை மிகவும் மோசமாக இருந்ததால் எல்லாப்பிள்ளைகளையும் எல்லா விதமாக கவனித்திருக்க மாட்டார்கள்.

இப்போர் நடந்த நாட்களினால் தான் இப்போது உள்ள இந்த வீழ்ச்சிக்கு அதாவது பெறுபேற்று வீழ்ச்சியை வைத்தே கணிக்கின்றனர். இன்னொரு வகையிலே ஒவ்வொரு பாடசாலையாக சென்று பார்வையிடும் போது நல்ல பெறுபேற்றைபெற்றவர்களும் இருக்கின்றார்கள். ஆனால் சில கல்வி வலயங்களிலே உள்ள குறிப்பிட்ட சில பாடசாலைகளிலே மிக மேசமான நிலையுள்ளதனால் ஒட்டுமொத்தமாக மாகாணத்தில் மிக மோசமான நிலை காணப்படுகின்றது.

இது தவிர்ந்து வட மாகாணத்தில் போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் இன்னும் சரியான வாழ்க்கைக்கு வரவில்லை. இன்னுமொரு 15 வருடங்களின் பின்தான் கூறமுடியும். பட்டினங்களிலும் மற்றைய இடங்களிலும் பெறுபேற்றுக்களின் வீழ்ச்சி இருக்கின்றது, இதற்கு சில பாடசாலைகளிலே ஆசிரியர்கள் தங்களது பணிகளை சீராக செய்யாமல் இருக்கின்றனர். பல பாடசாலைகளில் ஆசிரியர்கள் பின்னூட்டல் செய்வதில்லை. எமது கல்விவளர்ச்சியினை காபொத சாதாரண தரம், 05ம்ஆண்டு புலமைப்பரீட்சையை வைத்து தான் கணிப்பிடுகின்றோம். 06,07,08 ஆகிய வகுப்புக்களிலே முக்கியமான பாடங்களான தமிழ், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கு சீரான கல்வி வழங்கப்படாமல் இருக்கின்றது.

அவர்கள் 09,10 க்கு வந்த பின்னர் தான் எல்லோரும் அவர்களுக்கு கற்றுக்கொடுக்கின்றனர். இதனாலே மாணவர்களுக்கு அடிப்படை அறிவு இல்லாமயால் இப்பரீட்சைகளிற்கு முகம்கொடுக்கும் பொழுது பெரும் பிரச்சனைலீக உள்ளது. இது ஒரு நீண்டகால பிரச்சனை உடனடியாக முழுமையாக மாற்றத்தினை ஏற்படுத்துவது என்பது முடியாத காரியம். படிப்படியாக தான் செய்யமுடியும். இதற்கான பலநடவடிக்கைகளை செய்வதற்கு உரிய வேலைத்திட்டங்களை வலயக்கல்வி பணிப்பாளர் எடுத்துள்ளனர். முக்கியமானது பின்தங்கிய மாணவர்கள் பாடசாலைக்கு வருவதும் அவர்களின் குடும்ப பின்னனியின் மூலம் அவர்களிற்கு இருக்கின்ற பிரச்சனைகளை கண்டறிந்து அதை சீர்செய்வதன் மூலம் இந்த கல்வியின் வளர்ச்சிபோக்கை பார்க்க முடியும். தென்னிலங்கை அல்லது மற்றைய மாகாணங்களுடன் ஒப்பிட்டு பார்க்கும் பொழுது பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் மீது கன்னும் கருத்துமாக இருக்கின்றனர். எமது மாவட்டத்தில் அக்கறை காட்டவில்லை என்று சொல்லவில்லை பெருவாரியான பெற்றோர்கள் தமது பிள்ளைகள் மீது முக்கியமான அக்கறையை காட்டாமையால் தான் நாங்கள் இப்பிரச்சனையை படிப்படியாக பெற்றார் மத்தியில் விழிப்புனர்வை ஏற்படுத்தும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளோம்.

| க.பொ.த சா.த. பரீட்சை பெறுபேறுகளின் போக்குகள் 2009 – 2015 | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மாகாணம் | கடந்த ஏழாண்டுகளில் நடைபெற்ற க.பொ.த சாதாரணதரப் பெறுபேறுகளின் அடிப்படையில் க.பொ.த உயர்தரம் கற்க தகைமை பெற்ற மாணவர் | | | | | | |
| | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 |
| மேல் மாகாணம் | 60.93 | 67.30 | 66.56 | 69.03 | 69.04 | 71.96 | 72.67 |
| மத்திய மாகாணம் | 48.46 | 56.51 | 57.59 | 61.49 | 63.50 | 65.96 | 66.98 |
| தென் மாகாணம் | 53.08 | 60.33 | 62.86 | 66.30 | 67.05 | 73.08 | 75.21 |
| வட மாகாணம் | 55.71 | 56.93 | 54.26 | 59.99 | 62.33 | 64.16 | 60.38 |
| கிழக்கு மாகாணம் | 47.46 | 59.41 | 56.38 | 62.60 | 65.43 | 66.71 | 63.54 |
| வடமேல் மாகாணம் | 53.51 | 62.72 | 62.68 | 66.81 | 68.92 | 70.42 | 69.66 |
| வடமத்திய மாகாணம் | 42.54 | 54.80 | 56.09 | 60.40 | 63.06 | 65.25 | 66.61 |
| ஊவா மாகாணம் | 43.80 | 52.57 | 54.45 | 59.63 | 63.43 | 64.82 | 65.85 |
| சப்பிரகமுவா மாகாணம் | 50.33 | 59.40 | 60.44 | 64.30 | 66.60 | 68.26 | 69.97 |



தகுந்தாற் போல் கல்வித்திட்டங்களை மாற்றியமைக்காமல் இருக்கின்றனர். நவீன பயிற்சி முறைகள் என்பன ஆசிரியர் கல்வி நிறுவனங்களால் முறையாகப் பின்பற்றப்படாமல் காணப்படுகின்றது. குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் முதலிடத்திலிருந்த கல்வி இன்று கீழ் நிலையில் இருப்பதற்கு ஆசிரியர்கள் வகுப்பறையில் இல்லாமையே காரணம் என வடக்கு மாகாண ஆளுனர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தவிர்ந்து சில ஆசிரியர்கள் நீண்ட விடுமுறைகளை எடுப்பது மற்றும் வெளிநாடுகளுக்கு செல்கின்றமை வடமாகாண கல்வி வீழ்ச்சியில் தாக்கத்தை ஏற்படுத்துவதோடு கடந்த காலத்தை விட தற்காலத்தில் சிலர், சம்பளத்திற்கு வேலைபார்க்கும் தொழிலாகத்தான் ஆசிரியத்தொழிலை கருதுவதும், பாடத்திட்டத்தில் ஆர்வமற்ற, ஆழுமையற்ற சூழல், கற்பித்தல் முறையில் தெளிவின்மை, குறிப்பிட்ட மாணவர்களுக்கு சொல்லிக்கொடுத்து, மந்தமான மாணவர்களை மட்டம் தட்டுவது, தன்னிடம் ரியூசன் படிக்கும் மாணவ்ர்களுக்கு மட்டும் நன்றாக சொல்லிக்கொடுப்பது, சீரற்ற

| தற்போது வடமாகாணத்தில் இயங்குகின்ற பாடசாலைகளின் மாவட்ட ரீதியான விபரம் வருமாறு | | | |
|---|---|---|---|
| மாவட்டம் | பாடசாலை எண்ணிக்கை | தற்போது இயங்கும் பாடசாலைகள் | மூடப்பட்ட பாடசாலைகள் |
| வவுனியா | 204 | 184 | 20 |
| மன்னார் | 146 | 141 | 05 |
| கிளிநொச்சி | 112 | 104 | 08 |
| முல்லைத்தீவு | 126 | 123 | 03 |
| யாழ்ப்பாணம் | 503 | 446 | 57 |
| | 1091 | 998 | 93 |

| வடக்கு மாகாணத்தில் உள்ள விசேட தேவையுடைய மாணவர் எண்ணிக்கையும் அவர்களுக்கு கற்பிக்கும் ஆசிரியர் எண்ணிக்கையும் | | |
|---|---|---|
| கல்வி வலயம் | விசேட தேவையுடைய மாணவர் எண்ணிக்கை | விசேட தேவையுடைய மாணவரகளுக்கு கற்பிக்கும் ஆசிரியர் எண்ணிக்கை |
| தீவகம் | 466 | 2 |
| யாழ்ப்பாணம் | 746 | 11 |
| கிளிநொச்சி | 842 | 12 |
| மடு | 278 | 8 |
| மன்னார் | 611 | 8 |
| முல்லைத்தீவு | 655 | 12 |
| தென்மராட்சி | 34 | 4 |
| துணுக்காய் | 298 | 10 |
| வடமராட்சி | 89 | 6 |
| வலிகாமம் | 1090 | 8 |
| வவுனியா வடக்கு | 204 | 5 |
| வவுனியா தெற்கு | 388 | 6 |
| வடமாகாணம் | 5701 | 92 |

பழக்கவழக்கங்களை மாணவர்கள் முன்பு செய்தல் போன்ற பொறுப்பற்ற நடவடிக்கைகளால் மாணவ சமுதாயம் ஒழுக்கங்களை மீறுபவர்களாக உள்ளனர்.

அத்தோடு ஒரு சில ஆசிரியர்களின் நடவடிக்கைகள் மாணவர் சமுதாயத்திலும், பெற்றோர்கள் மத்தியிலும் ஒருவித அச்ச உணர்வுகளை ஏற்படுத்துவதாகவும், ஆசிரியர்கள் மீதுள்ள நன்மதிப்பை குறைக்கும் விதமாகவும் உள்ளது. தற்கால சமூகம் தாழ்ந்து போனதற்கு ஆசிரியர் சமூகத்தில் ஏற்பட்ட தாழ்வும் ஒரு காரணம் என்பதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். ஆசிரியர்கள் பாடவிடயங்களை கற்பிக்கும் அளவுக்கு, பரீட்சை மாதிரிவழிகாட்டல்மற்றும்கற்பதற்கு உரிய வழிகாட்டல் போன்றவற்றைச் செய்வது நடைமுறையில் குறைவாகவுள்ளதுடன் மாணவர்களின் சுயகற்றலுக்கு போதியளவு நேரத்தினை வழங்காமல் இருப்பதுடன் கணிசமானளவு ஆசிரியர்கள் தமக்குரிய பாடத்திட்டத்தை நிறைவு செய்யாமல் இருப்பதால் மாணவர்களின் அடைவு மட்டங்களில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையில் மனிதவளம் மற்றும் பௌதீகவளப்பரம்பல் சமனற்றுக் காணப்படுகின்றதுடன் மாகாண, தேசிய பாடசாலைகளுக்கிடையே ஏற்றத்தாழ்வுகள் காணப்பட்டு சில பாடசாலைகள் சிறப்பான பௌதீகவளம் மற்றும் மனித வளங்களை கொண்டிருக்கும் அதே வேளை மாணவர் எண்ணிக்கை குறைவாகக் காணப்படுகின்றது. ஆனால் அருகிலுள்ள வேறுசில பாடசாலைகள் அளவுக்கதிகமாக மாணவர்களை உள்வாங்குவதும் சில பாடசாலைகளின் அதிபர்களின் வினைத்திறனற்ற நிர்வாக முறைமையை ஆற்றுகின்றனர். அன்மையில் வவுனியாவின் பிரபல பாடசாலை ஒன்றில் மாணவர்களின் ஒழுங்கு நடவடிக்கையில் ஈடுபட்ட ஆசிரியர் ஒருவரை தனிப்பட்ட பழிவாங்களாக வேறு பாடசாலைக்குமாற்றியிருந்தனர், இதுபோன்ற செயற்பாடுகளும் அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்களின் சுயமான சிந்தனைக்கு

தொடர்ச்சி 10-ம் பக்கம்



# குசும்புக்காரன் பக்கம்

வடக்கில் ஆசிரியர்களின் இடமாற்றம் ஒழுங்கு முறையில் நடைபெறுவதில்லை. பல வருடங்களாக ஒரே பாடசாலையில் ஆசிரியர்கள் தொழில் செய்து வருகின்றனர். இவர்களுக்கான இடமாற்றம் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கச்சொல்லி கவனயீர்ப்பு போராட்டங்கள் பல மேற்கொண்டும் இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. கல்வி சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தரத்தில் உள்ளவர்கள் தமக்கு வேண்டப்பட்டவர்ளுக்கு அவர்கள் விரும்பும் பாடசாலைக்கு இடமாற்றத்தை வழங்கி விடுகின்றனர். இதனால் ஒரு பாடசாலையில் பணியாற்றும் காலப்பகுதி முடிவடைந்தும் இடமாற்றமின்றி பல ஆசிரியர்கள் இருக்கின்றனர். இடமாற்றமின்றி இருக்கும் ஆசிரியர்களால் பல பிரச்சினை அந்தப் பாடசாலைகளுக்கு ஏற்படுகிறது.

யாழில் பிரபல பாடசாலை ஒன்றில் உபஅதிபராக 30 வருடங்களுக்கு மேலாக ஒருவர் பணியாற்றி வருவதாக தெரிவிக்கப்படுகிறது. இவர் அந்தப் பாடசாலையை தனது சொந்தப் பாடசாலை போல் பயன்படுத்தி வருகிறார். இவரால் அந்தப் பாடசாலைக்கு கெட்ட பெயர் தான் ஏற்பட்டுள்ளது. வெளிநாட்டில் இருக்கும் ஒருவருக்கு சொந்தமாக யாழ் வீட்டில் நீண்ட காலமாக இருக்கும் ஒருவர் தனக்குத் தான் இந்த வீடு சொந்தம் என்று எழும்ப மனமில்லாமல் இருப்பது போல நீண்டகாலமாக இவர் இந்தப் பாடசாலையில் பணியாற்றி வருவதால் தனக்குத் தான் சொந்தம் என்று நினைக்கிறார் போலும்.

அதாவது பிள்ளைகளை இவரின் பாடசாலையில் சேர்ப்பதற்காக வரும் பெற்றோரிடம் இலட்சக் கணக்கில் பணம் வசூலிக்கிறாராம். கேட்டால் பிள்ளைகள் படிப்பதற்கு தேவையான தளபாடங்கள் வாங்க வேண்டும் என்பதற்காகத் தான் பணம் அறவிடப்படுகிறது என்று காரணம் கூறி ஒருவாறு பெற்றோரிடம் பணத்தை பெற்றுவிடுவாராம்.

இடமாற்றம் வரும் ஒவ்வொரு தடவையும் மேலதிகாரியை பிடித்து இடமாற்றத்தை ரத்து செய்து விடுவாராம். மேலதிகாரிகளின் பிள்ளைகள் இந்தப் பாடசாலையில் படிப்பதால் இவரின் இடமாற்றத்தை இல்லாமல் செய்து விடுவார்களாம். இப்படியாக இவருக்கும் மேலதிகாரிகளுக்கும் ஒரு டீலிங் இருக்கிறது. பிறகென்ன சாகுமட்டும் இவர் இந்தப் பாடசாலையில் குப்பை கொட்ட வேண்டியது தானே.

இந்தப் பாடசாலையில் அதிபராக வேண்டும் என்ற கனவுடன் இருக்கிறார். அதற்காக அதிபருக்கும் மாணவர்களுக்கும் இடையில் சண்டையை மூட்டி விடுவாராம். இதனால் மாணவர் பிரச்சினை பல இடம்பெற்று சந்திக்கு வந்த கதை பல உண்டு. மூன்று ஆசிரியர்கள் இவருக்கு பக்க பலமாக இருப்பதால் வீறுகொண்டு தனது இலட்சியத்தை நிறைவேற்ற துடியாய் துடிக்கிறாராம். அதனாலை தான் மாணவர்களை சீர்படுத்த முடியாமல் பிரச்சினைக்குரிய பாடசாலை என்ற பெயரை எடுத்துக் கொடுத்துள்ளார்.

உப அதிபராக இருந்து கொண்டு பிஸ்னஸ்சிலும் மும்முரமாக ஈடுபடுகிறாராம். அதாவது வீடுகளை எடுத்து வைத்து வாடகைக்கு விட்டு உழைக்கிறாராம். அது பரவாயில்லை பாடசாலைக்கே வட்டிக்கு விடுகிறார் என்றால் சும்மாவா. பாடசாலை நேரங்களில் வட்டிக் கணக்குப் பார்க்கத் தான் இவருக்கு நேரம் வரும் போல. வட்டி வாத்தி என்று மாணவர்கள் இவரைப் பார்த்ததும் கேலி செய்வதுண்டு. யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற வன்முறையில் கைது செய்யப்பட்ட மாணவர்கள் அதிகம் உள்ள பாடசாலை இந்தப் பாடசாலை ஆகும். மாணவர்களை நல்வழிப்படுத்த முடியாமல் இருக்கும் இவரால் எப்படி இந்தப் பாடசாலை அதிபராக வந்து சாதிக்க முடியும். இடமாற்றமின்றி இருப்பதால் வந்த வினை இது. காலத்துக்கு ஏற்ப இவரை இடமாற்றியிருந்தால் இவர் இப்படி நடந்திருக்க வாய்ப்பு இருந்திருக்காது.

மேலதிகாரிகள் தமது கடமையை சரிவர செய்வார்கள் ஆயின் வடக்கில் கல்வியை மட்டுமல்ல பண்பாட்டையும் கட்டிக்காக்க முடியும். இதனை உணரும் காலம் எப்பொழுது வரும். அப்பொழுது வடக்கில் கல்வி கொடிகட்டிப் பறக்கும் என்பது உண்மை.

9-ம் பக்கம் தொடர்ச்சி

**வடக்கு மாகாணத்திலுள்ள முன்பள்ளி ஆசிரியர்களின் கல்வித் தகைமையும் தொழில் தகைமையும்**

| வலயம் | முன்பள்ளி ஆசிரியர் எண்ணிக்கை | கல்வித் தகைமை | | | தொழில் தகைமை | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | AL Pass | OL Pass | Without OL Pass | Aruthal | OUSL | Not Both |
| தீவகம் | 131 | 44 | 5 | 58 | 84 | 6 | 41 |
| யாழ்ப்பாணம் | 367 | 135 | 17 | 153 | 227 | 26 | 114 |
| கிளிநொச்சி | 450 | 72 | 32 | 198 | 392 | 6 | 52 |
| மடு | 85 | 35 | 3 | 40 | 78 | 0 | 7 |
| மன்னார் | 175 | 99 | 0 | 38 | 147 | 5 | 23 |
| முல்லைத்தீவு | 213 | 39 | 11 | 117 | 199 | 2 | 12 |
| தென்மராட்சி | 131 | 53 | 1 | 59 | 92 | 0 | 39 |
| துணுக்காய் | 156 | 28 | 11 | 115 | 144 | 6 | 6 |
| வடமராட்சி | 274 | 96 | 7 | 58 | 172 | 1 | 101 |
| வலிகாமம் | 362 | 158 | 15 | 85 | 273 | 6 | 83 |
| வவுனியா வடக்கு | 85 | 20 | 4 | 58 | 76 | 1 | 8 |
| வவுனியா தெற்கு | 251 | 82 | 27 | 99 | 187 | 6 | 58 |
| வடமாகாணம் | 2680 | 861 | 133 | 1078 | 2071 | 65 | 544 |

முட்டுக்கட்டைகளை ஏற்படுத்தல், தேசிய மட்டத்தில் நடைபெறும் பரீட்சை வினாத்தாள்களுக்கு முரணான வகையில் சில பாடங்களின் வினாத்தாள்கள் வலய மட்டங்களிலும் மாகாண மட்டங்களிலும் தயாரிக்கப்படுதல், மாகாண மட்டத்தில் பெரும் தொகையான பணம் செலவிடப்பட்டு நடைபெறும் கல்விச் செயலமர்வு மற்றும்முன்னோடிக் கருத்தரங்குகள் வினைத்திறனற்றதாக காணப்படுகின்றது.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைவரை தங்கள் பிள்ளைகள் மீது பெற்றோர் காட்டும் அக்கறை, இடைநிலைக்கல்வியில் தொடர்ந்து நீடிக்காததுடன் வீட்டில் பிள்ளை கற்றலுக்கான பௌதீக வளங்களின் பற்றாக்குறை, குடும்ப அங்கத்தவர்களின் ஒத்துழைப்பின்மை என்பன மாணவர்களின் பெறுபேற்றுக்குறைபாட்டில் பெருஞ்செல்வாக்கினைச் செலுத்துகின்றன. அத்துடன் குடும்ப அங்கத்தவர்கள் தென்னிந்திய சினிமா, தொலைக் காட்சிதொடர் நாடகங்கள் மற்றும்கிரிக்கெட் போட்டி ஒளி பரப்புக்களுக்கு அடிமையாகிப் போகின்றமை காரணமாக மாணவர்களின் கற்றல் நேரங்கள், பொழுது போக்கிற்கான நேரங்களாக மாற்றமடைகின்றதோடு பெற்றோர், குடும்ப அங்கத்தவர்களிடையே அதிகரித்துச் செல்லும் மதுப்பாவனை மற்றும் போதைப் பொருள் பாவனை காரணமாக குடும்ப வன்முறைகள் அதிகரித்து காணப்படுவதால் மாணவர்கள் மன உளைச்சலுக்கு ஆளாவதுடன் அவர்களின் கற்றல் செயற்பாடுகளும் பாதிப்பாக அமைவதால் மாணவர் கற்றலில் எதிர்மறை விளைவுகளை ஏற்படுத்துகின்றன.

இதுதவிர்ந்த கொலை, கொள்ளை மற்றும் குழுமோதல்கள் அதிகரித்து செல்வதுடன் தென்னிந்திய சினிமாக்கள், தொலைக்காட்சி தொடர்களில் இவற்றை ஊக்குவிக்கின்றன. இதனால் பாலியல் துஸ்பிரயோகங்கள், சிறுவர் துஸ்பிரயோகங்கள், இளவயதுத் திருமணங்கள் தொடர்பான செய்திகள் அடிக்கடி ஊடகங்களில் வெளிவருவதுடன் இலங்கையின் போதைப்பொருள் இடமாற்று மையமாக யாழ்ப்பாணம், மன்னார் மாவட்டங்கள் விளங்குவது அனைவருக்கும் கவலை தரும் விடயமாகும். கடந்த காலங்களில் பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் மத்தியிலும் தற்கொலை முயற்சிகள் அதிகரித்து செல்வதுடன் அதற்கான எண்ணங்களும் ஏற்படுவதும், முகநூல் போன்ற சமூகவலைத்தளங்களின் தவறானபாவனை காரணமாக அவைசார்ந்த குற்றங்களும் அதிகரித்துக்காணப்படுகின்றன.



சமூகம் கேளிக்கைகள் மற்றும் கொண்டாட்டங்களுக்கு காட்டும் அளவுக்கதிகமான அக்கறையை மாணவர்களின் கல்வி மற்றும்ஒழுக்க மேம்பாட்டில் காட்டுவது குறைவாகவுள்ளது. குறிப்பாக பாடசாலை நேரங்களில் கோயில்களில் ஒலிபெருக்கிகள் அளவுக்கதிகமாக ஒலித்துக்கொண்டிருக்கின்றமை முக்கிய மனதாகும். இது தவிர்ந்த 2015 ஆம் ஆண்டு நடைபெற்ற க.பொ.த சாதாரண தரப்பரீட்சையில் தேசியரீதியாக சிங்கள மொழிமூலம் முதன்மை னிபெற்ற மாணவர் பெயர் விபரங்கள், பரீட்சைத்திணைக்களத்தால் அறிவிக்கப்பட்ட அதேவேளை, தமிழ் மொழிமூலம் முதன்மை பெற்ற மாணவர் பெயர் விபரங்கள் அறிவிக்கப்படவில்லை. அத்துடன் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் கல்வியில் திட்டமிட்டு அழிக்கப்படுகின்றன என்ற உண்மையை நாம் அனைவரும் உணர வேண்டும் என்பதோடு இன்னமும் வெளிப்படுத்த முடியாத அபாயகரமான நிலைமைகள் உள்ளது.

வட மாகாணத்தில் யுத்தத்திற்கு முன்பு 1091 பாடசாலைகள் இயங்கியபோதும் இன்று வட மாகாணத்தின் 12 கல்வி வலயத்திலும் மொத்தமாக 998 பாடசாலைகளே இயங்குகின்றதாக வட மாகாண கல்வி அமைச்சின் புள்ளி விபரங்கள் உறுதிப்படுத்தியுள்ள.



இலங்கை கடற்படையின் வடக்கு கடற்படை கட்டளையகத்தினால் யாழ். தீவுப் பகுதி பாடசாலை மாணவர்களுக்கு காங்கேசன்துறை பிரதேசத்தில் இரண்டாம் கட்டமாக உதைபந்தாட்ட பயிற்சியொன்று 25 திகதி நடாத்தப்பட்டது. இச்செயற்றிட்டம் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவிந்தர விஜேகுணவர்தனவின் வழிகாட்டலின் கீழ் ஆரம்பிக்கப்பட்டது.

சென்றவார தொடர்ச்சி



**V.P. குமார்**
சுற்றுச் சூழலியல் ஆய்வாளர்



# யாழ் மாவட்டத்தில் பாரிய சவாலாக மாறிவரும் திண்மக்கழிவுகள்.!

## சிந்திப்போம் பழகுவோம் பின்பற்றுவோம்

திண்மக் கழிவுகளை நிரந்தரமாக முகாமைப் படுத்துவதற்கு எமது நடத்தையில் மாற்றம் கொண்டுவரவேண்டும். நாங்கள் மாறுவதுடன் அடுத்த சந்ததியை சரியான முறையில் விழிப்பூட்டவேண்டும். முன்பள்ளி மாணவர்களிலிருந்து விழிப்புணர்வுச் செயற்பாட்டை ஆரம்பிக்கவேண்டும். ஒவ்வொரு முன்பள்ளி ஆசிரியர்களும் தங்கள் முன்பள்ளிகளில் கழிவற்றல் கூடைகளை நிற அடிப்படையில் தரம் பிரித்து வைத்து பிள்ளைகளால் வீசப்படும் கழிவுகளை அதற்குள் போடப் பழக்கவேண்டும். இதை முன்பள்ளி ஆசிரியர்கள் உணர்வுரீதியாக பழக்கவேண்டும். இதை நாம் முன்பள்ளியில் விதைக்கும் போது சமூகத்தில் அது விருட்சமாகும். கழிவுகளை கண்ட இடங்களில் வீசும் மனப்பாங்கு உடைந்து போய் பாதுகாப்பான கழிவகற்றல் என்ற நிலைக்கு அவர்கள் உந்தப்படுவதுடன் அவர்கள் தம் சந்ததிக்கும் இதனை எடுத்துச் செல்வார்கள்.

இதேபோன்று பாடசலைகளில் ஒவ்வொரு. வகுப்பறையிலும் கடதாசி கழிவுகள், உணவுக் கழிவுகள், பிளாஸ்ரிக் கழிவுகள் என தரம் பிரித்து வர்ண அடிப்படையில் மூன்று கூடைகள் வைக்கப்பட்டு கழிவுகள் மாணவர்களால் அதனுள் போடுவது பார்க்கப்படுவதுடன் பாடசாலைக்காக வைக்கப்பட்ட பெரிய கூடையில் அவ்வாறான ஒழுங்கு முறையில் போடப்படவேண்டும். வகுப்புக்களின் தூய்மையாக்கத்திற்கு எப்படி மாணவர்கள் பிரிக்கப்படுகின்றார்களோ அதே போல கழிவகற்றலுக்கும் மாணவர்கள் பொதுவாக நியமிக்கப்படவேண்டும். இது அதிபர் ஆசிரியர்களின் ஒழுங்கமைப்பின் கீழ் மேற்கொள்ள வேணடும். பாடசாலைகள் உற்பத்திதிறன் மேம்பாட்டில் கழிவகற்றலை பிரதான விடயமாக வளர்ப்பதுடன் பாடசாலையின் பிரதான ஒழுங்குவிதியாக கொண்டுவரவேண்டும்.

அரச அலுவலகங்கள் கிளைரீதியாக கடதாசி கழிவுகள், உணவுக் கழிவுகள், பிளாஸ்ரிக் கழிவுகள் என தரம் பிரித்து வர்ண அடிப்படையில் மூன்று கூடைகள் வைக்கப்பட்டு அலுவலகத்திற்கென ஒதுக்கப்பட்ட மேற்படி மூன்று அடிப்படையிலான பெரிய கூடைகள் வைக்கப்பட்டு கிளைரீதியாக இருக்கும் கூடைகளிலிருந்து பெரிய கூடைக்கு தர அடிப்படையிலேயே சேர்க்கப்படவேண்டும். இங்கு அலுவலர்கள் காலை உணவோ அல்லது மதிய உணவோ சாப்பிட்டு முடிந்தவுடன் உணவின் மீதியை உணவுக் கழிவுக்குள்ளும் மதிய உணவுக்கான கடதாசியை கடதாசிக் கழிவுக்குள்ளும் போடும் போது உணவுக்கழிவை இலகுவாக அகற்றமுடியும். பொலீத்தீன் கழிவை இலகுவாக கையாள முடியும். எல்லா இடங்களிலும் உணவுக்கழிவை மதிய உணவுக்கான கடதாசியுடன் சேர்த்து கூடைக்குள் வீசுவதனால் அவற்றை அகற்றுவது மிகவும் கடினமாவுள்ளது. இதேபோன்று அலுவலக நிகழ்வுகளினபோது தேநீர் பரிமாறப்படும் போது சில்வர் பேணிகள் பயன்படுத்தப் படவேண்டும். பயன்படுத்திய பின் அவை கொதிக்க வைத்த நீரில் கழுவி மீளவும் பயன்படுத்தலாம். கொழும்பின் பிரதான உணவுச் சாலைகளில் இதனை நாம் காணலாம்.

தனியார் அலுவலகங்களும் வர்த்தக நிலையங்களும் மேற்படி முறையில் கழிவுகளை தரம்பிரித்து சேகரித்து மாநகரசபைக்கு வழங்கவேண்டும். யாம்ப்பாண மாநகரசபை வினைத்திறன்மிக்க திண்மக்கழிவு முகாமைத்துவத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். இயலுமான வகையில் தனது கழிவகற்றல் முகாமைத்துவத்திற்கான உபகரணவசதிகளை விருத்திசெய்ய வேண்டும். பொது மக்களை விழிப்பூட்டி தரம் பிரித்து கழிவுகளை சேகரித்து அகற்றவேண்டும். சேதனக் கழிவுகளிலிருந்து பசளை தயாரிக்கும் முயற்சியை மேலும் வினைத்திறனாக்கவேண்டும் யாழ் மாநகரசபை கொழும்பிலுள்ள உற்பத்தி நிறுவனங்களுடன் ஒப்பந்தங்களை மேற்கொண்டு இங்கு தரம்பிரித்து சேகரிக்கப்படும் பிளாஸ்ரிக் பொலீத்தீன் கடதாசி உள்ளிட்ட அனைத்து மீள்சுழற்சிக்கு உட்படுத்தக் கூடிய பொருட்களை மீள்சுழற்சிக்காக மேற்படி நிறுவனங்களுக்கு அனுப்புதல் வேண்டும். மாநகரசபையின் எல்லைப் பகுதியில் கழிவுகள் எல்லாம் ஒன்றாகவே எடுக்கப்படுகின்றன. இதனால் அவற்றைக் கையாள்வதில் சபை சவால்களை எதிர்நோக்குகின்றது. உண்மையில் சாரியான முறையில் கழிவு சேகரிக்கும் நாட்கள் வடிவமைக்கப்பட்டு பொதுமக்களிடமிருந்து கழிவுகள் தரம்பிரித்து அதற்கென ஒதுக்கப்பட்ட தனித்தனியான வாகனங்கள் மூலம் சேகரிக்கப்பட்டு சேதனக் கழிவுகள் கூட்டுப்பசளைய பக்கத்திற்கும் மீள்சூழற்சிப் பொருட்கள் கொழும்புக்கும் அனுப்பப்படவேண்டும். **(தொடரும்)**



போதைப்பொருள் பாவனைக்கு எதிராக புத்தளம் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலை மாணவர்களால் விழிப்புணர்வு பேரணி முன்னெடுக்கப்பட்டுள்ளது. புத்தளம் கல்வி வலயத்திற்குட்பட்ட உடப்பு மற்றும் ஆண்டிமுனை தமிழ் மகா வித்தியாலயங்களின் மாணவர்களால் இன்று காலை 8 மணியளவில் இந்த விழிப்புணர்வு பேரணி நடத்தப்பட்டுள்ளது.

வடமாகாணத்திற்கான பொருளாதார மத்திய நிலையத்தை ஓமந்தையில் அமைக்குமாறு வலியுறுத்தி 28 ஆம் திகதி பேரணியும் அடையாள உண்ணாவிரதப் போராட்டமும் முன்னெடுக்கப்பட்டிருந்தன. உத்தேச பொருளாதார மத்திய நிலையத்தை விவசாயிகளின் நலன் கருதி ஓமந்தையில் இடமாற்றி அமைத்துத் தருமாறு வலியுறுத்தி வவுனியா மாவட்ட விவசாய சம்மேளனம் பேரணியை ஏற்பாடு செய்திருந்த இந்தப் பேரணி வவுனியா காமினி வித்தியாலயத்திற்கு அருகில் ஆரம்பமாகி வவுனியா மாவட்ட செயலகம் வரை சென்று முடிவடைந்தது.





# ஒற்றைக்கால் திருடன்

வ.நரேஜி

ஒவ்வொரு மனிதனும் பிறக்கும் போது நல்லவனாகவே பிறக்கின்றான். வாழும் போது ஒவ்வொருவரும் செல்லும் பாதைகளே அவர்களின் எதிர்காலத்தை தீர்மானிக்கின்றன. அந்த வகையில் சிலர் தவறான வழியில் சென்று பணத்தை சம்பாதிக்க முயன்று இறுதியில் வாழ்க்கையை துளைத்தும் விடுகிறார்கள். அந்த வகையில் திருட்டில் ஈடுபட்டு தனது கால் ஒன்றை இழந்த இளைஞர் தொடர்ந்தும் ஒற்றைக் காலுடன் திருடி தற்போது கம்பிக் கூட்டிற்குள் இருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

வவுனியாவில் வீடு ஒன்றில் புகுந்து திருடிய வேளை அவ் வீட்டு உரிமையாளரால் குறித்த நபர் அடையாளம் காணப்பட்ட நிலையில் பொலிசாருக்கு தகவல் கொடுக்கப்பட்டிருந்தது. அது தொடர்பாக விசாரணைகளை ஆரம்பித்த வவுனியா குற்றத்தடுப்பு பொலிசார் சந்த கே நபரை கடந்த 26 ஆம் திகதி கைது செய்தனர். அவரிடம் மேற்கொண்ட விசாரணைகளில் பல அதிர்ச்சித் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஒற்றைக்காலுடன் திருட்டில் ஈடுபட்ட குறித்த நபரை வ்ன்னிப் பிராந்திய பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக் கோன், சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் வசந்த விக்கிரமசிங்க, உதவி பொலிஸ்



## கிரைம் டயரி

அத்தியட்சகர் பியசிறி பெர்ணான்டோ ஆகியோரின் அறிவுறுத்திலின் பிரகாரம் வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சோமரத்தின விஜயமுனியின் மேற்பார் வையில் வவுனியா குற்றத்தடுப்பு புலனாய்வு பிரிவின் உப பொலிஸ் பரிசோதகர் ரட்ணாயக, பொலிஸ் சார்ஜன்ட் (42521) ஜேசுதாஸ், கான்ஸ்டபிள்களான (36508) என்.எம். ஜெயபிரகாஸ், (36693) ஜெயதிலக, (5239) கருணாதிலக, (69679) விஜயபண்டா ஆகியோர் கொண்ட குழு கைது செய்ய வலை வீசியிருந்தது. இதனடிப்படையில் கடந்த 26 ஆம் திகதி கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுக்கமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித் தனர்.



வவுனியா சாளம்பைக்குளத்தை சேர்ந்த முகமட் சப்றின் என்ற நபர் 2015.7.9 அன்று சிந்தாமணிபிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் உள்ள வீடொன்றில் திருடிய போது வீட்டின் உரிமையாளரினால் அடை யாளம் காணப்பட்டிருந்தார். இவரை கடந்த 26.6.2016 அன்று வவுனியா பொலிஸார் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்ட போது பல்வேறான திருட்டு சம்பவங்களுடன் அவருக்குதொடர்பிருந்தது தெரியவந்துள்ளது.

சந்தேகநபரின் தகவலின் படி 2015.12.16 அன்று குட்செட்விதியில் வர்த்தகர் ஒருவரின் விட்டில் திருடியமை, 2016.3.6 அன்று குட்செட் வீதியில் இரவு வேளையில் வீடொன்றில் திருடியமை, 2016.4.7 அன்று தோணிக்கல் சிவன்கோவில் பகுதியில் வீடொன்றினுள் புகுந்து திருடியதுடன் 2016.6.20 ஆம் திகதி மீண்டும் குட்செட் விதியில் வீடொன்றில் திருடிய தகவலை விசாரணையின் போது வெளியிட்டுள்ளார்.

இதேவேளை கடந்த 2014 ஆம் ஆண்டு தோணிக்கல் சிவன்கோவில் பகுதியில் வீடொன்றில் திருடி வீட்டின் மதிலால் குதித்தபோது மதில் சரிந்து வீழ்ந்ததில் படுகாயமடைந்த குறித்த நபர் அனுராதபுரம் வைத்தியசாலையில் ஒரு காலை இழந்தமையையும் தெரிவித்திருந்தார். இந் நிலையில் குறித்த சந்தேக நபரை வவுனியா நீதிமன்றில் 27 ஆம் திகதி ஆஜர்ப்படுத்தியபோது 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்திர விட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித் தனர்.

இதேவேளை குறித்த சந்தேக நபர் கொழும்பில் உள்ள பிரபல வர்த்தகர் ஒருவருடனும் தொடர்புகளைப் பேணி திருடிய நகைகளை விற்பனை செய்து வந்தமை அம்பலமாகியுள்ளது. கைது செய்யப்பட்ட நபர் வழங்கிய தகவலின் அடிப்படையில் கொழும்பு மோதரை மாதம்பிட்டியை சேர்ந்த நகை விற்பனை முகவர் ஒருவரை கைது செய்த பொலிஸார் அங்கிருந்து சந்தேக நபரினால் திருடப்பட்டு விற்பனை செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படும் நகைகளில் ஒரு பகுதியும் மீட்கப்பட்டுள்ளதுடன் குறித்த நகை முகவரை நீதிமன்றத்தில் 28 ஆம் திகதி செவ்வாய்கிழமை ஆஜர்ப்படுத்திய நிலையில் அவரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்திரவிட்டுள்ளது எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.


'சித்திரவதைக்கு முற்றுப்புள்ளி' என்ற தொனிப்பொருளின் கீழ் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த நடைபவனியில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் இணைந்து கொண்டார். இந்நடைபவனி பொரள்ளையிலுள்ள இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தின் முன்னால் 30 ஆம் திகதி முற்பகல் இடம்பெற்றது.




யாழ். வலிகாமம் வடக்கில் உத்தியோக பூர்வமாக மக்களிடம் கையளிக்கப்பட்ட காணிகளை நேரில் சென்று பார்வையிடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதற்கமைய கட்டுவன், குரும்பசிட்டி, வறுத்தலைவிளான் மற்றும் காங்கேசன்துறை ஆகிய பகுதிகளில் விடுவிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த மக்கள் தமது சொந்தக் காணிகளைப் பார்வையிட்டனர்.



# நட்புக்கு எம்.ஜி.ஆர் கொடுத்த மரியாதை!



தாய்க்கு தலைமகன் படப்பிடிப்பில் சின்னப்பா தேவரை அன்போடு முத்தமிடுகிறார் எம்.ஜி.ஆர்.



எம்.ஜி.ஆர் **100** நெடுந்தொடர் 12

ஸ்ரீதர் சுவாமிநாதன்

**எம்.ஜி.ஆர்** நடித்த படங்களில் ஒன்று 'சாலிவாஹனன்'. இந்தப் படத்தில் அவருக்கு சிறிய வேடம்தான். படத்தின் கதாநாயக நடிகருடன் எம்.ஜி.ஆருக்கு கத்தி சண்டை காட்சி. எம்.ஜி.ஆர். முறையாக வாள் சண்டை, சிலம்பம், குதிரையேற்றம் போன்றவற்றை கற்றவர். வாள் வீச்சில் ஆக்ரோஷமாக சண்டையிடுவதிலாகட்டும், சில நேரங்களில் எதிராளியை நீ எனக்கு சமமல்ல என்பதுபோல, அலட்சியமாக எதிர்கொள்வதை காட்டும் வகையில் சிரித்துக் கொண்டே ஸ்டைலாக வாள் வீசுவதிலாகட்டும், எம்.ஜி.ஆருக்கு நிகர் அவர்தான். 'சாலிவாஹனன்' படத்தின் படப்பிடிப்பில் கதாநாயக நடிகரைவிட எம்.ஜி.ஆர். சிறப்பாக கத்தி சண்டை காட்சியில் நடித்தார்.

அவரது வேகத்துக்கு கதாநாயகனாக நடித்த வரால் ஈடு கொடுக்க முடியவில்லை. இது குறித்து இயக்குநரிடம் அவர் தரப்பில் புகார் செய்யப்பட்டது. படத்தின் இயக்குநர் கதாநாயகனுக்கு ஆதரவாகவே இருந்தார். எம்.ஜி.ஆரின் வாள் வீச்சு வேகத்தை குறைத்துக் கொள்ளும்படி கூறியதுடன், ஏற்கெனவே, அவர் நடித்த சில காட்சிகளும் 'கட்' செய்யப்பட்டன. இதுபற்றி, உடன் நடிக்கும் ஸ்டன்ட் நடிகரிடம் எம்.ஜி.ஆர். தனது நிலையைச் சொல்லி வருத்தப் பட்டார். அந்த ஸ்டன்ட் நடிகரும் "உங்களிடம் திறமை இருக்கிறது, கண்டிப்பாக முன்னுக்கு வருவீர்கள், வருந்தாதீர்கள்" என்று அன்பாக பேசி எம்.ஜி.ஆருக்கு ஆறுதல் கூறினார்.

அந்த ஸ்டன்ட் நடிகர் கூறியபடி அடுத்த சில ஆண்டுகளில் எம்.ஜி.ஆர். கதாநாயகனாக உயர்ந்தார். படத்தின் பெயர் 'ராஜகுமாரி'. பல போராட்டங்களுக்குப் பிறகுதான் கதா நாயகன் வாய்ப்பு அவருக்கு வந்தது. அந்த நிலையிலும் தனக்கு வாய்ப்பு கிடைத்ததே போதும் என்று இல்லாமல், சிறிய வேடங்களில் தலைகாட்டி வந்த, தனக்கு ஆறுதல் சொன்ன ஸ்டன்ட் மாஸ்டருக்கும் 'ராஜகுமாரி' படத்தில் வாதாடி வாய்ப்பு வாங்கிக் கொடுத்தார். தொடர்ந்து தன் படங்களில் அவருக்கு வாய்ப்பு கிடைக்கச் செய்தார். அந்த ஸ்டண்ட் நடிகர்... 'சாண்டோ' சின்னப்பா தேவர். எம்.ஜி.ஆர். நடித்துக் கொடுக்க அவர் தயாரித்த முதல் படம் 'தாய்க்குப் பின் தாரம்'. முதல் படமே அபார வெற்றி. ஸ்டன்ட் நடிகராக இருந்த சின்னப்பா தேவரை பட முதலாளியாக உயர்த்தினார் எம்.ஜி.ஆர்.

'தாய்க்குப் பின் தாரம்' படத்தின் தெலுங்கு டப்பிங்கில் தனக்காக வேறு ஒருவரின் குரலை 'டப்' செய்து தேவர் வெளியிட்டது தொடர்பாக, இடையில் சில காலம் எம்.ஜி.ஆருக்கும் சின்னப்பா தேவருக்கும் ஊடல் ஏற்பட்டாலும் அதனால் அவர்களது நட்பு பழுதுபட்டதில்லை. சொல்லப்போனால், ஆழ்ந்த நட்பு இருக்கும் இடத்தில்தான் உரிமையுடன் கூடிய ஊடலும் எழும். புரிதல் ஏற்பட்டு அதன்பின் ஏற்படும் கூடல் மேலும் நெருக்கத்தை அதிகரிக்கும்.



'மதுரை வீரன்' படத்தில் எம்.ஜி.ஆருடன் மோதுகிறார் சின்னப்பா தேவர்.

அப்படி, தேவருக்கும் எம்.ஜி.ஆருக்கும் ஏற்பட்ட நெருக்கம் கடைசிவரை பிரிக்க முடியாததாக இருந்தது. அதற்கு பின் எம்.ஜி.ஆரை வைத்து 'தாய் சொல்லை தட்டாதே', 'தாயைக் காத்த தனயன்', 'தர்மம் தலைகாக்கும்' என்று பல வெற்றிப் படங்களை தேவர் எடுத்தார்.


1967ம் ஆண்டு ஜனவரி 12ம் தேதி தமிழக சட்டப் பேரவைத் தேர்தலுக்கு முன் நடிகர் எம்.ஆர்.ராதாவால் எம்.ஜி.ஆர். சுடப்பட்டார். துப்பாக்கித் தோட்டா தொண்டையை துளைத்துச் சென்றது. மறுபிறப்பெடுத்து, மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தபோது அவரது திரையுலக வாழ்வே முடிந்தது என்று கூறினர். எம்.ஜி.ஆருக்கு மீண்டும் பேச்சுத் திறன் வருமா? என்று நிச்சய மில்லாத நிலை. எம்.ஜி.ஆரை மருத்துவமனை யில் சந்தித்து தான் அடுத்து எடுக்கப் போகும் 'விவசாயி' படத்துக்கு அட்வான்ஸ் தொகையை எம்.ஜி.ஆரின் கையில் தேவர் கொடுக்கும் அளவுக்கு இருவரின் நட்பு பரஸ்பர நம்பிக்கையுடனும் வலிமையாகவும் இருந்தது.

"எம்.ஜி.ஆர். மீண்டும் நடிப்பது நிச்சயம் இல் லாத நிலையில், அவருக்கு பணம் கொடுக்க வேண் டுமா?" என்று சிலர் கேட்டபோது, உறுதியான குரலில் தேவர் கூறினார்... 'அவர் (எம்.ஜி.ஆர்) 'தாய்க்குப் பின் தாரம்' படத்தில் நடித்த பிறகுதான் நாம் முழுசா சாப்பிட்டோம். அவரால் நடிக்க முடியாவிட்டால் செலவு கணக்கில் வைத்துக்கொள்கிறேன் போ..'

மருதமலை முருகன் கோயிலில் தனது சொந்த செலவில் மின்விளக்கு வசதி செய்த தேவர், அதை தான் மிகவும் மதிக்கும் அன்பு நண்பரான எம்.ஜி.ஆரின் கையாலேயே தொடங்கி வைக்கச் செய்தார். அப்போது எம்.ஜி.ஆர். திமுகவில் இருந்தார். இது எம்.ஜி.ஆரின் கட்சி கொள்கைக்கு முரணாயிற்றே என்று சலசலப்பு எழுந்தது. எம்.ஜி.ஆர். விளக்கம் அளித்தார். "நானோ நான் சார்ந்துள்ள தி.மு.கழகமோ கடவுள் இல்லை என்று சொல்லவில்லை. நம்மை மீறிய சக்தி இருப்பதை நம்புகிறேன். தேவர் என் மீது கொண்டுள்ள அன்புக்காகவும் நட்புக்காகவும் விழாவில் கலந்து கொண்டேன்" என்று கூறினார். சர்ச்சைகள் ஓய்ந்தன.

தேவர் மறைந்த போது எம்.ஜி.ஆர். தமிழகத்தின் முதல் அமைச்சர். கோவை சென்று தனது நண்பரின் இறுதி ஊர்வலத் தில் கலந்து கொண்டு நடந்தே சென்றார். இருவருக் கும் இடையிலான நட்பு, நங்கூரம் பாய்ச்சிய கப்பலாய் உறுதியாக இருந்ததற்கு மட்டுமல்ல; நட்புக்கு எம்.ஜி.ஆர் கொடுத்த மரியாதைக்கும் சாட்சி அது.

எம்.ஜி.ஆரை வைத்து அதிக படங்களை தயாரித்தவர் என்ற பெருமையைப் பெற்றவர் சின்னப்பா தேவர். இருவர் கூட்டணியில் 'தாய்க்குப் பின் தாரம்' முதல் 'நல்ல நேரம்' வரை மொத்தம் 16 படங்கள் வெளியாயின. தேவர் பிலிம்ஸ் தயாரிப்பில் எம்.ஜி.ஆர் ஜெயலலிதா நடித்த படம் 'முகராசி'. பல படங்களின் படப் பிடிப்பு, அரசியல் என்று பரபரப்பாக இருந்த எம்.ஜி.ஆரை வைத்து 12 நாட்களில் எடுக்கப்பட்டு 100 நாள் ஓடிய வெற்றி படம் என்ற சாதனை படைத்தது 'முகராசி'. தொடரும்...



சின்னப்பா தேவர் இறுதி ஊர்வலத்தில் முதல்வர் எம்.ஜி.ஆர். நடந்து செல்கிறார்.

# டூரிங் டாக்கீஸ்




## யோகாவிற்கு 1.5 கோடி வாங்கும் பிபாசா.

யோகா நிகழ்ச்சியில் பங்கேற்க நடிகை பிபாசா பாசு ரூ.1.5 கோடி வாங்கியதற்கு எதிர்ப்பு கிளம்பி இருக்கிறது. பிரபல இந்தி நடிகை பிபாசா பாசு. இவர் தமிழில் விஜய்யுடன் சச்சின் படத்தில் நடித்துள்ளார். அரைகுறை ஆடையில் கவர்ச்சி வேடங்களில் நடிப்பதாக சர்ச்சைகளிலும் சிக்கி உள்ளார். சமீபத்தில் யோகா தினத்தையொட்டி கர்நாடக அரசு சார்பில் பெங்களூரில் நடந்த யோகா நிகழ்ச்சிக்கு பிபாசா பாசு அழைக்கப்பட்டு இருந்தார். பிபாசா பாசு யோகா பயிற்சி பெற்றவர். தினமும் யோகா மற்றும் தியானம் செய்து உடம்பை கட்டுக்கோப்பாக வைத்திருக்கிறார். யோகா நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக பிபாசா பாசுக்கு ரூ.1.5 கோடி கொடுக்கப்பட்டதாக எதிர்ப்பு கிளம்பியுள்ளது. அத்துடன் பிபாசா பாசு பெங்களூரு வந்து செல்வதற்கான விமான பயணச்செலவை கர்நாடக அரசே ஏற்றுள்ளது. அவர் ஆடம்பர ஓட்டலில் தங்குவதற்கும் பெரிய செலவு செய்துள்ளனர். யோகா நிகழ்ச்சி சமூக நலன் சார்ந்தது. அதற்காக ஒரு நடிகைக்கு பெரிய தொகை கொடுத்து வரவழைத்து அரசு பணத்தை விரயம் செய்வதா? என்று கர்நாடக அரசுக்கு பல்வேறு அமைப்புகள் கண்டனம் தெரிவித்துள்ளன. பிபாசா பாசை விமர்சித்தும் சமூக வலைத்தளங்களில் கருத்துகள் பதிவு செய்யப்படுகின்றன.

## பேயான த்ரிஷா

அரண்மனை 2 படத்திற்கு முன்பு வரை த்ரிஷா மரங்களைச் சுற்றி டூயட் பாடி மகிழ்ச்சியாக இருந்தார். வெளிநாடு சென்றால் இன்னும் மகிழ்ச்சி. விதவிதமான ஆடைகளில் அழகழகான லொகேஷன்களில் அபிநயம் பிடித்தால் போதும். அரண்மனை 2 க்குப் பிறகு எல்லாமே மாறிப் போனது. அந்தப் படத்தில் ரோப்பில் கட்டி த்ரிஷாவை அந்தரத்தில் தொங்கவிட்டார்கள். அடுத்து நடித்த 'நாயகி' படத்திலும் அந்தரத்தில்தான் பாதி நாளும். ராமோஜிராவ் பிலிம் சிட்டியில் கிட்டத்தட்ட பத்து தினங்களில் கயிற்றில் கட்டி தொங்கவிட்டு படமாக்கினார்களாம். இப்போது மோகினி படத்துக்காக லண்டன் சென்றிருக்கிறார். இங்கும் உயரமான கட்டிடத்தில்தான் த்ரிஷாவின் கதாபாத்திரம் உலவுகிறதாம். பேயாக நடிப்பது சும்மாவா.



## மூன்று கெட்டப்பில் சிம்பு

சிம்பு தற்போது நடித்து வரும் 'அன்பானவன் அசராதவன் அடங்காதவன்' படத்துக்காக மூன்று வெவ்வேறு கெட்டப்புகளில் நடிக்கப் போவதாக செய்திகள் வெளிவந்தது. இந்த படத்தில் அவருக்கு மேக்கப் போடுவதற்காக ஹாலிவுட் மேக்கப் கலைஞர் சீன் பூட் பணியாற்றி வருகிறார். இந்நிலையில், சிம்பு மூன்று கெட்டப்புகளும் எப்படி இருக்கும் என ரசிகர்கள் பெரிய ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். அவர்களின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யும் வகையில், சிம்பு இப்படத்தில் நடிக்கும் கெட்டப்புடன் புகைப்படம் ஒன்றை படக்குழுவினர் வெளியிட்டுள்ளனர். அடர்ந்த முடி, அடர்ந்த தாடியுடன் சிம்புவின் இந்த கெட்டப் ரசிகர்களிடையே பெரும் வரவேற்பை பெற்று வருகிறது. இப்படத்தை ஆதிக் ரவிச்சந்திரன் இயக்கி வருகிறார். இவர் ஏற்கெனவே ஜி.வி.பிரகாஷை வைத்து 'த்ரிஷா இல்லனா நயன்தாரா' படத்தை இயக்கியவர். யுவன் சங்கர் ராஜா இசையில் இப்படத்தில் மொத்தம் 9 பாடல்கள் இடம்பெற்றுள்ளன. தற்போது இப்படத்திற்கான ஒரு பாடல் முடிவடைந்துள்ளது.



## ரித்திகாவிற்கு பொருந்தும்

பி.வாசு இயக்கத்தில் கன்னடத்தில் வெற்றி பெற்ற படம், சிவலிங்கா. இதனை தமிழில் சந்திரமுகி இரண்டாம் பாகமாக ரஜினியை வைத்து எடுக்க முயன்றார் வாசு. ஆனால் கிடைத்தது லாரன்ஸ். அவர்தான் சிவலிங்காவின் தமிழ் ரீமேக்கில் நாயகனாக நடிக்கிறார். முக்கியமான வேடத்தில் வாசுவின் மகன் சக்தி. இந்தப் படத்துக்கு நாயகி தேடிக் கொண்டிருந்தனர். தற்போது இறுதிச்சுற்று ரித்திகா சிங்கை ஒப்பந்தம் செய்துள்ளனர். சிவலிங்காவில் நாயகிக்கு நாயகனுக்கு இணையான வேடம், ரித்திகா அதற்கு பொருத்தமாக இருப்பார் என்று வாசு கூறியுள்ளார். ஒரு கொலையை பின்னணியாக வைத்து எடுக்கப்பட்டது தான் சிவலிங்கா படம்.



## ஆண்டியான சிவகார்த்தியேகன்

பெண் வேடம் குறித்து பேசிய சிவகார்த்திகேயன், என்னுடைய மகளுக்கு என்னைவிட ரெமோ ஆண்டியைத்தான் பிடிக்கும், போன் செய்தால் ரெமோ ஆண்டியிடம் கொடுங்க என்றுதான் சொல்வாள் என்றார். குழந்தைக்கே அப்படியென்றால் ரசிகர்களுக்கு? ஆந்திராவில் படப்பிடிப்பு நடந்த போது சிவகார்த்திகேயனை அழகான ஆண்டியாகவே நினைத்து, ஹீரோயின் யாருங்க, பெயர் என்னங்க என்று கேட்டு தொந்தரவு செய்திருக்கிறார்கள். அவர்களிடம், அனுஷ்காவின் தங்கச்சி என்று டபாய்த்திருக்கிறார் சிவகார்த்திகேயன். விட்டா ஐஸ்வர்யாராயின் அக்கான்னு சொல்வாங்க.



## பள்ளித் தோழியாக பிரியா

கார்த்தி, கவுதம் கார்த்தி, பிரியா ஆனந்த் உள்ளிட்டோர் நடிப்பில் உருவாகி வரும் படம் "முத்துராமலிங்கம்" . இப்படத்தை ராஜதுரை என்பவர் இயக்கி வருகிறார். இளையராஜா இசையில் கமல்ஹாசன் ஒரு பாடலை பாடியுள்ளார். பஞ்சு அருணாச்சலம் இந்தப் பாடலின் வரிகளை எழுதியுள்ளார். கிட்டத்தட்ட 21 ஆண்டுகளுக்கு பிறகு இளையராஜாவும் பஞ்சு அருணாச்சலமும் இப்படத்தின் மூலம் இணைகிறார்கள் என்பது இப்படத்தின் கூடுதல் சிறப்பு. குளோபல் மீடியா நிறுவனம் பிரமாண்டமாக தயாரிக்கும் இப்படத்தில் பிரியா ஆனந்த் பள்ளி மாணவியாக நடிப்பதாக செய்திகள் வெளிவந்துள்ளது. பள்ளி சீருடை அணிந்து பிரியா ஆனந்த் மாணவிகளுடன் அமர்ந்திருப்பது போன்ற புகைப்படங்கள் தற்போது வெளியாகியுள்ளதால் இந்த தகவல் உண்மை என்றே கூறப்படுகிறது.



## சமந்தா பஞ்சரானார்

நடிகைகள் நடிப்புக்கு முக்கியத்துவம் கொடுத்தாலும், கடை திறப்பு விழா, விளம்பர படங்களில் நடிப்பது போன்ற விஷயங்களையும் செய்து வருகின்றனர்.அண்மையில் சமந்தா மதுரையில் நடைபெற்ற வீகேர் 32வது கிளை திறப்பு விழாவில் கலந்து கொண்டார். பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தாலும், சமந்தாவை காண ரசிகர்கள் கூட்டம் அலைமோதியது. கூட்ட நெரிசல் காரணமாக விழா மேடை சரிந்ததோடு, கருவிகளும் கீழே விழுந்து விட்டதாம். அதோடு சமந்தா சொகுசு கார் டயரை யாரோ விசமிகள் குத்தி கிழித்து பஞ்சராக்கி விட்டார்களாம். இறுதியில் பொலிசார் தடியடி நடத்தி கூட்டத்தை கலைத்து சமந்தாவை பாதுகாப்பாக அனுப்பியுள்ளனர்.

## எனக்கு வாய்த்த அடிமைகள்

நமக்கு வாய்த்த அடிமைகள் மிகத் திறமைசாலிகள்... எம்ஜிஆர் படத்தில் இடம்பெற்ற இந்த வசனம் தமிழக பிரசித்தம். அதனை சற்றே மாற்றி, எனக்கு வாய்த்த அடிமைகள் என்று பெயர் வைத்துள்ளனர். மகேந்திர ராஜமணி என்பவர் இயக்கத்தில் ஜெய் ஒரு படம் நடிக்கிறார். நாயகியாக நடிப்பது ப்ரணித்தா. படத்தில் ஜெய்யின் அடிமைகளாக காளி வெங்கட், கருணாகரன், நவீன் நடிக்கின்றனர். வித்தியாசமான கதைக் களத்தில் படம் தயாராகிறது. இது தவிர, ராட்சஸன், சென்னை 28 படத்தின் இரண்டாம் பாகம் என இரு படங்களில் ஜெய் நடித்து வருகிறார்.

# குழந்தைப் போராளி

நானும் சகோதரனும் தனியாக நகர வீட்டில் விடப்பட்டிருந்தோம். செவிலித் தாயார் மேரி எங்களை அன்பாகக் கவனித்துக் கொண்டிருந்தார். திடீரென அப்பாதன் மனைவியுடனும் அவரின் குழந்தைகளுடனும் வந்து சேர்ந்தார். இப்போது இன்னுமொரு ஆண்குழந்தை புதிதாக வந்திருந்தது. பாடசாலை முடிந்ததும் புதிய சகோதரனைப் பார்துக்கொள்ளும் வேலை என் தலைமேல் விழுந்தது. விளையாடவோ சண்டையிடவோ நேரமில்லாது போயிற்று. எனக்கு வந்த கோபத்தில் சிறியவனை எங்காவது தொலைத்துவிட வேண்டும் போலிருந்தது. நான் குழந்தையைப் பார்த்துக் கொள்ள முடியாததற்குச் சாட்டுகளை யோசிக்கத் தொடங்கினேன்.

ஒருநாள் குழந்தையுடன் வீட்டிற்குவெளியே உட்கார்ந்திருந்தேன் மற்றக் குழந்தைகள் விளையாடிக்கொண்டிருந்தார்கள். எனக்கு விளையாட முடியவில்லயே என்ற ஆத்திரம்! சின்னவனின் பெருவிரலைப் பிடித்துக் கிள்ளினேன். அவன் வீறிட்டு அழத் தொடங்க எனக்குப் பயம் பிடித்துக் கொண்டது. கிள்ளிய அடையாளம் தெரிந்து விடுமோ? அவனது அம்மா வெளியே வந்து பார்ப்பாரோ? மறுபக்கத்தில் அவள் வெளியே வந்து பார்த்துக் குழந்தையை வாங்கிக் கொண்டால் நான் விளையாடப் போகலாம். இரண்டும் நடக்கவில்லை. இம்முறை குண்டிப் பகுதியில் ஒருதரம் கிள்ளக் குழந்தை மீண்டும் அழத் தாயார் வந்து வாங்கிக்கொண்டார். என்னிலும் ஒருபடி அவர் மேலே போய் என்னைக் குழந்தையின் சாணத்துண்டுகளைத் துவைக்கும்படி சொல்லிவிட்டார். எல்லாக் குழந்தைகளும் என்னக் கேலி பண்ணிச் சிரித்தார்கள். இது என்னை மேலும் ஆத்திரமூட்டியது. நான் அவர்கள் எல்லோரையும் வெறுத்ததுடன் ஒரு சின்ன விடயத்திற்கும் மூர்க்கத்தோடு அவர்களுடன் அடிதடியில் இறங்கத் தொடங்கினேன்.

ஒருநாள் சாணத்துண்டுகளைத் துவைத்துக் கொண்டிருக்கும்போது காய்ந்த மலம் கருகப்பொரித்த முட்டைத்துகள்கள் போல எனக்குப் பட்டது. அதில் சிறிதளவு எடுத்துச் சென்று உப்புத்தூவி எனது சகோதரர்கள் இம்மனுவேலுக்கும் ரேய்க்கும் கொடுத்தேன். அவர்கள் இன்னும் வேண்டுமெனக் கேட்க எனது சிரிப்பை அடக்க முடியாது தொடர்ந்து சிரித்துக்கொண்டே நாளைவரைக் காத்திருக்கவேண்டுமெனக் கூறினேன்.

எல்லவற்றிற்கும் மேலாக எனது சகோதரிகள் தங்கள் பாடசாலை விடுதிகளிலிருந்து திரும்பி வந்து எனது வேலையைப் பொறுப்பெடுத்துக்கொள்ள வேண்டுமென்பது எனது ஆசை. அதற்கு இன்னும் சில வாரங்கள் நான் பொறுத்திருக்க வேண்டியிருந்தது.

அப்பாவின் மனைவி தான் சுகயீனமாக இருக்கிறாரெனப் பாசாங்கு செய்து கொண்டு கட்டிலிலேயே காலத்தைக் கழிப்பார். அல்லது அப்பாவைத் தூண்டிவிட்டு அவரது பெண்களுக்கு உதை கிடைக்கும்படி செய்வாள். அனேற்றும் கிறேசும் நல்ல நண்பிகளாகவும் எல்லா நேரமும் ஒன்றாகவே இருந்ததற்கும் இது கூடக் காரணமாயிருக்கலாம். ஒரு சனிக்கிழமை காலையில் அவர்கள் இருவரும் காணாமற் போனார்கள். காத்திருந்துவிட்டு அப்பாவும் அவர்களைத் தேடிப் போனார். அவர்கள் திரும்பி வரவேயில்லை. இப்போதாவது அப்பாவின் கண்கள் திறந்துகொள்ள வேண்டுமென நான் மனதார விரும்பினேன். அவரின் மனைவியின் உண்மையான சொரூபத்தை அவர் கண்டறிய இதுவே பொருத்தமான நேரமாக எனக்குப்பட்டது.

எனது சிற்றன்னையின் குழந்தைகள் பாடசாலை செல்லத் தொடங்கினர். ஒவ்வொருவரும் இரண்டு சோடிச் சப்பாத்துக்களை வைத்திருந்தனர். என்னிடமோ நல்ல உடை ஒன்று கூட இல்லை. நான் சிற்றன்னையிடம் ஒரு உடுப்பு வாங்கித்தரும்படி கேட்க அவரென்னை அப்பாவிடம் அனுப்பினார். ஒரு பின்னேரத்தில் அப்பா வரவேற்பறையில் இருந்து கொண்டு சுங்கான் புகைத்துக்கொண்டிருந்தார். திடீரென அவரின் முகத்தில் புன்னகை தொற்றியது. நான் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி எனது விருப்பத்தைச் சொன்னேன். சிரித்துக் கொண்டே நாளை எனக்கொரு அழகான உடை வாங்குவது பற்றி யோசிப்பதாகச் சொன்னார். இரவு முழுவதும் என்னால் உறங்கமுடியவில்லை. அடுத்த நாள் பகலும் விரைவில் கழிவதாக இல்லை. மாலை, அப்பா வருவது தெரிந்ததும் அவரின் முன் போய் நின்றேன். ஒரு சிறிய பொதியை அவர் என்னிடம் தந்தார். நான் அவர் என்னை அந்தப் பொதியைப் பிரிக்கச் சொல்லும் வரை




மரியாதையாகக் காத்திருந்தேன். பொதியைச் சுற்றியிருந்த காகிதத்தைக் கிழிக்க ஒரு கறுத்த உடை வெள்ளைக் கோடுகளுடன் வெளியே வந்தது. கறுப்பில் வெள்ளைக் கோடுகள் பளிச்சென்று தெரிந்ததுடன் அதன் வடிவமைப்புமார்புப் பக்கத்திதும் முதுகுப் பக்கத்திதும் மிகத் தாழ்வாக இருந்தது. ஏமாற்றம் எனது முகத்தில் எழுதி ஒட்டப்பட்டது. எடுத்ததெற்கெல்லாம் அடிக்கும் அப்பா சிறிது ஓய்ந்துள்ளார். பழையதை மீண்டும் கிளறிவிடுவேனோ என்ற பயத்தில் ஒன்றும் சொல்லாது தனியாகச் சென்று அழத் தொடங்கினேன். என்னைத் தொடர்ந்து வந்த என் சகோதரி மாஹி "நீ அந்த உடையில் மிக அழகாக இருக்கின்றாய், அத்துடன் அது மிக நாகரிகமான உடை" என்றும் சொன்னாள். அந்த உடையில் நான் பாதி நிர்வாணமாகவும் பரிதாபமாகவும் இருந்தேன். ஆனால் எனது உடலை என் விருப்பத்திற்கு மாறாக மற்றவர்கள் பார்ப்பதற் கெதிரான எனது போராட்டம் தோற்றுப் போய்விட்டதென்பது இன்று எனக்குப் புரிகிறது. (தொடரும்)




சைனா கெய்ரெற்சி
தமிழில்: தேவா





திருகோணமலை மாவட்டத்தின் குச்சவெளிப் பிரதேசத்தில் புல்மோட்டை பிரதான வீதியிலுள்ள சாம்பல்தீவு, முச்சந்தி, நிலாவெளி,மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் இருந்த சோதனைச் சாவடி முகாம்கள் மூடப்பட்டு மக்கள் பாவனைக்கு விடப்பட்டுள்ளன. கடந்த 1983ஆம் ஆண்டு முதல் பாதுகாப்பு படையினரால் இந்த சோதனைச் சாவடி முகாம் அமைக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது.

# நீரின்றி அமைந்த ஊர்



செல்வம்

வன்னியிலும் யாழ் தீவுப் பகுதிகளிலும் கோடை காலங்களில் குடிதண்ணீருக்கு பெரும் தட்டுப்பாடு நிலவி வருகிறது. குடிதண்ணீர் இல்லாது இந்த மக்கள் பெரும் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். இந்தப் பகுதிகளில் உள்ள கிணறுகளில் கோடை காலங்களில் தண்ணீர் வற்றிப்போய் விடுவதால் நீண்ட தூரம் என்றாலும் குடி தண்ணீர் உள்ள கிணறுகளைத் தேடி தண்ணீரை அள்ளி வருவார்கள். இது தான் இந்த மக்களின் தொடர் கதையாக இருக்கிறது.

குடிதண்ணீர் இருந்தும் குடிதண்ணீரைப் பெற முடியாத பிரதேசத்தை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா. அந்தப் பிரதேசம் தான் யாழ் அராலி வடக்குப் பிரதேசமாகும். இங்கு வசிக்கும் மக்கள் கைக்கு எட்டியும் தண்ணீர் வாய்க்கு கிடைக்கவில்லை என்று விசனம் தெரிவிக்கின்றனர். அதாவது குடிதண்ணீர் இருந்தும் குடிதண்ணீரைப் பெற முடியாது தவிக்கின்றனர். பிரதேச சபை குழாய் மூலம் இந்தப் பகுதி மக்களுக்கு குடிதண்ணீரை வழங்குகிறது. குழாய் மூலம் வழங்கப்படும் குடிதண்ணீர் மக்களுக்கு முழுமையாக கிடைப்பதில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

ஏன்ன ஏது என்று அறிவதற்காக குடிதண்ணீர் வழங்கும் அதிகாலைப் பொழுதில் இந்தப் பிரதேசத்துக்குள் இறங்கியது தீபம் குழு. பைப் பூட்டப்பட்ட இடங்களில் மக்கள் கானுடன் நிற்கிறார்கள். மடத்தடியில் உள்ள 10 ஆம் இலக்க பைப்பில் குடிதண்ணீர் குறைவாக வருகிறது இதனால் நீண்ட நேரம் காத்து நின்று குடிதண்ணீரை மக்கள் கானில் நிரப்பிச் செல்கிறார்கள். சிலர் 10 ஆம் இலக்க பைப்பை விட்டு கூடுதலாக தண்ணீர் வரும் பைப்புகள் உள்ள இடங்களுக்குச் சென்று கானில் நிரப்பிச் செல்கிறார்கள். இதற்கு என்ன காரணம் என்று பார்த்தால் பைப் லைன் நிலத்தின் ஏற்றம் இறக்கம் பார்த்து சீராக பொருத்தப்படவில்லை என்பது தெரிந்தது. இன்னொரு இடத்தில் பைப்பில் தண்ணீர் வரவேயில்லை. இதற்கும் நிலத்தின் ஏற்றம் இறக்கம் தான் காரணம்.

சில இடங்களில் பைப்பில் இருந்து வெளியேறும் தண்ணீரை எடுப்பதற்கு ஆட்கள் இல்லாது அந்தத் தண்ணீர் வீண்விரையமாக தரையில் வழிந்து ஓடுகிறது. இதற்கு என்ன காரணம் என்று பார்த்தால் பைப் உடைந்து காணப்படுகிறது. அந்தப் பைப்பை மாற்றுவதற்கு இதுவரை சம்பந்தப்பட்ட தரப்பு நடவடிக்கை எடுக்கவில்லை.

63 ஆயிரம் லீற்றர் தண்ணீரை கொள்ளளவு செய்யக் கூடிய இரு தண்ணீர் ராங்குகளில் இருந்து 61 பைப் மூலம் தண்ணீர் வழங்கப் படுகிறது. ஒரு ராங்கில் 60 ஆயிரம் லீற்றர் தண்ணீரும் மற்ற ராங்கில் 3 ஆயிரம் லீற்றர் தண்ணீரையும் கொள்ளளவு செய்ய முடியும். ஆனாலும் இந்த மக்களுக்கு தேவையான அளவு தண்ணீரை வழங்க முடியவில்லை என்று பிரதேச வட்டாரங்கள் தெரிவிக் கின்றன. வழங்கும் தண்ணீரை வீண்விரயம் செய்யாமல் வழங்கினால் தேவையான அளவு தண்ணீரை பெற முடியும் என்று மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தப்பிரதேசத்தில் 375 குடும்பங்கள் குழாய் மூலமான குடிதண்ணீரைப் பெறுகின்றனர். குடிதண்ணீரை வழங்குவதற்காக குடும்பம் ஒன்றிற்கு 30 லீற்றர் குடிதண்ணீரை வழங்கு வதற்காக 75 ரூபாய் வீதம் பிரதேச சபையால் அறவிடப்படுகிறது. இந்தப் பிரதேசத்தில் இருக்கும் இரு கோயில்களுக்கும் இரு பாடசாலைகளான அராலி வடக்கு இந்துக் கல்லூரி அராலி வடக்கு அமெரிக்கன் பாடசாலைகளுக்கும் குழாய் மூலம் தண்ணீர் வழங்கப்படுகிறது.

வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் உப அலுவலகம் அராலி வடக்கில் இருக்கின்றது. இவர்களிடம் இருந்து இந்தத் தகவலைப் பெறுவதற்காக தொடர்பு கொண்ட போது செயலாளரின் அனுமதி வேண்டும் என்று ஒருவர் தெரிவித்துள்ளார். இந்தத் தகவல் அலுவலகஇரகசியம் அல்லவெளிப்படையாக சொல்லக் கூடிய தகவலாகும் இந்தத் தகவலைக் கூட பெற வேண்டுமாயின் செயலாளரின் அனுமதி வேண்டும் என்றால் இவர்களால் இதனை விட பெரியளவிலான அபிவிருத்தி திட்டங்களை எப்படி செய்ய முடியும்.






**க.நாகதவபாலன் (அராலி வடக்கு)**



ஒரு மாதமாக இந்தப் பைப்பால தண்ணீர் வரவில்லை. பைப்புகள் இடையில் கழட்டி எடுக்கிறதால வரவில்லை. தண்ணீர் எடுக்கும் கிணற்றடியில் இருந்து தண்ணீர் எடுத்து வருகிறேன். பிரதேச சபைக்கு கடிதம் கொடுத்தேன் இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

**சிரீ (அராலி வடக்கு)**




எங்களுக்கு தண்ணீர் பத்தாது. குறைவாகத் தான் இந்தப் பைப்பால தண்ணீர் வருகுது. மேட்டு நிலம் என்ற படியால் அதற்கேற்ற மாதிரி பைப் லைன் செய்யாததால் தண்ணீர் வருவது குறைவாக இருக்கிறது. இந்தப் பிரச்சினையை பல தடவைகள் சொன்னோம். பிரதேச சபைக்கு கடிதம் கூட கொடுத்தோம் என்ன பயன். ஒருக்கால் வந்து பார்த்தவர்கள் கல்சியம் படிந்திருக்கும் என்று மட்டும் சொல்லிப் போவார்கள் அவ்வளவு தான் நடவடிக்கை இல்லை.

**சு.லெனின் (அராலி வடக்கு)**




தண்ணீர் குறைய வருவதால் தண்ணீர் எடுக்க வருகின்றவர்களுக்கு இடையில் பிரச்சினை தான் வருகிறது. நான் இந்த பைப்பில் தண்ணீர் எடுப்பது குறைவு. தண்ணீர் கூட வருகின்ற பைப் இருக்கும் இடத்துக்குச் சென்று தண்ணீர் எடுத்து வருவேன். மகளை பாடசாலை கொண்டு செல்ல வேண்டும் அதனாலை இந்த பைப்பில தண்ணீர் எடுப்பது குறைவு.

**செ.யோகராசா (அராலி வடக்கு)**



தண்ணீர் குறைய வருவதால் தண்ணீர் எடுக்க வந்து மினக்கெட வேண்டி இருக்குது. இதனால பிள்ளைகளை நேரத்துக்கு பாடசாலைக்கு கொண்டு செல்ல முடியாமல் இருக்கிறது. நேரத்துக்கு வேலைக்கு செல்ல முடியாமல் இருக்குது. குடும்பங்களில பிரச்சினை வருது.






# இயற்கை அன்னை கலங்குகிறாள்

அ.அருண்
3ஆம் வருடம்
மெய்யியல் துறை
யாழ் பல்கலைக்கழகம்.

இயற்கையோடு இணைந்து வாழ்வதில் நம் முன்னோர்கள் சூழலியல் ஒழுக்கங்களுக்கு பெரிதும் மதிப்பளித்து உள்ளனர். குறிப்பாக அறிவின் ஆற்றலும், அறிவியலின் வளர்ச்சியும்,இன்று வானுருக்கொண்டுள்ளது. சூழலுலகு அனைத்தையும் ஊடுருவி ஆராயும் அளவுக்கு மனிதம் வளர்ந்துள்ளது. இருப்பினும் கூட இயற்கையினால் விளைவிக்கப்படும் எந்தவொரு அனர்த்த நிலைகளையும் மாற்றியமைக்கவோ, அன்றித் தள்ளிப் போடவோ மனிதன் முடியாதவனாகின்றான்.

சுற்றுச் சூழலியல் என்பது இன்றைய அறிவியல் விஞ்ஞானத்தின் தனித்துறையாக வளரும் ஒரு துறை மட்டுமல்ல. இன்றைய சமூகத்திற்கு முக்கியமான அறிவூட்டல்களை வழங்கிக் கொண்டிருக்கும் ஒரு முறையிலும் கூட இதில் இயற்கை வழங்கள், சூழலியல் ஒழுக்கங்கள், உயிர்ப்பல்வகைமை, சூழலமைப்புக்கள், சூழலிற்கும் மனதிற்குமான தொடர்பு நிலைகள், என பல்வேறு ஒழுக்கங்கள் ஆராயப்படுகிறது. மொத்தத்தில் சமூகத்திற்கும் இயற்கைக்குமான உறவு நிலையை ஆராயும் தத்துவம்' எனலாம். இக்கட்டுரையினால் நாம் ஒவ்வொருவரும் இயற்கைக்கு எவ்வாறான இழிவுபடுத்தல்களை மேற்கொண்டு வருகின்றோம். என்றும், அதன் விளைவாக ஒட்டுமொத்த உயிரினங்களே அழிவின் விழிம்பை நோக்கி நகர்ந்த வண்ணம் உள்ளது என்பதையும் கண்டு கொள்ளலாம்.

இயற்கையும், சூழலும் ஒன்றுடன் ஒன்று இடையறாத தொடர்பை உடையது. இத் தொடர்பை சீர்மையாகப் பேணுவதே சூழலியல் ஒழுக்கமாகும். இயற்கையின் காலப்பெயர்ச்சியில் இயல்பான மாற்றங்கள் தனிமனிதன், சமூகச்சூழல் என்பவற்றை மாற்றியமைத்த வண்ணம் உள்ளது. தனிமனிதனும், ஒவ்வொரு மானிட சமூகமும், தம்மைச் சார்ந்துள்ள எல்லாவற்றோடும் உறவு வைத்தே வர்க்கை நடத்த வேண்டியுள்ளது. இவ்வாறான சூழல் சிறந்த முறைகளிலே பேணப்படும் போதே உயிர்களது அனைத்து வாழ்வும் நலம் பெற முடியும். இருப்பினும் இன்றைய சமூகச் சூழலை நோக்கினால் சமூக சீர்மை பல்வேறு வகையில் தளம்பல் நிலையாகவும,பாரிய மாற்றம் நிறைந்ததாகவும், அமைந்து காணப்படுகின்றது. இவற்றிற்கான காரணங்கள் யாதெனில் மனிதர்களான நாம் ஒவ்வொருவரும் அறிந்தோ அல்லது அறியாமலோ இயற்கைக்கு நேரடியாகவோ அன்றி மறைமுகமாகவோ செய்து கொள்கின்ற பாதகச் செயல்களே ஆகும்.

சூழலியல், சூழலியல் ஒழுக்கமானது முக்கியமான ஒன்றாகும். இச் சூழலியல் ஒழுக்கத்தில் இயற்கை வளங்களை மேம்படுத்தலும், சரியான முறையில் பேணுதலும் முக்கியமான ஒன்றாகும். இயற்கை வளங்கள் என்பன நிலம், நீர், காற்று, மலை, வான், செடி, கொடி, விலங்கினங்கள் போன்ற இதர விடயங்களைக் குறிப்பிடலாம். இயற்கை சூழலின் சீர்மைக்காக வளங்கள் மதிப்புடனான நேயத்துடன் உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டியது மனித சமூகத்தின் கடமையாகும்.இவ் வளங்களால் மட்டுமே இயற்கையை ஒரு சீரான ஓட்டத்தில் கொண்டு செல்ல முடியும். இயற்கை வளங்கள் யாவும் சிறந்த முறையில் பேணப்பட வேண்டும் என்ற பாரம்பரியமானது கிரேக்க காலம் தொட்டுக் காணப்படுகின்றது. குறிப்பாக அறிவியலினை ஆய்வு செய்கின்ற மெய்யியலில் (கீழைத்தேய, மேலைத்தேய மெய்யியலில்) இயற்கை வளங்கள் உயர்வான விடயப் பொருட்களாக அமைந்த தன்மையைக் காணலாம். ஆதி கிரேக்க மெய்யியலாளர்கள் இயற்கையின் தோற்றம் பற்றி ஆராய முற்பட்டனர். இவர்களைத் தொடர்ந்து அரிஸ்ரோட்டில் முதலானோர் இயற்கை வளங்களும் உயர்தரத்தில் நோக்கப்பட வேண்டியவை என நோக்கினார். குறிப்பாக கீழைத்தேய மெய்யியலில் பெரும்பாலான மதங்கள் இயற்கையின் மேன்மை குறித்து "இறைவனுக்கு இணையான முறையில்" வைத்து நோக்கியமை குறிப்பிட்டுக் கொள்ளலாம்.

இவை தவிர சூழலியல் ஒழுக்கத்தின் பிரதான இயல்புகளை நாம் கருத்திற் கொள்ள வேண்டும்.

**01. குறிப்பாக சூழலியல் இயற்கை வளங்களை எந்த விதத்திலும் பாதிக்காத மனிதப் பழக்கங்கள்.**

- மனிதச் செயற்பாடுகளால் இயற்கை வளங்கள் பாதிப்படையாதவகையில் பாதுகாத்தலும், முடிந்தளவில் மீள உருவாக்கக் கூடிய வளங்களை மேம்படுத்தலும்.

**02. இயற்கையுடன் ஒத்திசைவான மனித வாழ்வியல் சூழமைவுகளைக் கொண்டிருத்தல்.**

- ஒவ்வொரு தனிமனிதனும் தன்னைத் தானே உணர்தலும், இயற்கையில் தனது வகிபங்கை அறிவதோடு, இயற்கை தொடர்பாக பிரச்சனைகளை அணுகுதல்.

**03. பொது நன்மையிலமைந்த வகையில் வளங்களை பகிர்தல்.**

- தேவையான வளங்களை வினைத்திறனாகப் பாவித்தல். எதிர்கால சந்ததிக்கான வளங்களை சரியான முறையில் அவரிடத்தே சென்று சேர உதவுதல்.

**04. பல அறிவியற்துறை ஆலோசனைகளுடன் இசைந்த விளக்கங்களினைப் பின்பற்றல்.**

- மனித கடமை, சூழலியல் ஒழுக்கம் பற்றிய அரச பிரகடணங்கள், சட்ட மூலங்கள், இயற்கை பற்றிய ஆய்வுகள், முடிவுகள் என்பவற்றைப் பின்பற்றல்.

இயற்கை அனர்த்தங்கள், சமநிலைக் குழப்பங்கள், காலநிலைப்பிறழ்வுகள் ஏற்படுவதற்கான காரணங்கள்.

**மரங்களை அழித்தலும்,
பசுமைப்போர்வை நீக்கமும்.**

மரங்களானது நாம் வாழும் சூழலில் காலநிலை மாற்றங்களால் இடம்பெறும் தட்ப வெப்ப நிலைகளிலிருந்து அவற்றின் பாதகமான விளைவுகளிலிருந்தும், நம்மை பாதுகாப்பதில் ஒரு பாதுகாப்பு வேலியாக அமையும். அது மட்டுமன்றி உயிர்சூழல் உயிரற்ற சூழலையும் ஒழுங்குபடுத்துவதாக அமையும். மேலும் மாசுபடுத்தலில் இருந்து சூழலைப் பாதுகாப்பதோடு சூழல் சமநிலையையும், புறஊதாக்கதிர்களின் தாக்கங்களிலிருந்தும் எம்மைப் பாதுகாக்கின்றன. அத்தோடு ஓசோன் படலத்தின் துவாரத்தைவிரிவடையச் செய்யும் காபனீர் ஒட்சையிற்றின் செறிவைக் குறைத்து நிற்கும். இத்தகு நிலையில் இயற்கைச் சூழலின் பல்வேறு அடிப்படை சமநிலையைப் பேணும் மரங்களினை அழித்தல் பல்வேறு அனர்த்தங்கள் உருவாகப் பிரதான காரணமாகும்.

**அணுப்பரிசோதனை யுத்தம், திண்மக்கழிவுகள்
பிளாஸ்ரிக் கழிவுகள் என்பவற்றை
மண்ணில் புதைத்தல்.**

இவை புவி வளங்களை மாற்றமடையச் செய்வதுடன் பல்வேறு நோய்க்காரணிகளை வளியில் கலவுறச் செய்து விடும். மேலும் மண் அகழ்வு, கனிய எண்ணெய் அகழ்வு என்பன புவியின் திடத்தன்மையை சீர்குலைக்கும் விளைவாகும். இதனால் இயற்கையின் கட்டுப்பாடு இயற்கையிடமிருந்து கூடப் பறிக்கப்படும்.

**ஈரநிலங்களை நிரப்பி கட்டிடங்களை
அமைத்தலும், நிலத்தடி நீருடன்
கழிவுகளைச் சேர்த்தலும்.**

யாழ் குடா நாட்டை எடுத்து நோக்கினால் "பொம்மைவெளி" எனும் பிரதேசத்தில் நடைபெறும் "open dumping" ஆனது மேற்பார்வையோ,கவனிப்போ அல்லது கட்டுப்பாடோ இன்றி நடைபெறுகின்றதன் விளைவாக குறித்த பிரதேசத்தில் மேலும் மேலும் குப்பைகளைக் கொட்டும் போது மண்ணில் பக்றீரியா தொற்றானது நிலத்தடி நீரிலும் கலக்கும் அபாய நிலைக்கான சாத்தியம் காணப்படுகின்றது. அதுமட்டுமன்றி மலக்கழிவினை நிலத்தில் புதைப்பதால் குறிப்பாக யாழ் குடா நாட்டில் நிலத்தடி நீர் மலக்கழிவு சேர்வதாக பல்வேறு தரப்பட்டவர்களாலும் கவனத்திற்குக்



கொண்டுவரப்பட்ட போதும் அது தொடர்பாகதீர்வும் விழிப்புணர்வும் இன்னும் எட்டப்படாதது பெரும் மனவருத்தத்திற்கு உரியதாகும்.

இவை தவிர 2015 தை மாதம் முதல் எழுந்த ஒரு முக்கிய பிரச்சினை சுன்னாகம் அனல் மின் நிலையத்தின் மூலம் வெளியேற்றப்பட்ட கழிவு எண்ணெயானது நிலத்தடி நீரில் கலக்கப்பட்ட அதே வேளை குறித்த கழிவு எண்ணெயின் பரப்பானது யாழ்குடா நாட்டில் பல்வேறு பிரதேசத்து நிலத்தடி நீர் நிலைகளுக்கு அச்சுறுத்தலாக மாறிக் கொண்டு வருகின்றது.

மேலும் முறையற்ற வகையில் அமையும் கட்டிடங்களின் விளைவால் புவியதிர்வு, பாரிய புவிநடுக்கம், என்பன ஏற்படுகின்றது. குறிப்பாக மட்டக்களப்பு, கொழும்பு போன்ற இடங்களில் மேற்கொள்கின்ற (முத்து ராஜவெல, உப்புக்கரச்சி) சதுப்பு நிலங்களை நிரவி கட்டிடங்களை செயற்பாடே பெரும் வெள்ளப்பெருக்குகளிற்கு காரணம் என அனர்த்த முகாமைத்துவத் திணைக்களம் தகவல் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேற்குறிப்பிட்ட வகையில் இயற்கையோடு மனிதன் கொண்டுள்ள முரண் நிலைகள் பாரிய அனர்த்தங்களை இலங்கையில் மட்டுமல்ல உலகநாடுகள் முழுவதற்குமான பெரும் பாதிப்பை விளைவித்து வருவதை இன்று நாம் கண்டிருக்கின்றோம். குறிப்பாக,

- 2015 நேபாளியில் இடம்பெற்ற பாரிய புவி நடுக்கம்
- சிட்னியில் அண்மையில் இடம்பெற்ற பாரிய புயல்

குறிப்பாக அந்தாட்டிக் கண்டத்தில் 1945 இலிருந்து பனியானது உருகிவருகின்றதாயினும் அண்மைக்காலங்களில் ஏற்பட்டுள்ள புவி வெப்பமடைதலினால் பனி உருகும் வீதம் அதிகரித்துள்ளது.

இவற்றைக் கருத்தில் கொண்டு அமெரிக்காவானது 2015 ஆம் ஆண்டு "climate change conference" ஐ நடத்தியது. இயற்கையின் கடும் சீற்ற நிலைக்குக் காரணம் மனிதன் இயற்கை வளங்கள் மீது பிரயோகிக்கின்ற தவறான நடைமுறைப் பாவனை முறைகள் என்பதைக் கருத்தில் கொண்டு ஒவ்வொரு நாடுகளும் இயற்கை வளங்களைப் பாதுகாக்கும் பொருட்டு பல்வேறு கூட்டத்தொடர்களை, சட்டமூலங்களை இறுக்கமான முறையில் வெளியிட்டு வருகின்றது. இலங்கையைப் பெறுத்தவரை கீழ்வரும் சட்டங்கள் இயற்கை தொடர்பாக குறிப்பிடத்தக்க சட்டங்களாகும்.

- தேசிய காட்டுவளச்சட்டம் 1995
- தேசிய மண் அகழ்வுச்சட்டம் 2006
- தேசிய சூழல் கொள்ளை 2003
- தூய்மை மற்றும் பாதுகாப்புப் பிரகடணம் 2004
- National policy on elephant conservation - 2000
- National policy on wild life
- National policy on wet land - 2005

இவ்வாறாக சட்டங்கள் யாவும் மனிதர்களாகிய எமது அறிவிற்கு இயற்கையின் மதிப்பை அறிவிப்பதை மட்டும் நோக்கமாகக் கொண்டு மட்டுமன்றி இயற்கை தொடர்பான உயர் பாதுகாப்பை நாம் ஒவ்வொருவரும் பேணிப்பாதுகாக்க வேண்டும் என்பதும் ஆகும். "இயற்கை எமது வரம்" என்றும் சுகவாழ்வு வாழ மனிதன் இயற்கையை மதிக்கவேண்டும். அப்போது தான் இயற்கையின் சீர்மையும், இயற்கைக்கு எம் மீதான பற்றும் அதிகரிக்கும். இதனாலன்றி நாம் சீரான படிமுறை வாழ்வை வேறெந்த வழியாலும் பெற்று விட முடியாது.

**"இயற்கையை நாம் காப்போம் இயற்கை எம்மை காத்து நிற்கும்"**

---

# வைத்தியரிடம் கேளுங்கள்




கந்தையா சோதிதாசன்
drsothithas@gmail.com.
0776284687



**ஷி.சரண்யா (30), நல்லூர்**

**கேள்வி:** எனது குழந்தைக்கு மூன்று வயது வயிற்றுப் பொருமல் இருக்கிறது. அடிக்கடி அசீரணம் ஏற்படுகிறது. என்ன செய்யலாம்?

**பதில்:** இலகுவில் சமிபாடடையக் கூடிய உணவுகளை குழந்தைகளுக்குக் கொடுங்கள். தோடம்பழம் போன்ற பழச்சாறு கொடுக்கலாம். ஓமம் அசீரணம் போக்க சிறந்தது ஆகும். ஓமத்தை வறுத்து அவித்து தேன் விட்டுக்கொடுக்கலாம். அசீரணத்துடன் வியிற்றோட்டம் இருக்குமாயின் கபாட மாத்திரையை வைத்தியரின் ஆலோசனையுடன் கொடுக்கலாம்.

**மயில்வாகனம் (35), கோண்டாவில்**

**கேள்வி:** சீரகம் வயிற்று நோய்களுக்கு சிறந்தது என்கின்றார்கள். இதை எப்படி பாவிக்க வேண்டும்.

**பதில்:** இதைக் குடி நீராகவும், கறிக்கு போடுகின்ற மசாலாப் பொருட்களில் ஒன்றாகச் சேர்த்து பயன்படுத்துகிறார்கள். இளஞ்சூடான சீரகக் குடிநீர் இரத்த ஓட்டம் மற்றும் செரிமானக்கோளாறுகளை சரி செய்து வாதம், பித்தம், கபம், மூன்றையும் சரிப்படுத்தும். இதனால் உடலுக்கு புத்துணர்ச்சி ஏற்படுவதோடு நோய் எதிர்ப்பு சக்தியும் கிடைக்கின்றது. வயிற்றுப் பொருமல், உப்புசம், வாந்திபேதி, காலையில் தோன்றும் பித்தம், தலைச்சுற்றல் என்பவற்றிற்கு சிறந்த பானம்.

**சண்முகம் (50), கஸ்தூரியார் றோட்.**

**கேள்வி:** யாழ்ப்பாண மருத்துவத்தில் கற்பூரவள்ளிக்கு தனிச்சிறப்பு உண்டு. முன்பெல்லாம் வீடுகளில் இதை வளர்ப்பார்கள். இதன் மருத்துவக் குணங்களைக் கூற முடியுமா?


**பதில்:** கற்பூரவள்ளி ஒரு கிருமிநாசினியாகும். இதனால் இதனை வீடுகளில் வளர்ப்பார்கள். குழந்தைகளின் சளியை போக்குவதில் சிறப்பிடம் பெறுகிறது. கற்பூரவள்ளி இலையை எடுத்து சாறு பிளிந்து அரை தேக்கரண்டி அளவு தேனுடன் கொடுக்க நெஞ்சில் க்ட்டியிருக்கும் சளி வெளியேறும். கற்பூரவள்ளி, தூதுவளை, வல்லாரை இலைகளை எடுத்து 100 மில்லிலீற்றர் நீரில் அவித்து 50 மில்லிலீற்றர் ஆக்கி பனங்கற்கண்டு சேர்த்துக் கொடுக்கலாம்.

**சிவலிங்கம் (45), இருபாலை**

**கேள்வி:** நான் மேசன் வேலை செய்பவன் அடிக்கடி முதுகுப்பிடிப்பு ஏற்படுகிறது. என்ன மருந்து பாவிக்கலாம்.

**பதில்:** முதலில் உங்கள் இரத்தத்தின் குளுக்கோஸ்சின் அளவை பார்த்துக் கொள்ளுங்கள் நீரிழிவு நோய் இல்லையென்றால், மிளகு, கராம்பு, சித்தரத்தை, சுக்கு இவற்றை சமனிடை எடுத்து குடிநீர் செய்து காலை, மாலை, இரு வேளை அருந்தவும். வாதநாராணி இலைகளை விளக்கெண்ணையில் வதக்கி ஒத்தடம் கொடுக்கலாம். இவற்றுக்குக் குணமாகாமல் விட்டால் பல ஆயுள் வேத மருந்துகள் இதற்கென உண்டு. ஆயுர்வேத மருத்துவரின் உதவியுடன் உபயோகிக்கலாம்.





**துளசி (20), மீசாலை**

**கேள்வி:** எனக்கு அடிக்கடி தும்மல் ஏற்படுகின்றது. சித்த மருந்துகள் பாவிக்கலாமா?

**பதில்:** பீனிசம் அல்லது ஒவ்வாமை காரணமாக ஏற்படலாம். பீனிச தைலம் அல்லது வெற்றிலைச் சாற்றெண்ணையை தலைக்கு வைத்து வரலாம். திப்பிலிப் பொடியை தேனில் சாப்பிட்டு வாருங்கள். குளிரான உணவுகளை தவிர்க்க வேண்டும். கிரந்தி உணவுகளைத்தவிருங்கள். அல்லது துளசி, தூதுவளை, சுண்டங்கத்தரி, இவற்றின் இலைச்சாறு எடுத்துக் குடித்து வரக் குணமாகும்.

**மருதலிங்கம் (60), சாவகச்சேரி**

**கேள்வி:** எனது முழங்காலில் வீக்கத்துடன் உளைவு காணப்படுகின்றது. இரவில் காய்ச்சலும், இருக்கின்றது. வாத சுரத்திற்கு குடிக்கக் கூடிய குடிநீர் முறை ஒன்றைத் தருவீர்களா?

**பதில்:** பாவட்டை இலை, கொன்றை இலை, சிற்றமட்டி, வேலிப்பருத்தி இவற்றின் வேர் ஒரு பிடி இவற்றுடன் மிளகு, ஓமம், வசம்பு, 10 கிராம் எடுத்து அடித்து 1 லீற்றர் நீர் விட்டு 1/4 லீற்றர் ஆக காய்ச்சி 30 மில்லிலீற்றர் அளவாக மூன்று வேலை குடித்தால் வாதசுரம் நீங்கும்.

சோதிட ஆலோசகர்
சி.இராசநாயகம்
0776147392



சோதிடத்தில் வியாழனை குரு பகவான் எனச் சொல்வார்கள். "குரு பார்த்தால் கோடி நன்மை" குரு பார்த்தால் குபேரர் ஆவார். என்பது குருவின் கருணையைக் காட்டி நிற்கும்.

குணமிகு வியாழக் குரு பகவானே!
மணமுள வாழ்வை மகிழ்வுடனருள்வாய்!
பிரகஸ்பதி வியாழன் பரகுருநேசா!
கிரக தோஷமின்றி காட்சி தந்தருள்வாய்!

என குரு பகவானின் பாதங்கள் பணிந்து நெஞ்சில் இருத்திக் கொள்வோம். மண்ணின் நல்ல வண்ணம் வாழ பொன்னவன் குரு பற்றி சோதிடத்தில் குறிப்பிடுபவை பற்றி அறிந்திருப்பதும், நம் ஒவ்வொருவரினதும் கடமை என்று சொல்லலாம். சோதிடம் என்பது ஒரு கலையாக இருப்பினும் அளவிட முடியாத கடல் என்றே நாம் கருதிக் கொள்ள வேண்டும். எனவே குரு பற்றிய விளக்கத்தைப் பார்ப்போம்.

நவகோள் நல்லாட்சியில் நவக்கிரகங்கள் நய இடம்பெற்றுத் திகழ்கின்றன. இவ் வாதிகப் பீடத்தின் மூலநாயக கதிரவன் என்னும் சூரியன் தான். "ராஜா" என்னும் சிறப்பிடம் குரு பகவானுக்கே உண்டு. காரணம் ராஜாவிற்குராஜா என்பதனால் ஆகும். குருவே ஏனைய கிரகங்களையும் ஆட்டிவைக்கின்றது எனலாம். இராசி வீடுகள் பன்னிரண்டின் தனுசு, மீனம் ஆகிய இரு வீடுகள் ஆட்சி வீடாகும். குருவின் கடகம் உச்ச வீடாகும். மகரம் நீச வீடாகும். ராஜ கிரகம் என்னும் குரு பகவான் எந்த ராசியில் நின்றாலும் 5,7,9 இடங்களை பார்வை செய்கிறார். அவர் தமது பார்வை செலுத்துகின்ற ராசி வீடுகள் சிறப்புப் பெறுகின்றன. தோஷம் நீங்குகின்றது. அதாவது இருக்கும் ஸ்தான பலத்தை விடபாவ செய்யும் பலமே மிகவும் சிறப்பு என்க. மேலும் குரு தெசை புத்தி அந்தரங்கங்களைக் காட்டிலும் ஸ்தான பெலம் பார்வை பெலமே நல்ல பலன்களைத் தோற்றுவிக்கும்.

இந்த வியாழபார்வைக்கு நேர் எதிரானது சனி பார்வை. குருபகவானைக் காட்டிலும், ஸ்தானபலம் மிக்கவர் சனி ஆகும். சனி பகவான் பார்வை பொல்லாதது. எனினும் ஸ்தான பெலம் கொண்ட சனி பகவானும் பார்வை பலம் மிக்க குருபகவானும் நேருக்கு நேர் சமசப்தம பார்வையாகப் பார்ப்பது நன்மை தரும். சோதிட மொழியில் குரு பார்த்த சனி பகவான் யோகம் தருவார். பத்தில் பார்த்தால் பதவியைப் பறிப்பான் என்றும் சொல்லப்படுகின்றது. இதை விட இந்த நவ கோள்களில் தினகதி, மாதகதி, வருஷகதி எனப் பல வகைகள் உண்டு.

### உபயராசி

இராசிகள் பன்னிரண்டினை சரம், ஸ்திரம், உபயம், என்று பகுத்துக் கொண்டனர். மேடம், கடகம், துலாம், மகரம் இவை நான்கும் சரம் என்றும், இடபம், சிம்மம், விருச்சிகம், கும்பம், இவை நான்கும் ஸ்திரம் என்றும் மிதுனம்,கன்னி, தனுசு, மீனம், ஆகிய நான்கும் உபயம் என்றும் வகுத்தனர். இந்த உபயராசிகள் நான்கில் குருபகவான் தனுசு, மீனம் ஆகிய இரண்டு வீடுகளை தனதாக்கிக் கொண்டனர். இந்த இரண்டு வீடுகளும் குருபகவானுக்கு ஆட்சி வீடாகும்.

### ஜலராசி (நீர் இராசி)

ஜல கிரகங்கள் மூன்று. அதில் குரு முக்கிய பங்கு வகிக்கின்றார். கடகம் என்கின்ற ஜலராசியில் குரு உச்சம் பெறுகின்றார். மீனம் என்கின்ற ஜல ராசியில் குரு ஆட்சி பெறுகின்றார். மகரம் என்கின்ற ஜல ராசியில் குரு பகவான் நீச்சம் அடைகின்றார். நாவாம்ச நிலையில் கடகராசியில் சஞ்சரிக்கும் போது வர்க்கோத்தம நிலை பெறுகின்றார். எனவே குருவிற்கு ஜலராசி மூன்றினதும் ஆதிபத்தியம் அதிகமாகவே உள்ளது என்பது தெளிவாகும்.

### கேந்திராதிபத்திய தோஷம்

கேந்திராதிபத்திய தோஷம் என்பது சுபக்கிரகங்களுக்கு மட்டுமே உண்டு. குரு, சுக்கிரன், புதன், வளர்பிறைச் சந்திரன் ஆகிய கிரகங்களுக்கு மட்டுமே இத்தகைய தோஷம் பலமாக ஏற்படுகின்றது. லக்கினத்திற்கு 1, 4, 7, 10 ஆகிய கேந்திரங்களில் குரு பகவான் நிற்பதால் இவ் வகை தோஷம் ஏற்படுகின்றது. ஒரு சாதகருக்கு குரு பகவான் தனது தெசாபுத்தி அந்தரங்களில் இவ் வகையான தோஷத்தை ஏற்படுத்துவார். அத்தகைய தோஷம் மிதுனம், கன்னி, தனுசு, மீனம், ஆகிய உபயராசியினருக்கு அதிகமாகக் காட்டும் என்பது சோதிட விதி ஆகும்.

இதே போன்று பாதக ஆதிபத்திய தோஷம், மாரகஆதிபத்திய தோஷம், என்பனவும் ஒரு சாதகருக்கு ஏற்படலாம். சாதாரணமாக ராசிக்கு 11 ஆம் இல்லம் பாதக ஸ்தானமாகும். ஸ்திர ராசிக்கு 9 ஆம் இல்லம் பாதக ஸ்தானமாகும். உபயராசிக்கு 7 ஆம் இல்லம் பாதக ஸ்தானமாகும்.

இந்த பாதக தோஷம் உள்ள கிரகத்தினால் மரணம் நிகழலாம். சில தெசைகளிலும் மரணம் வரலாம்.

சனி நான்காவது தெசையாயின்
செவ்வாய் ஐந்தாவது தெசையாயின்
குரு ஆறாவது தெசையாயின்
ராகு ஏழாவது தெசையாயின்
மரணம் சம்பவிக்கலாம். ஆயினும் ஒருவருக்கு கிரக பெலம் மூலம் ஆயுள் பெலம் உண்டாயின் மாரக தெசையில் மரணம் நிகழாது விடவும் சந்தர்ப்பம் உண்டு.

### யோகமும் மாரகமும்

எந்தவொரு லக்கினத்திற்கும் யோகம் தரவல்ல ஒரு யோகம் கிரகம் அமையும். அது போன்று மாரகம் தரவல்ல ஒரு கிரகம் அமையும். இந்த வகையில் எந்தெந்த லக்கினத்தார்க்கு "குரு பகவான் யோககாரர்" என்று பெயர் பெறுகிறார் என்பதை ஒவ்வொருவரும் அறிந்திருக்க வேண்டும்.

மேட இலக்கினத்திற்கு 9 ஆம் வீட்டு அதிபதியாகி யோகம் தருவார்.

மிதுன இலக்கினத்திற்கு 10 ஆம் வீட்டு அதிபதியாகி யோகம் தருவார்.

கடக இலக்கினத்திற்கு 9 ஆம் வீட்டு அதிபதியாகி யோகம் தருவார்.

மீன இலக்கினத்திற்கு 10 ஆம் வீட்டு அதிபதியாகி யோகம் தருவார்.

"குரு பகவான் மாரகர்" என்பதையும் அறிந்திருக்க வேண்டும்.

இடப இலக்கினத்திற்கு 8 ஆம் வீட்டு அதிபதியாகி மாரகர் தருவார்.

மிதுன இலக்கினத்திற்கு 7 ஆம் வீட்டு அதிபதியாகி மாரகர் தருவார்.

சிம்ம இலக்கினத்திற்கு 8 ஆம் வீட்டு அதிபதியாகி மாரகர் தருவார்.

கன்னி இலக்கினத்திற்கு 7 ஆம் வீட்டு அதிபதியாகி மாரகர் தருவார்.

இவற்றுடன் கேந்திராதிபத்திய தோஷம், பாதகாதிபத்திய தோஷம், மாரகாதிபத்திய தோஷம், என்பவற்றையும் விளங்கிக் கொண்டு மாரகம் நிகழக்கூடிய காலத்தை அறிய முற்படலாம். எல்லா தோஷங்களும் நீங்குவதற்கு குரு பகவானது கருணை கிட்டுவதற்கு பொருத்தமான வழிபாடுகளை மேற்கொள்வது பொருத்தமானது.

### குரு பகவானின்




### போதகர், காரகர், பாசகர், வேதகர், நிலை

ஒவ்வொரு கிரகமும் நின்ற ஸ்தான பலன்களை ஒட்டி போதகர், காரகர், பாசகர், வேதகர், என்ற அமைப்புக்கள் உண்டாகின்றன. இவற்றில் வேதகர் அமைப்பு தீய பலனைத் தரக்கூடியதாகும்.

***01. போதகர்:*** குரு பகவானின் தெசாபுத்தி அந்தரங்களில் நிறைய நற்பலன்களைத் தரக்கூடிய அமைப்பாகும். புதன் நின்ற ஸ்தானத்திற்கு 4 ஆம் வீட்டில் நிற்கும் குரு பகவான் போதகர் ஆகின்றார்.

***02. காரகர்:*** குரு பகவானின் தெசாபுத்தி அந்தர காலங்களில் நிறைய அனைத்து யோக பலன்களையும் நிதானமாக அளிக்கும் சூரியனுக்கு 9 இல் குரு காரகர் ஆகின்றார். சனிக்கு 9 இல் குரு காரகர் ஆகின்றார்.

***03. பாசகர்:*** குரு பகவானின் தெசாபுத்தி அந்தரங்களின் விளைவாக நல்ல பலன்களைத் தரக்கூடிய அமைப்பாகும். ஆயினும் பாசகர் என்ற அமைப்பு குரு பகவானுக்கு இல்லை.

***04. வேதகர்:*** குரு பகவானின் தெசாபுத்தி அந்தரங்களில் நல்ல பலன்களைத் தடுத்து நிறுத்தும் அமைப்பாகும்.

புதன் தெசையில் குரு பகவான் நின்ற வீட்டிற்கு 6 ஆம் ஸ்தானத்தில் சனி இருப்பின் சனி பாசகர் ஆகின்றார். 5 ஆம் ஸ்தானத்தில் செவ்வாய் இருப்பின் செவ்வாய் போதகர் ஆகின்றார். 7 ஆம் ஸ்தானத்தில் சந்திரன் இருப்பின் சந்திரன் காரகர் ஆகின்றார். 12 ஆம் ஸ்தானத்தில் சூரியன் இருப்பின் சூரியன் வேதகர் ஆகின்றார்.

இந்த விபரங்களை ஆதாரமாகக் கொண்டு உங்களுடைய சாதக அமைப்பை ஆராய்ந்து கிரக பெலம் எவ்வாறு உள்ளது என்பது பற்றி ஒரு முடிவினை எட்டலாம்.

### சகடயோகம்.

குரு பகவானுக்கு 6,8,12 இல் சந்திரன் நிற்பது சகடயோக அமைப்பாகும். இது எளிதில் சுப கருமங்கள் கைகூடச் செய்யாது. ஏற்றமும், இறக்கமும் மாறி மாறி வரும்.

### இந்த வாரத்திற்குரிய நல்ல சுப நாள் நேரங்கள் வருமாறு.

*(03.07.2016 முதல் 09.07.2016 வரை)*

### வாக்கிய பஞ்சாங்கம்

வீடு கட்டுதல், குடிபுகுதல் இரண்டுக்கும் சுபநாள், நேரம் எந்தவொரு வாசல் மனைக்கும் இந்தவாரம் இல்லை.

விவாகம் இவ்வாரம் சுபநாள் நேரம் இல்லை.

பொன்னுருக்கல், விவாகப்பதிவு, நிச்சயதார்த்தம் இவற்றிற்கு 06.07.2016 புதன்கிழமை பகல் 10.56 முதல் 11.54 வரை, பகல் 01.32 முதல் 02.46 வரை.

இரண்டு சுப வேளைகளும் தரப்பட்டுள்ளன.

காது குத்துதல் 06.07.2016 புதன்கிழமை 10.56 முதல் 11.54 வரை மட்டுமே.

அன்னப் பிராசனம் (சோறு தீற்றுதல்) 06.07.2016 புதன் கிழமை பகல் 10.56 முதல் 11.54 வரை, பகல் 01.32 முதல் 02.46 வரை

இரண்டு சுப வேளைகள் தரப்பட்டுள்ளன.

வியாபாரம் புதுக்கணக்கு பதிதல் ஸ்தாபனம் திறத்தல் 06.07.2016 புதன்கிழமை பகல் 01.32 முதல் 02.46 வரை மட்டுமே.

### திருக்கணித பஞ்சாங்கம்

குடிபுகுதல் மட்டும் வடக்கு தெற்கு வாசல் மனைகள் 06.07.2016 புதன்கிழமை பகல் 10.56 முதல் 11.56 வரை உண்டு.

விவாகம் 06.07.2016 புதன்கிழமை பகல் 10.44 முதல் 11.32 வரை உண்டு.

ஏனைய கருமங்கள் யாவும் மேலே தரப்பட்டவாறு கைக்கொள்ளலாம்.

சுப கருமங்கள் செய்வதற்கு முன்னதாக நவக்கிரக அர்ச்சனை வழிபாடுகளை முதல் நாள் அல்லது அதற்கு முன்னுள்ள வேறொரு நாளில் செய்வது நலம் தரும்.

### இவ் வார சந்திராஸ்டமம்

விருச்சிக ராசி 3,4,5 ஆம் திகதிகள்.

தனுசுராசி 6,7 ஆம் திகதிகள்.

மகரராசி 8,9 ஆம் திகதிகள்.

ஏனைய இராசிகளுக்கு இவ் வாரம் சந்திராஸ்டமம் இல்லை.

இந்த சந்திராஸ்டம நாட்களில் நோய், பிணி, துன்பம், துயரம், கஷ்டம், நஷ்டம், அலைச்சல், இழப்பு, நிகழலாம் என்பது சோதிட விதி ஆகும்.

### வாரம் ஒரு தகவல்

(குரு கிரக தோஷம் குரு பகவான் பரிகார தீபம்)

குரு என்றாலே இருளை அகற்றவல்லவர் என்று பொருள். எனவே குரு பகவானுக்கு தீப பரிகார முறை மிகவும் சிறந்தது. நவக்கிரகம் அமையப்பெற்ற ஆலயங்களில் தீபம் ஏற்றி மனமுருக வழிபடுவது துன்பம் துயரம் போக்கும் என்பது நம் முன்னோர்கள் அனுபவரீதியாக கண்ட உண்மையாகும்.

வாழைத்தண்டிலிருந்து எடுக்கப்பட்ட நூலினால் தீபம் ஏற்றுவது குருபகவானுக்கு சிறந்ததாகும். இந்த தீபம் பசு நெய்யினால் ஏற்றுவது நல்லது. மேலும் வடகிழக்குப் பார்வையில் தீபத்தை ஏற்றுவது நன்மை தரும் எனவும் கொள்ள வேண்டும்.



ஒரு நாளைக்கு எவ்வளவு தூரம்நடக்கிறோம், எத்தனை அடி எடுத்துவைக்கிறோம் என்பதை நம்மால் கணக்கிட முடியாது. ஆனால், இதைக் கணக்கிடும் அப் இது. தனியாக இதற்கான கருவிகளை விலைகொடுத்து வாங்கிப் பயன்படுத்துவதைவிட எளிமையாக அண்ட்ரோய்ட் மொபைல் மூலமாகவே எவ்வளவு தூரம் நடக்கிறோம் என்பதைக் கணக்கிட இந்த 'பீடோமீட்டர்' அப் உதவும்.






வீட்டிலிருந்து கிளம்பி ரயில், பேருந்து நிலையங்களில் மோட்டார்சைக்கிளை நிறுத்திவிட்டு, இறங்குமிடத்திலிருந்து அலுவலகத்துக்கு ஆட்டோவில் செல்பவர்களுக்கு இந்த மடக்கும் பைக் தீர்வாக இருக்கும். 25 கிமீ வேகத்தில் குறுகிய தொலைவுகளைக் கடக்க பயன்படும்.










ஜீப்ரானிக்ஸ் நிறுவனம், புதிய ப்ளூடூத் இயர்ஃபோனை அறிமுகப்படுத்தியுள்ளது. ZEB-BH330 எனப் பெயரிடப்பட்டுள்ள இந்த இயர்ஃபோன் மிகவும் எடை குறைவான ப்ளூடூத் ஹெட்செட்டாக வடிவமைக்கப்பட்டுள்ளதும். இந்த ஹெட்செட்டில் சத்தத்தை குறைக்கும் தன்மை உள்ளது. வெறும் 16 கிராம் எடையில், காதில் கச்சிதமாக பொருந்தக்கூடிய வடிவமைப்பு பயன்பாட்டுக்கு எளியதாக இருக்கும். ப்ளூடூத் 4.0 வயர்லெஸ் தொழில்நுட்பம் கொண்ட இதில் உள்ளமைக்கப்பட்ட பற்றரி, 5 மணிநேரம் வரை ஓடியோ மற்றும் அழைப்புகளை கையாளக் கூடியது. ZEB-BH330 சில்லரை மற்றும் ஒன்லைன் ஸ்டோர்களில் கிடைக்கிறது. இது ஜீப்ரானிக்ஸ் நிறுவனத்திடமிருந்து 1 வருட உத்திரவாதத்துடன் கிடைக்கிறது.


நியூயோர்க் நகரை சேர்ந்த இரண்டு நண்பர்கள் இணைந்து, 'பயோ லைட் ஸ்டவ்' ஒன்றை 2013-ம் ஆண்டு கண்டுபிடித்தனர். 'ஒரு வருடத்திற்கு 4 மில்லியனுக்கும் மேற்பட்ட மக்கள், வீட்டில் எரிக்கப்படும் விறகின் புகையினால் இறக்கிறார்கள்' என்ற உலக சுகாதார நிறுவனத்தின் புள்ளிவிபரத்தினை பார்த்த பிறகு, 'இந்த மக்களுக்காக புகையில்லா அடுப்பை கண்டுபிடிக்க வேண்டும்' என ஜொனாதன் சிடர் மற்றும் அலெஸ் டிரம்ண்ட் என்ற இருவர், தங்களுடைய வேலைக்கு முழுக்குப் போட்டுவிட்டு, புதுவித எனர்ஜி ஸ்டவ்வை உருவாக்க ஆரம்பித்தார்கள். பல வீடுகளில் மின் இணைப்பு இல்லாமல் இருக்கிறார்கள் என்பதை அறிந்த அவர்கள், அடுப்பில் எரிக்கப்படும் நெருப்பின் மூலமாக மின்சாரம் பெற்று, அதன் மூலமாக செல்ஃபோன் மற்றும் டியூப் லைட்டை எரிய வைக்கும்படியான சாதனத்தையும், அந்த அடுப்புடன் இணைத்தார்கள். இரவு நேரங்களில் சமைக்கும்போது இருட்டில் சமைக்க வேண்டியதில்லை. மாறாக, டியூப் லைட்டினை பயன்படுத்தலாம். மேலும் செல்போன் மட்டுமல்லாது லப்ரொப், ரப் என அனைத்து சாதனங்களையும் இதில் சார்ஜ் செய்ய முடியும்.







மன அழுத்தத்தின் அளவை சேமிக்கும் ரிஸ்ட் பாண்ட். இதை கையில் அணிந்து கொண்டால், எந்த நேரத்தில் என்ன மன அழுத்தத்தில் இருந்தோம் என்பதை ஸ்மார்ட்போனில் பதிந்து வைக்கும். இதற்கு ஏற்ப நமது வாழ்க்கை முறையையும் மாற்றிக் கொள்ளலாம்.



குளிர்ச்சி இல்லாத பழரசங்கள் மற்றும் பானங்களை உடனடியாக குளிர்வித்து தருகிறது இந்த குடுவை. கருவியின் மேலிருந்து குளிர்விக்க வேண்டிய பானத்தை ஊற்றிவிட்டு இயக்கினால் உடனடியாக குளிர்ச்சியான பானம் கிடைத்து விடும்.





மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்திற்குட்பட்ட கொக்கட்டிச்சோலை இராமகிருஸ்ணமிசன் வித்தியாலயத்தில் சாதனையாளர் பாராட்டு விழா 30 ஆம் திகதி இடம்பெற்றது. 2015ம் ஆண்டு கல்விப் பொதுத்தராதர சாதாரணதரம், உயர்தரம், அதிகூடிய நாள் பாடசாலைக்கு சமூகமளித்த மாணவர்கள், வகுப்பு ரீதியாக முதன்நிலையை பெற்ற மாணவர்கள், 100வீதம் சித்திபெற வழிவகுத்த ஆசிரியர்கள் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.

திருமதி
ச.கார்த்திஹாயினி
வின்னீஸ் லக்கி
இந்தியன் பியூட்டி பார்லர்
திருநெல்வேலி
Joykarthiha 3014@gmail.com






# உதட்டோரம் ஒரு இரகசியம்

எந்த வித உணர்வுகளையும் வெளிப் படுத்துவதில் உதடுகளுக்கு முக்கிய பங்கு இருக்கின்றது. கண்களுக்கு அடியில் உதடுகளும் எண்ணெய் சுரப்பிகள் இல்லாததாலேயே வெப்பம் குளிர் தாங்க முடியாததாக இருக்கின்றது. சரியான பராமரிப்பு உதட்டிற்கும் வேண்டும். இல்லையெனில் உதடுகளின் மீது சுருக்கங்கள் கோடுகள் எற்படும்.

உதடுகளை சிலர் அடிக்கடி கடிப்பார்கள். இதனால் தோல் உரிந்து விடும். இதற்கு ஓட்ஸ் பௌடர் அல்லது பச்சைப் பயறு மாவுடன் சில துளி தேன் கலந்து உதட்டில் தடவலாம்.

தற்பொழுது இயற்கையிலேயே காய்கறிகளில் இருந்து எடுக்கப்படும் கொழுப்பிலிருந்து லிப்ஸ்டிக் தயாரிக்கின்றார்கள். இருந்தாலும் அடிக்கடி லிப்ஸ்டிக் பாவிப்பது நல்லதல்ல. இப்பொழுது பல நிறங்களில் வஸ்லின் வருகிறது . இதை உபயோகித்தால் உதடுகளுக்குப் பாதுகாப்பாக இருக்கும்.

ஒரு சிலருக்கு உதடுகளின் ஓரங்களில் புண் மாதிரிக் காணப்டும். விற்றமின் பி கொம்ப்ளக்ஸ் சத்து குறைபாட்டினால் இது வரும். காய்கறிகள் கீரை வகைகளை உணவில் அதிகம் சேர்க்க வேண்டும். விட்டமின் ஈ உள்ள சன்ஸ்கிரீம் லோஷனை வாய் ஓரத்தில் இருக்கும் புண்ணுக்குத் தடவலாம் .

**உதட்டின் மென்மைக்கும் நிறத்திற்கும்**


முட்டையின் வெள்ளைக் கரு 1டிஸ்பூன்
தேன் 1/2டிஸ்பூன்

கலந்து உதடுகளில் தடவி வந்தால் சிவப்பாகும். மாதுளம்பழச் சாறு அல்லது பீட்ரூட் சாற்றை தினமும் தடவி வந்தால் உதடுகள் சிவப்பாகும்.

வஸ்லீன் 1ஸ்பூன், தேன் 1/2ஸ்பூன், ஒரேஞ் பழச்சாறு சிலதுளி. இவற்றை உதடுகளில் தடவி வந்தால் உதடு பட்டுப் போல மென்மையாகும். லைட்டான வெதவெதுப்பான டீ சாயம் அரை கப்பில் ரோஜா இதழ்கள் 5 போட்டு அதில் டவலை நனைத்து ஒத்தடம் கொடுக்கலாம்.

உதடுகளின் மீது வெதுவெதுப்பான தண்ணீரையும் குளிர்ந்த நீரையும் மாறி மாறி 10 நிமிடங்களுக்கு ஒத்தடம் கொடுக்கலாம். இதை வாரம் இரண்டு மூன்று முறை செய்யலாம்.

தினமும் சிறிதளவு வஸ்லினை எடுத்து உங்கள் உதடுகளில் தடவி வந்தால் மென்மையாகவும் வெடிப்புக்கள் இல்லாமலும் இருக்கும். மனதில் ஜன்னல் கண்கள் என்றால் உதடு அதன் மேடை என்பார்கள். மெல்லிய தடித்த சொப்பு என உதடுகளின் அமைப்பு நிறம் ஆகியவற்றை பொருத்து லிப்ஸ்டிக் பூசி மேலும் உதட்டை அழகாகாக் குங்கள். ●



# ஆரோக்கியத்திற்கு பேரிச்சம்பழம்

பழங்கள் எல்லோருக்கும் நல்லது. எல்லோரும்விரும்பிஉண்பார்கள்.விட்டமின்கள் நிறைந்தவை. ஊட்டச்சத்துக்கள் நிறைந்தவை.அதுபோலவேதான்பழங்களில் ஒன்றான பேரிச்சம்பழமும். சிறியவர் முதல் பெரியவர்கள் வரை அன்றாடம் உணவு உண்டபின் ஒரு வேளையாவது 2 அல்லது 3 பேரிச்சம்பழங்களைத் தொடர்ந்து சாப்பிட்டால் புதிய இரத்தம் உற்பத்தியாகும்.

அரபுநாடுகளில் உற்பத்தியாகும் பேரிச்சம்பழங்கள் வெவ்வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. தடித்த தோலுடன் காணப்படும் பேரிச்சம் பழம் நல்ல இனிப்பாகவும் இருக்கும். பழத்துக்கு உள்ளே விதை இருக்கும். அதனை சாப்பிட கூடாது. தேனுடன் கலந்து பேரிச்சம் பழத்தை சாப்பிடால் உடம்புக்கு நல்லது . துப்பரவான இடத்தில் வைத்து ஈ பூச்சிகள் தீண்டாத வண்ணம் வைத்து பாதுகாக்கலாம் நீரில் கூடுதலான நேரம் வைத்து பேரிச்சம் பழத்தை கழுவக் கூடாது. தினமும் இரவில் பேரிச்சம் பழத்தை பாலில் வேகவைத்து சாப்பிடுங்கள். அல்லது கொய்யாப்பழம் சாப்பிட்டு பால் அருந்துங்கள். மலச்சிக்கல் உடனே தீரும் என்கிறார்கள் . மாலைக் கண் நோயால் பாதிக்கப் பட்டவர்கள் பேரீச்சம் பழத்தை தேனுடன் கலந்து ஊறவைத்து சாப்பிட்டு வந்தால்உடலுக்குத்தேவையானஎல்லாசத்துக் களும் கிடைக்கும். இதனால் கண் பார்வைக் கோளாறுகள் நீங்கும். பேரிச்சம்பழம் இரண்டை மதியம் தேனில் ஊற வைத்து மறுநாள் காலையில் உணவுக்கு முன் சாப்பிட்டு வந்தால் இதயவலி குணமாகும்.

உடலின் மேலுள்ள தோல். கண் சம்பந்தமான கோளாறுகள் வராது. இருந்தாலும் குணமாகும். எந்த வகையான தொற்று நோயும் அணுகாது. சாப்பிட்ட உணவு எளிதில் செரிமானமாகும். தாது விருத்தியும் போக சக்தி குறையுடையவர்கள் பேரிச்சம்பழத்தைத் தேனில் ஊறவைத்து நாள்தோறும் சில துண்டுகளைச் சாப்பிட்டு பால் அருந்தினால் நல்ல குணம் தெரியும். இருமல் போன்ற கோளாறுகளுக்குப் பேரிச்சம்பழத்தைப் பாலில் வேகவைத்து உண்டால் நல்ல பலனுண்டு. எல்லோரும் பயனடையலாம். கிழமைக்கு ஒருதடவை சாப்பிட்டு பாருங்கள்.

சாப்பாட்டுக்கு பின்பு எல்லோரும் பேரிச்சை பழம் சாப்பிடுங்கள் .உடல் நலத்துக்கு மிகவும் நல்லது. எல்லோருக்கும் உகந்தது. பேரிச்சம் பழத்தை வாங்கி ஒருதடவை சாப்பிட்டு பாருங்கள். சிலர் இந்த பழத்தை சாப்பிடுவதில்லை.ஏனெனில் துப்பரவாக இருக்காது நாள்ப்பட்டது வண்டுகள் வருகிறது என்று சிலர் இந்த பழத்தை சாப்பிடுவதில்லையாம். அவர்களுக்கு நான் என்ன கூறுகிறேன் என்றால் நீங்கள் பொதி செய்யப்பட்ட திகதியை பார்த்து வாங்குங்கள்.

பைக்கற்றுக்குள் அடைத்து வைக்கப்பட்ட பேரிச்சம் பழத்தை வாங்குங்கள். பேரிச்சம் பழத்தில் செய்த கேக் கூட கடைகளில் இருக்கிறது . மிகவும் ருசியானதாக இருக்கும். ●



# தானிய லட்டு

பச்சைப்பயறு, வெள்ளை காராமணி, கொள்ளு, முழு உளுந்து, கோதுமை, பொட்டுக்கடலை, வரகு, பச்சரிசி, ஆகிய தானியங்கள் ஒவ்வொன்றும் தலா 50 கிராம்.

முந்திரி பருப்பு 25 கிராம்
உலர்ந்த திராட்சை25 கிராம்
ஏலக்காய்10 எண்ணிக்கை
தேங்காய் துருவல் கால் கப்
கருப்பட்டி தேவையான அளவ
நெய் தேவையான அளவு.

**செய்முறை:**

எல்லா தானியங்களையும் தனித்தனியாக வாணலியில் வறுத்துக் கொள்ள வேண்டும். அடுப்பை நிதானமாக எரியவிட்டு வறுத்தால் தானியங்கள் கருகாது. நன்றாக வாசனை வரும் வகையில் சிவப்பாக வறுக்க வேண்டும்.

வறுத்த தானியங்களை மிக்சியில் போட்டு அரைத்து சல்லடையால் சலித்து மாவாக்கிக் கொள்ள வேண்டும்.

கருப்பட்டியை நன்றாக தூளாக்கி அரைத்து தானிய மாவுடன் சேர்த்து நன்றாக கலக்கவும்.

நெய்யில் வறுத்த முந்திரி பருப்பு மற்றும் உலர்ந்த திராட்சை ஆகியவற்றை மாவுடன் சேர்க்கவும்.

தேங்காய் துருவலையும் சிவக்க வறுத்து சேர்க்கவும்.

நெய்யை நன்றாக காயவிட்டு மாவுடன் கலந்து கொள்ளுங்கள்.

சூடு இருக்கும் போதே கையால் லட்டாக பிடித்தால் தானிய லட்டு தயார் ஆகிவிடும்.



# பெண்களை கவரும் சல்வார்கள்

பெண்களை அதிகம் கவர்ந்த உடைகளில் ஒன்றாகி விட்டது சுடிதார்கள். சுடிதாரை பஞ்சாபி அல்லது சல்வார் என்றும் கூட அழைக் கிறார்கள். எல்லோருக்கும் அழகை கொடுக் கின்றது. அடக்கமான உடைகளில் சுடிதார்களுக்கு முக்கிய பங்கு உண்டு. சில பெண்கள் சாறிகளை விட சல்வார்களை விரும்புகின்றனர்.

ஒவ்வொரு நாகரிகத்துக்கும் ஏற்ப பல நிறங்களிலும் பல வடிவங்களிலும் பல டிசைன் களிலும் சல்வார்கள் வருகின்றன. சிலர் சல்வார் தைப்பவர்கள் தேவையான துணிகளை வாங்கி தமது அளவுக்கு ஏற்ப தைத்து கொள்கிறார்கள். தையல்காரர்கள் அவர்களுக்கு விர்ம்பிய டிசைனில் தைத்து கொடுக்கிறார்கள். கல்லு வைத்தது சீக்குன்ஸ் வைத்தது மினுங்கல் போட்டது வேக் பண்ணியது என்று பல வகைகளில் சுடிதார்கள் உண்டு.

கையில் நெட் வைத்தது பொம்மல் கை வைத்தது நெட் சுடிதார் வகைகளும் உண்டு. சக்களி ரசக்களி அனாகளி பட்டியாலா என்று பல பெயர்களிலும் சுடிதார்கள் வந்த வண்ணம் உள்ளன.ஆயத்த ஆடைகளின் மோகம் மெல்ல மெல்ல குறைந்து தற்போது சுடிதார் துணிகள் எடுக்கப்பட்டு தங்களுக்கு வேண்டிய வகையில் தைத்து அணிகின்றனர் இளம் பெண்கள். மென்மைத்தன்மை கொண்டது. எளிதாக துவைத்து பயன்படுத்தலாம். அணிந்து கொள்பவருக்கு பாதுகாப்பு உணர்வைத் தருகிறது.

திருமணமான பெண்களுக்கும் வயதான பெண்களுக்கும் ஏற்றது. வீட்டில் இருக்கும்போது அணிந்து கொள்ள அலுவலகம் செல்லும்போது உடுத்திக் கொள்ள விழாக்கள் திருமணம் மற்றும் பார்ட்டிகளுக்குச் செல்லும்போது அணிந்து கொள்ள என செல்ல வேண்டிய இடத்தை பொறுத்து வகைவகையான சுடிதார்கள் வந்த வண்ணமே உள்ளன. எல்லா வயதினரும் கடைகளில் விரும்பி சுடிதார்களை வாங்கி அணிகின்றனர்.

சல்வார் என்பது குர்தாவுடன் சேர்த்து அணியக் கூடிய பேண்ட் வகையாகும். இடுப்பு பகுதியில் நாடா அல்லது லாஸ்டிக் வைக்கபட்டிருக்கும். காலுடன் ஒட்டி இறுக்கமாக இருக்கும் பாண்ட் வகைகளும் உண்டு. விரிந்த பெரிய பாண்ட் வகை களும் உண்டு. விருப்பம் போல தெரிவு செய்யலாம். இவற்றுடன் அணிந்து கொள்ளபடும் துப்பட்டா ஸ்கார்ப் வகைகளுள் ஒன்றாகும். நீளமாக இருக்கும். கழுத்து அல்லது தலையில் அணிந்து கொள்ளலாம். இதை அணிந்து கொள்பவருக்கு நல்ல ஸ்டைலைத் தரும். துப்பட்டாக்கள் தற்போது ஆடைக்கு அழகு சேர்க்கும் பொருட்களுள் ஒன்றாகக் கருதபடுகின்றன.

பட்டியாலா சல்வார்கள் பழங்காலத் தில் இருந்தே பயன்படுத்தபட்டு வந்தாலும் அணிந்து கொள்பவருக்கு சிமாட் லுக் தருவதில் சிறப்பிடம் பெறுகின்றன. பாகிஸ்தானி அல்லது பட்டானி சல்வாரை விரும்பி அணிபவர்களில் பெரும்பாலா னவர்கள் முஸ்லிம்களே. ஆண் பெண் இருபாலருமே இந்த வகையான சல்வார் களை அணிகின்றனர். இந்த சுடிதாரில் டாப் என்று அழைக்கபடும் குர்தா நீளமாக இருக்கும்.

அணிய இலகுவானதும் மனதை கவர்ந்த தாகவும் இந்த சல்வார்கள் இருக்கின்ற படியால் இளவயதினர் சல்வார்களை விரும்பி அணிகின்றனர். இப்போது வயது வந்தவர்களும் அணிகின்றனர். அவர்களுக்கும் பிடித்து இருக்கிறது.

ஒவ்வொரு வயதினருக்கும் ஏற்ப சல்வார்களும் உண்டு. ஒவ்வொரு தரத்துக்கும் ஏற்ப விலைகளும் உண்டு. நமக்கு ஏற்ற விலைகளில் சல்வார்களை வாங்கி அணியலாம். தெற்காசிய பெண்கள் அதிகம் விரும்பி அணியும் உடைகளில் ஒன்றாக இருக்கிறது. இந்த சல்வார்கள்.அதற்கு காரணம் வீட்டில் இருக்கும்போதும் வெளியிடங்களுக்குச் செல்லும்போதும் சுடிதார்கள் பாதுகாப்பான உடையாக இருப்பதாக பெண்கள் கருதுகின்றனர்.





# மன அழுத்ததிற்கு நாமே காரணம்

இன்றைய இயந்திர வாழ்வில் நிம்மதி இல்லை சந்தோசம் இல்லை தூக்கம் இல்லை இப்படி நீண்டுகொண்டே போகிறது. ஒரு மனிதனுக்கு என்னதான் அதிக வேலை இருந்தாலும் நிம்மதியான தூக்கம் முக்கியம். உடம்புக்கு ஓய்வு தேவை. ஓய்வில்லாமல் உழைத் தாலோ அல்லது நித்திரை வராமல் தவித்தாலோ உங்களுக்கு பலவிதமான பிரச்சனைகள் வந்து விட ஆரம்பித்து விடும்.

மன அழுத்தத்தால் பலரும் தூக்கம் வராமல் தவிக்கிறார்கள். இதில் ஆண்களும் சரி பெண் களும் சரி மன அழுத்தத்தால் இருவரும் பாதிப் புக்கு உள்ளாகிறார்கள். நிம்மதியான உறக்கத்துக்கு மன அழுத்தத்தை குறைத்தல் நல்லது.

நாம் மன அழுத்தத்தை குறைக்க என்ன செய்யலாம் என்று சிந்தித்து பார்க்க வேண்டும். கொஞ்ச நேரம் சிரமம் பாராமல் உடல் பயிற்சி செய்யுங்கள். உடம்பும் தென்பாகும். களைப்பும் நீங்கும். அப்போது உடம்பு அசதியாகும். பின்பு போய் உறங்க செல்லுங்கள். நித்திரை வரும்.

ஒரு சிந்தனை குறிப்புகள் வாழ்க்கை தத்து வங்கள் நிறைந்த புத்தகங்களை எடுத்து வாசி யுங்கள். அதன் பின்பு நித்திரைக்கு செல்லுங்கள். மனதை அமைதிப்படுத்துங்கள். அதிகமாக யோசிக்காதீர்கள்.

மனதை ஒருநிலைப்படுத்துங்கள். தியானம் செய்யுங்கள் யோக பயிற்சி செய்யுங்கள். நித்தி ரைக்குசெல்லுங்கள். மனம் அமைதியாகஇருக்கும் போது எமக்கு தூக்கம் உடனே வந்துவிடும்.

நித்திரைக்கு செல்லும் முன் ஒருகப் பால் அருந்தி விட்டு நித்திரைக்கு செல்லுங்கள். சத்தான உணவுகளை உண்ணுங்கள். இரவில் தினம் ஒரு அப்பிள் சாப்பிடுங்கள் . இரவில் அளவுக்கு அதிகமான உணவுகளை உண்ணாமல் சமிபாடு அடையக் கூடிய இலேசான உணவுகளை உண்ணுங்கள் .

உங்களுக்கு பிடித்த மெலடியான இசையுடன் கூடிய பாடல்களை கேட்டுக் கொண்டு நித்திரை செய்யுங்கள். தூக்கம் உங்கள் கண்களை வருடும். மனதும் தெம்பாக இருக்கும். இவை எல்லாம் நாம் மன அழுத்தத்தை குறைக்கும் வழி முறைகள்.

மன அழுத்தத்தை குறைக்கும் வழிகள் நம்மிடமே உண்டு. இதுக்கு எல்லாம் வைத்தியரை நாடி மருந்து குடித்து தான் ஆக வேண்டும் என்ற அவசியம் இல்லை. சில வழிமுறைகளை நாம் பின்பற்றி பார்க்கலாம். அது சரிவரவில்லை என்றால் தகுந்த வைத்தியரை நாடலாம்.

எல்லோரும் நிம்மதியுடனும் மன அழுத்தத்தில் இருந்து விடுபட்டு சந்தோசமாக வாழ வேண்டும் என்பதே எனது கருத்தும்.



# யாழ்ப்பாண குடாநாட்டில் காலநிலை மாற்ற பாதிப்புக்களும் தணிப்பு நடவடிக்கைகளும்

## (Climate Change Impacts and Mitigation Measures in the Jaffna District)

(சென்றவார தொடர்ச்சி)

நா.பிரதீபராஜா
(முதுநிலை விரிவுரையாளர்,
புவியியற்றுறை,
யாழ். பல்கலைக்கழகம்

### ஜனவரி ஏப்ரல் வரையான வெப்பநிலை

1960 - 1990 வரையான ஜனவரி மாதத்தில் சராசரி வெப்பநிலை 25.5°C யாகக் காணப்படுகின்றது. எனினும் 1990 களிலிருந்து 2008 வரை இவற்றில் பெரிய வேறுபாடு காணப்படாமல் சில காலங்களில் குறைந்தும் கூடியும் காணப்படுகின்றது. எனினும் 25 26°C என்ற அளவிலேயே உள்ளது. பெப்ரவரி மாதத்திலும் 1990 - 2008ஆம் ஆண்டுவரை சராசரியாக 26.5°C ஆகக் காணப்பட மார்ச் மாதத்தில் 1960 - 2015 வரையான காலப்பகுதியில் 28.7°C ஆகவே சராசரி வெப்ப நிலை காணப்படுகின்றது.

எனினும் 1972 - 1981 மற்றும் 2008 மார்ச் மாதங்களில் நடுப்பகுதியில் இருந்து ஏப்ரல் மாதத்தின் தொடக்கம் வரை மிகவும் குறைவான வெப்பநிலையே அவதானிக்கப் பட்டுள்ளது. எனெனில் இக்காலப்பகுதியில் அயன இடை ஒருங்கல் வலயத்தின் அசைவு காரணமாக அதிகமழைவீழ்ச்சியும்தாழமுக்கச் செயற்பாட்டினால் யாழ்.குடாநாட்டு வான்பரப்பில் திரண்முகில் (Cumulus clouds- Cu ) களின் செறிவு அதிகமாகக் காணப்பட்டமையுமே காரணம் எனலாம். ஏப்ரல் மாதத்தினைப் பொறுத்தவரையிலும் பெரிதாக வெப்பநிலையில் வேறுபாடுகள் காணப்படவில்லை. 2930°Cவரையிலேயே வெப்ப வேறுபாடுகள் காணப்படுகின்றன.

மேற்கூறிய மாதங்களில் வெப்பநிலையில் பெரியளவான வேறுபாடுகள் காணப்படா மைக்கு ஜனவரி, பெப்ரவரி ஆகிய இரண்டு மாதங்களும் யாழ்ப்பாணக் குடா நாட்டுக்கு மழைவீழ்ச்சியைத் தருகின்ற வடகீழ்ப் பெயர்ச்சிக் காற்றின் செல்வாக்கு உட்பட்டன வாகக் காணப்படுகின்றமையால் வெப்பநிலை குறைவாகவே உள்ளது. இதற்கு அக்காலத்தில் இப்பகுதி வானிலையில் திரண் மழை முகில் களும், தாழமுக்கமும் உயர்வாக்க காணப் படுகின்றமையும் காரணமாகக் கூறலாம்.


### மே ஓகஸ்ட் வரையான வெப்பநிலை

அடுத்து மே தொடக்க ஓகஸ்ட் வரையான காலம் யாழ்ப்பாணக் குடாநாட்டின் வெப்பநிலையில் கவனிக்கப்பட வேண்டிய காலமாகும். ஏனெனில் 1960 ஆம் ஆண்டி லிருந்து 2007 ஆம் ஆண்டு வரையான காலத்தில் கிடைக்கப்பெறும்வெப்பநிலையின் அளவு அதிகரித்துக் கொண்டு வருவதை அவதானிக்கலாம். 1960 இலிருந்து 1990 வரை மே மாதச் சராசரி வெப்பநிலை 29.50°C ஆகக் காணப்பட்டது. ஆனால் 1999 இல் 31.30°C ஆகவும் 2001 ஆம் ஆண்டு 31°C 0 ஆகவும் 2000 ஆம்ஆண்டு தொடக்கம் 2008ஆம் ஆண்டுவரையான ஆண்டுகளில் மே மாதத்தில் சராசரி 30.3°C ஆகவும் காணப்படுகின்றது.

ஜூன் மாதத்தில் 1960 - 1990கள் வரை சராசரி வெப்பநிலை 29°C ஆகக் காணப்பட 1999 இல் 30.80 ஆகவும் 2002 இல் 30°C ஆகவும் 2006 இல் 30.2°C ஆகவும் காணப்படுகின்றது. ஜூலை மாதத்தில் 1960 - 1990 வரை 28.6°C ஆகக் காணப்பட 1999 இல் 31.3 °C ஆகவும் 2000 ஆம் ஆண்டு 29.4°C ஆகவும் 2001 இல் 29.3°C ஆகவும், 2002 இல் 29.6°C ஆகவும் 2003 இல் 30.1°C ஆகவும் 2006 இல் 29.9°C ஆகவும் காணப்படுகின்றது.

ஓகஸ்ட் மாதத்தினை நோக்கினால் 1960 - 1990கள் வரை 28.3°C சராசரியாகக் காணப்பட்டுள்ளது. ஆனால் 1999ஆம் ஆண்டு 31°C ஆகவும் 2001 28.9°C ஆகவும் 2004 இல் 29.4°C ஆகவும் 2005 இல் 29.5°C ஆகவும் 2006 இல் 29.5°C ஆகவும் உள்ளது.

மேற்கூறிய நான்கு மாதங்களும் யாழ்ப்பாணக் குடாநாட்டின் வரட்சிக்குரிய மாதங்களாகும். இலங்கையின் தெற்கு மற்றும் மேற்குப் பகுதிக்கு மழையைத் தருகின்ற தென்மேல் பருவப் பெயர்ச்சிக் காற்றின் செல்வாக்கிற்கு உட்பட்ட மாதங்களாகையால் யாழ்ப்பாணக் குடாநாட்டில் இக்காலப் பகுதியில் இயல்பாகவே அதிக வெப்பமும் வரண்ட வளிமண்டல நிலைமையுமே காணப்படுகின்றது. ஆயினும் 1990களின் பின்னர் இக்காலப்பகுதியில் வெப்பநிலை அதிகரித்துக் கொண்டு வருகின்றது. சராசரியாக மே மாதம் 0.25°C யினாலும் ஜூன் மாதம் 0.21°C யினாலும் ஜூலை மாதம் 0.28°C யினாலும் ஓகஸ்ட் மாதம் 0.3°C யினாலும் அதிகரித்துள்ளது. இந்த அதிகரிப்பினைச் சாதகமாக எடுத்துக் கொள்ள முடியாது. ஏனெனில் 01°C அதிகரிப்பிற்குச் சுமார் 5000 ஆண்டுகள் எடுத்துள்ள புவியின் வரலாற்றில் மேற்படி அதிகரிப்புக்கள் யாழ்ப்பாணத்தில் மிகவும் குறுகிய காலத்தில் நகர்ந்துள்ளது. பூகோள வெப்பமாதலின் விளைவாக பூமியின் சராசரி வெப்பநிலைகளில் ஏற்பட்டுள்ள மாற்றமும் அதனால் தோன்றிய காலநிலை மாற்றமும் இதற்குக் காரணியாகக் கருதலாம். அத்துடன் யாழ்ப்பாணக் குடாநாட்டின் மக்கள் இதனால் பல அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர். (தொடரும்)









மட்டக்களப்பு, வெல்லாவெளிப் பிரதேசத்தில் உள்ள வட்டிக்குளம் வாவியில் வெளிநாட்டுப் பறவைகளின் நடமாட்டத்தைக் காணக்கூடியதாக உள்ளது. இப்பறவைகள் வருடந்தோறும் இவ்வாறு வருகை தருவதாக தெரிவிக்கின்றனர்.

# தென்னை மைற், நவீன முறைக்கட்டுப்பாடு

## Coconut mits and its, Modern control methods.



ஜே.சத்தியேந்திரன்
தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர், கிளிநொச்சி
0775056263



தென்னை உண்ணி mite (மைற்)
-aceria gurreronis keifer
விலங்கியல் பெயர் அசேரியா குராரோனிஸ்.

**1965** ஆம் ஆண்டு அமெரிக்காவிலுள்ள மெக்சிகோவில் மயிற்றினை, keifer என்பவரினால் கண்டு பிடிக்கப்பட்டது. பிரதானமாக முதன் முதலில் தெரியவந்த காலப்பகுதி இந்தியாவில் 1997 இலும், இலங்கையில் 1998 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் கற்பிட்டி பிரதேசத்திலும், 2000ஆம் ஆண்டு கால பிற்பகுதியில் யாழ்ப்பாணத்தில் கொழும்புத்துறை, அரியாலை, பூநகரி போன்ற கரையோரப் பிரதேசங்களிலுள்ள தென்னை மரங்களின் தேங்காய்களில் இப்பீடை முதன்முதலாக தாக்கத்தினை ஏற்படுத்தியது. தற்போது, இலங்கையின் எல்லாப்பிரதேசங்களிலும் காணப்படுகின்றது.

**தென்னை மைற்றின் விலங்கியல் பாகுபாடு:**

இராச்சியம் : அனிமாலியா
Kingdom : animalia
கணம் : ஆத்திரோபோடா
Phylum : arthropoda
வகுப்பு : அரக்னிடா
Class : arachnida
உபவகுப்பு : அகாரி
Sub class : acari
வருணம் : புரோஸ்ரிக்மாற்றா
Order : prostigmata
குடும்பம் : எரியோபைடே
Family : erophyidae
சாதிப்பெயர் : அசேரியா
Genus : aceria
இனப்பெயர் : அசேரியா குரேரோனிஸ்
Species : aceria guerreronis

தேங்காயின் உற்பத்தி நிலைகளில் பின்வரும் 3 மைற் இனங்கள் இலங்கையில் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது.

01. Aceria guerreronis
02. Colomerus novahebredenis (இது செவ்விழநீர் மரத்தில் கூடிய தாக்கத்தினை ஏற்படுத்தும்)
03. Dolichotetran ychus,sp ஆகும்.

உலகில் பல்வேறு நாடுகளிலும் மேலும் கீழ்வரும் மைற் இனங்கள் காணப்படுகின்றன.

- Aceria hagleyensis
- Aceria healyi
- Aceria koreli
- Aceria kuko
- Aceria litseae

இது தேங்காய் உற்பத்தியில் பொருளாதார ரீதியில் மிகவும் பாதிப்பினை ஏற்படுத்தும் ஒரு பீடை ஆகும்.

**தென்னை மைற்றின் உயிரியல் தன்மை.**

- நுணுக்குக் காட்டியில் பார்க்கும் போது சாம்பல் கலந்த வெள்ளை நிறமாகக் காணப்படும்.
- வயிற்றுப்பகுதியும், 2 சோடிகால்களும், ஊசி முனை போன்ற வாய்ப்பகுதியும் காணப்படும்.
- நிறைவுடலிமைற் 200 250 மைக்குரோன் (micron) நீளமும், 36 52 மைக்குரோன் அகலமும் உடையது.
- வாழ்க்கை வட்டம் 7 10 நாட்களுக்குள் நிறைவுறும்.
- சாதகமான சூழ்நிலையில் மைற் ஆனது காற்றின் மூலம் பல்கிப் பெருகும் போது, தேனீக்களும் மற்றைய பூச்சிகளும் பூந்துணரில் இருக்கும் போது, இவ் மைற்றானது இந்தக் காவிகளினூடு ஒட்டிக் கொண்டு ஏனைய தென்னைகளுக்கும் பரவும்.
- பெண் மைற் ஆனது ஒரே தரத்தில் சராசரியாக 250 முட்டைகளை இடும்.

**மைற் பீடையின் தன்மை, தாக்கத்தின் அறிகுறிகள்.**

- மைற் பீடையானது மிகவும் நுண்ணிய உயிரி, கண்ணுக்குத் தெரியாது. நுணுக்குக் காட்டியில் மாத்திரம் பார்க்க முடியும்.
- இது விகாரமான புழு போன்ற உருவமைப்புக் கொண்டது.
- தென்னையில் பாளைகள் வந்து விரிந்தவுடன் குரும்பட்டிகள் உற்பத்தியாகின்ற நிலையிலிருந்து, ஏனைய எல்லா பருவ நிலைகளையும் பெரிய ஒன்றிணைந்த சமூகமாக தாக்கி தேங்காயில் கறாவல் தன்மையினை ஏற்படுத்துகின்றது.
- குரும்பையிலிருந்து தேங்காய் வரை முகிழ் பகுதிக்குள் கூட்டமாக வெள்ளை நிறமாகக்காணப்படும். இவை 3 தொடக்கம் 6 மாதங்கள் வரையான தென்னங் குரும்பட்டிகளின் மேற்தோல் இழையங்களை உண்ணுவதால், தேங்காயின் மேற்பகுதி கறாவல் தன்மையுடையதாகத் தோற்றமளிக்கின்றது. அதுமட்டுமல்லாமல் தேங்காயின் பருப்பு உள்ள பகுதியும் சிறியதாக மாற்றமடையும்.
- தொடக்க நிலைத் தாக்கத்தின் போது இளம் குரும் பட்டிகளின் முகிழ் பகுதிகளுக்குக் கீழாக வெண்மை நிறமான வடுக்கள் காணப்படும்.
- இளம் குரும்பட்டியின் 1 சதுர மி.மீற்றர் பரப்பளவில் 140 'மைற்'றுக்கள் இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.
- தொடர்ச்சியான உணவு உட்கொள்ளலால், காலப்போக்கில் இவ் வடுக்கள் விரிவடைவதுடன் இறந்த திசுக்களும் காணப்படும்.
- மைற் தாக்கத்தின் தீவிர நிலையில் தேங்காய்கள் முதிர்வடையாமலே மரத்திலிருந்து விழும்.
- அப்படி முதிர் தேங்காய்களாக உருவாகினாலும் கறாவல் தன்மையும், பருப்பு குறைந்த தன்மையும் காணப்படும். இதனால் தேங்காய், கொப்பறா உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்படுகின்றது.
- இப் பீடை காற்றிலே பரம்பலடைகின்றது. மழைக்காலங்களில் இப் பீடையின் செட்டை ஒட்டிக் கொள்வதனால் பறக்க முடியாதிருக்கும்.
- தும்புத் தொழிலுக்குப் பொச்சு மட்டைகளை உருவாக்கும்.

**பீடை முகாமைத்துவம்.**

- தென்னை மைற்றினை முற்றாகக் கட்டுப்படுத்தும் முறையினை எமது நாட்டில் மட்டுமல்லாது, வேறு எந்த நாடுகளிலும் அபிவிருத்தி செய்யப்படவில்லை. ஆனால் தற்போது உள்ள கட்டுப்பாட்டு முறையினால், பீடையினைச் சமாளித்து பாதிப்பினையும், பரம்பலையும் முடிந்த வரை குறைத்தலாகும்.

**பரம்பலைக் குறைத்தல்.**

- இப்பீடை கூடுதலாக காற்றிலும், பாதிக்கப்பட்ட உபகரணங்களினாலும், பரம்பலடைகின்றன. ஆகவே பாதிக்கப்பட்ட தேங்காய்களையும், பொச்சுமட்டைகள், கோம்பைகள், என்பனவற்றைப் பாதிக்கப்படாத இடத்துக்கு எடுத்துச் செல்வது தடை செய்யப்பட்டுள்ளது.
- தேங்காயினை பறித்து வைத்து ஒரு மாதத்திற்குப் பின்பு உயிர் மைற்றாவினைத் தவிர்த்து எடுத்துச் செல்லப்படலாம்.
- பாதிக்கப்பட்டு வீழ்ந்த முதிர்ச்சியடையாத காய்கள் சேகரிக்கப்பட்டு அதே தோட்டத்தில் ஒதுக்குப் புறமான இடத்தில் போட்டு எரிக்கலாம்.

**சேதத்தினைக் குறைத்தல்.**

தென்னைச் செய்கையாளர்கள் இப் பீடைத் தாக்கத்தின் அறிகுறிகளைக் கண்டால் உடன் சிகிச்சையினை மேற்கொள்ளவும்.

01. தொடக்க நிலையில் குறைந்தளவிலான மரங்கள் பாதிக்கப்பட்டிருந்தால் பீடைத் தாக்கத்திற்கு உள்ளான தேங்காய்களின் எல்லாக்குலைகளையும் வெட்டி அப்புறப்படுத்தி எரிக்கவும்.
02. காய்ந்த குரும்பட்டிகளை குலையிலிருந்து முற்றாக அகற்றல் வேண்டும்.

**முக்கியமான மூன்று முறைகள் மூலம் கட்டுப்படுத்தலாம்.**

01. பாதிக்கப்பட்ட தென்னை மரத்தின் தேங்காய்க் குலைகளுக்கு 30 வீதம் பாவித்த எஞ்சின் ஓயில் கலவை விசிறலாம்.

குறிப்பு: ஆனால், இந்த முறை பெரிதாக பலனளிக்கவில்லை)

02. இயற்கை நாசினிகள் விசிறும் முறைகள் (இரண்டு மாதத்திற்கு ஒரு தடவை விசிற வேண்டும்.)
03. உயிரினவியல் கட்டுப்பாட்டு முறை.

**இயற்கை நாசினி விசிறும் முறை 01**

கந்தகம் பாம் அல்லது மரக்கறி எண்ணை விசிறல்.

ஒரு லீற்றர் கலவை தயாரிக்கத் தேவையான பொருட்கள்.

01. பாம் ஓயில் 200 மில்லிலீற்றர் (ஒரு கப்)
02. நீர் 800 மில்லிலீற்றர் (4 கப்)
03. சவர்க்காரத்தூள் 12 கிராம் ( 2 மேசைக்கரண்டி)
04. கந்தகம்(சல்பர்) 5 கிராம் ஒரு மேசைக்கரண்டி (நீரில் கரையக் கூடியது)

**தயாரிக்கும் முறை:** நீரில், சவர்க்காரத்தூள், கந்தகம் என்பவற்றினை நன்றாக சேர்த்து கரைக்க வேண்டும். பின்பு, இறுதியில் பாம் ஓயிலைச் சேர்த்து ஒன்றாக்கவும். இதனை ஒரு கைத்தெளிகருவியில் விட்டு மரம் ஏறும் ஒருவரிடம் கொடுத்து வட்டிலுள்ள பூந்துணர் தொடக்கம் எல்லாப் பருவநிலைகளிலுள்ள குரும்பைகளுக்கும், தேங்காய்களுக்கும், விசிறச் செய்யவும். இப் பகுதியின் இறுதியிலுள்ள படத்தில் (நப்சக் விசிறி) knapsack sprayers மூலம் விசிறுவதனைப் பார்க்கலாம்.

**குறிப்பு:**

- இக் கலவை விசிறுவதற்கு முன்பு குலையிலுள்ள தென்னங் குரும்பட்டி முதல் எல்லா பருவநிலையிலுமுள்ள காய்ந்த குரும்பட்டிகளை அப்புறப்படுத்தவும். இது முக்கிய செயன்முறையாகும்.
- இயந்திர விசிறிகளையும் (power sprayer) பயன்படுத்தலாம்.
- இக் கலவை விசிறுவதனால் குரும்பட்டிகளுக்கு எதுவித பாதிப்பும் இல்லை.

**இயற்கை நாசினி விசிறும் முறை 02**

தேவையான பொருட்கள்
வெள்ளைப் பூடு (உள்ளி) 20 கிராம் -1/2 கப்
சவர்க்காரம் 5 கிராம் - 1/2 கப்
வேப்பெண்ணெய் 20 மில்லிலீற்றர்

முதலில் வெள்ளைப் பூட்டினை தோலுரித்து கிறைண்டர் அல்லது அம்மியில் இட்டு அரைக்கப் தண்ணீர் விட்டு நன்றாக அரைக்கவும். பின்பு அக்கரைசலினை பருத்தி துணி கொண்டு வடிக்கவும். அக்கரைசலினை வேறாக வைக்கவும். பின்பு, சவர்க்காரத்தினை பிளேட்டினால் 5 கிராம் அளவு சீவி எடுத்து, அரைக்கப் தண்ணீரில் கரைக்கவும். உள்ளிக் கரைசலினையும், சவர்க்காரக் கரைசலினையும், ஒன்றாகச் சேர்க்கவும். இதன் பின்பு 20 மி. லீற்றர் வேப்பெண்ணையினை அதனுள் இட்டு ஒரு போத்தல் நீரில் ஐதாக்கவும். இக் கலவையினை, கைத்தெளிகருவி ஒன்றினுள் விட்டு மரம் ஏறும் ஒருவரிடம் கொடுத்து தென்னங்குலையிலுள்ள எல்லா பருவநிலைக்கும் விசிறச் செய்யவும்.

கந்தகக் கலவை அல்லது உள்ளிக் கரைசலினை மரத்திலுள்ள குரும்பட்டிகளுக்கும் ஏனைய பருவ நிலைகளுக்கும் தரையிலிருந்து விசிறும் முறை.

சாதாரணமாக ஒரு லீற்றர் கலவை போதுமானது. கலவையினை விசிறுவதற்கு மரத்தில் ஏறத் தேவையில்லை. மூங்கில் தடி ஒன்றின் உதவியுடன் சுலபமாக வட்டுப் பகுதியிலுள்ள எல்லா பருவ நிலைகளுக்கும் விசிற முடியும். இப் பகுதியின் இறுதியில் படத்தில் பார்க்கவும்.

**நப்சப் தெளிகருவி (knapsack sprayes) உதவியுடன் விசிறும் முறை.**

- நப்சக் தெளிகருவியினால் விசிறும் முனைக்கும் அதன் கொள் கலனுக்கும் இடையில் உள்ள பிளாஸ்ரிக் குழாயினை நீளமாகப் பொருத்தி 40 அடிக்கு மேல் உயரமான தென்னை மரங்களுக்கும் கொள்கலனை நிலத்தில் வைத்திருந்தபடியே விசிற முடியும்.
- மூங்கில் தடியின் நீளத்தை பிளாஸ்ரிக் குழாயினைக் கட்டி தடியின் நுனியில் விசிறும் முனையினைப் பொருத்தி தென்னை மரத்தின் குலைகளுக்கு விசிற முடியும். 40 அடி உயரத்திற்கு மேற்பட்ட தென்னைகளுக்கு மரம் ஏறுபவர் ஒருவரைக் கொண்டு மரத்தில் ஏறுவித்துதான் விசிற வேண்டும்.

## விடுகதை

1. உடலோ வெள்ளை நிறம். உள்ளமோ தங்க நிறம் அது என்ன?
2. சிவப்பு தொட்டியில் மலரும் பூ சிடு சிடுத்தால் மறையும் பூ அது என்ன?
3. என் உடம்பெல்லாம் முள். ஆனால் உள்ளமோ தேன் சுவை நான் யார்?
4. மீன் பிடிக்க தெரியாது. ஆனால் வலை பின்னுவான் அவன் யார்?
5. சுற்றிக் கொண்டேயிருப்பேன். ஆனால் எனக்கு தலை வலிக்காது நான் யார்?
6. இரவு ராணி அவள். தினமும் விழித்திருப்பாள். மாதம் ஒரு முறை உறங்கிடுவாள் அவள் யார்?
7. சட்டை மேல் சட்டையாய் பல சட்டை போட்டவன். சட்டைகளை கழற்றிப் பபார்த்தால் உடம்பை மட்டும் காணோம் அவன் யார்?
8. வீட்டிற்குள் இருப்பான். உலகத்தை காட்டுவான் அவன் யார்?
9. சூரிய ஒளியில் உணவை சமைப்பேன். சுற்றுச் சூழலைப் பேணிக்காப்பேன் நான் யார்?
10. பல் துலக்க மாட்டான். ஆனால் இவன் பல் எப்பொழும் வெள்ளை இவன் யார்?

*விடைகள்:*


*1) முட்டை 2) சிரிப்பு*
*3) பலாப்பழம் 4) சிலந்தி 5) காற்றாடி*
*6) நிலா 7) வெங்காயம்*
*8) கணினி, தொலைக்காட்சி 9) மரம்*
*10) வெள்ளைப் பூண்டு*




## தெரிந்து கொள்வோம்

1. யாழ்ப்பாணத்தில் பெருமளவு காணப்படும் தனித்துவம் வாய்ந்த கனிப் பொருள் எது?
   சுண்ணாம்புக்கல்
2. நாய் வியர்வையை எவ்வங்கம் மூலம் வெளியேற்றும்?
   நாக்கு
3. உலகில் காணப்படும் மிகச்சிறிய முலையூட்டி எது?
   மூஞ்சூறு
4. மனித உடலில் காயப்படும் மிகப் பெரிய எலும்பு எது?
   தொடை எலும்பு
5. பென்சிலின் மருந்து தயாரிக்க பயன்படும் நுன்னுயிர் எது?
   பென்சிலியம்
6. மனித இதயத்தின் பெரும்பகுதி உடலின் சமச்சீர் அச்சில் எப்பக்கம் உள்ளது?
   இடது பக்கம்
7. சக்தியின் மூல உற்பத்தி தானம் எடு?
   சூரியன்
8. முட்டையை தனது உடைப்பையில் வைத்து அடைகாக்கும் ஆண் மீன் இனம்?
   கடற்குதிரை
9. மனித உடலில் காணப்படும் மிக மென்மையான பகுதி?
   பல்மிளிரி
10. கோளம் ஒன்றினது மேற்றளற்றின் பரப்பை காண்பதற்குரிய தொடர்பை கண்டுபிடித்தவர்?
    ஆக்கி மிடிஸ்

# மந்திரக் கண்ணாடி




யானைகள் சென்ற பின்னர் இருவரும் முட்புதர்களிலிருந்து வெளிவந்தனர். ராமுவின் கைகளிலும் பாலுவின் கைகளிலும் ஏராளமான முட்கள் குத்ததியதால் இருவரின் கைகளிலிருந்தும் குருதி வெளியே பாய்ந்து கொண்டிருந்தது.

இருவரும் நீரோடையில் குளிர்ந்த ஜலத்தைக் குடித்த பின் கைக்குட்டைகளையும் நீரில் நனைத்துக் கைகளில் சுற்றிக் கொண்டார்கள்.

மந்திரக் கண்ணாடிக்காக அலைந்த அலைச்சல் போதும் வீட்டுக்கு போகலாம் என்று நினைத்தான் ராமு.

இவ்வளவு தூரம் வந்த பின்பு வீட்டுக்குப் போவதா? எப்படியும் நாளை மாலைக்குள் மந்திரக் கண்ணாடியை எடுத்துவிட வேண்டும். என்று பாலு சொல்லிக்கொண்டே துப்பாக்கிக்குள் சில ரவைகளைப் போட்டான்.

நீ வேண்டுமானால் சென்று மந்திரக் கண்ணாடியை எடுத்துக் கொண்டு வா நான் இங்கேயே ஒரு இடத்தில் இருக்கின்றேன். என்று ராமு கூறிவிட்டு கையைச் சுற்றியிருந்த கைக்குட்டையைத் தொட்டுப் பார்த்தான்.

வேண்டாம் ராமு எல்லையற்ற இக்காட்டில் உன்னை இங்கே விட்டுவிட்டுச் செல்வதை நான் விரும்பவில்லை. நீ இங்கே இருந்தால் சில சமயங்களில் காட்டு மிருகங்கள் உன்னை துன்புறுத்தகூடும். ஆகவே நீ என்னுடன் வருதலே நன்று என்று பாலு ராமுவை தேற்றி அவனையும் அழைத்து கொண்டு மரங்களடர்ந்த பகுதியால் வந்து கொண்டிருந்தான்.

வானுறவோங்கி வளர்ந்த மரங்களின் மத்தியில் ராமுவும் பாலுவும் நடந்து கொண்டிருக்கையில் பல நரிகள் ஊளையிட்டன. அச் சத்ததினால்ட பாலுவும் அச்சமடைந்தார்கள்.

மந்திரக்கண்ணாடியும் வேண்டாம்.ஒன்றும் வேண்டாம் நாம் வந்த வழியாகவே சுகமாக வீடு போய்ச் சேர்ந்தால் காணும் என்று ராமு சற்றுக் கண்டிப்பான குரலில் சொன்னான். மந்திரவாதியின் குடிசை சற்று அண்மையில் தான் இருக்கும் போலத் தெரிகின்றது. அக் கண்ணாடியை எடுத்து விட்டோமானால் நாம் எடுத்த காரியங்களும் கைகூடும். அதனால் எப்படியும் இந்த மந்திரக் கண்ணாடியை எடுத்தே தீர வேண்டும். எனப் பாலு ராமுவுக்குத் தேறுதல் வார்த்தைகளை கூறினான். பாலு துப்பாக்கிளை சுடுவதற்கு கையிலே ஆயத்தமாக வைத்து கொண்டான.

எந்நேரமும் எதிர்பாராத விதத்தில் காட்டு விலங்குகள் நம்மைத் திடீரென தாக்க கூடும். மிகவும் எச்சரிக்கையாகவே இருக்க வேண்டும். என்று பாலு கூறிக் கண்டு சென்றபோது.

மரங்களுக்கு மத்தியில் கறுப்பாக ஏதோ ஒரு பெரிய உருவம் இருவருக்கும் தெரிந்தது.


இருவரும் அவ்வுருவத்தை உற்று நோக்கினார்கள். அவ்வுருவம் யானையாக இருக்ககூடுமென இருவர் மனமும் எண்ணியது.

*(தொடரும்)*



# சின்னக் குழந்தையின் சிங்கார அழகு

உருண்ட பூமி தனில் என்றும் அழகு
சின்னக் குழந்தையின் சிங்கார அழகு
கவி வடிக்கும் கவிஞனும்
கணப்பொழுதில் வியக்கும் காட்சியல்லோ
பிஞ்சு விரல்கள் மடித்து
உதடுதனில் வைத்திருக்கும் அழகு என்ன
நொடிப்பொழுதில் மலர்ந்த புன்னகையால்
நெடுநாள் துன்பமும் மறைந்ததல்லோ
மெல்ல நடைபயிலும் பாதங்களும்
சொல்ல சொல்ல மலரும் உதடுகளும்
பிஞசு கதைகள் கேட்க துடிக்கும் மனங்களும்
என்றும் என்மனம் கவரும் காட்சியல்லோ
சின்னக் கண்களை சிங்காரமாகச்சிமிட்டி
மென்மை உதடுகளை மெதுவாக அசைத்து
என் மனதை ஈர்ப்பது
சின்னக் குழந்தையின் சிங்கார அழகு





கவிசாதனா ஞானவேலாயுதம்
ஆண்டு 2 E
வவு/ இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம்

## மாணவர் மலர்

மாணவ, மாணவியரே உங்கள் ஆக்கங்கள் எதுவானாலும் தீபத்திற்கு அனுப்பி வையுங்கள். பெயர், பாடசாலை என்பவற்றை தெளிவாக குறிப்பிடுங்கள். புகைப்படங்களையும் சேர்த்து அனுப்பி வைக்கலாம்





சீனாவைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் தொடர்ச்சியாக 6 நாட்கள் ஒன்லைன் கேம் விளையாட்டில் ஈடுபட்டிருந்ததால் அவரின் பாதம் அழுக ஆரம்பித்ததுடன் மயங்கியும் வீழ்ந்துள்ளார்.

உலகிலே அதிக உடல்பருமனுள்ள பத்து வயது சிறுவன் கண்டறியப்பட்டுள்ளார். இந்தோனேசியாவை சேர்ந்த ஆர்யா பேர்மன் என்ற 10 வயது சிறுவனின் நிறை 192 கிலோகிராம். சாதாரண உடைகள் அணியமுடியாமையால் சாரத்தினை மட்டுமே உடையாக அணிந்து வருகின்றார். இந்தோனேஷியா உள்ள மேற்கு ஜாவா மாகாணத்தில் இருந்து, ஆர்யா தூரம் நடக்க முடியாமையால் படிப்பும் கைவிட்டுள்ளார்.





புத்தல கதிர்காம வீதியில் நடக்கும் அபூர்வ நிகழ்வு. அந்த பாதையால் செல்லும் பேரூந்துகளை யானைகள் மறிக்கின்றன. சாரதிகள் தம்முடன் கொண்டு செல்லும் பழங்களை கொடுத்ததும், வழியை விட்டு விலகுகின்றன. அண்மையில் பயணி ஒருவர் எடுத்த புகைப்படம்.

115 கிலோ நிறையுடனிருந்த இந்த சீனக்காரருக்கு உடம்பு பற்றிய பயம் வந்துவிட்டது. உடல்மெலிய புது ரெக்னிக்கை முயன்றுள்ளார். 30 கிலோ பாறையை தலையில் வைத்து நடந்தார். இப்பொழுது 40 கிலோ பாறையுடன் தினமும் 3 கிலோமீற்றர் நடக்கிறார். கடந்த 3 வருடத்தில் 30 கிலோ குறைந்துவிட்டாராம்.



120,0000 தீக்குச்சிகளை கொண்டு தயார் செய்யப்பட்ட கோழி உருவம்.








பிரசித்திபெற்ற கதிர்காம கந்தன் ஆலயத்தின் வருடாந்த ஆடிவேல் உற்சவத்திற்காக குமண காட்டுக்குள்ளால் செல்லும் காட்டுப்பாதை அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. காட்டுப்பாதை யாத்திரையில் அமெரிக்க பக்தர்களும் கலந்து கொண்டனர்.

இந்தியாவின் உத்தரபிரதேச மாநிலத்தில் நடந்த சம்பவம். வாங்கிய லஞ்சப்பணத்தை பிரித்துக் கொள்வதில் தகராறு ஏற்பட்டு, அடிபிடிபட்ட பொலிசார். இதை யாரோ வீடியோ எடுத்து வெளியிட அத்தனை பேருக்கும் ஆப்பாகிவிட்டது.









இப்பத்திரிகை நோர்சீ மீடியா (பிறைவேற்) லிமிற்ரட் நிறுவனத்தால்
172, இராமநாதன் வீதி, யாழ்ப்பாணத்தில் உள்ள ஈஸ்வா டிஜிற்றல் பிரஸில் அச்சிட்டு 03.07.2016 அன்று வெளியிடப்பட்டது